Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 21 புதன்கிழமை (06.08.2014) பக்கங்கள் 20 ஓசை - 309

## அடிப்படை மனித உரிமைகளுக்கு இடமளிக்கவேண்டும் இலங்கை

### வலியுறுத்துகிறது அமெரிக்கா

(கொழும்பு)

இலங்கையிலுள்ள அனைத்து இனமக்களினதும் கருத்து சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் உட்பட அடிப்படை மனித உரிமைகளுக்கு இலங்கை அரசாங்கம் இடமளிக்க வேண்டுமென அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க தூதரகத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற காணாமற்போனோர் தொடர்பான கூட்டத்திற்கு சிலரால் இடையூறு விளைவிக்கப்பட்டதாகத் தெரிவித்து, விடுக்கப்பட்ட் அறிக்கையிலேயே இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

சிவில் யுத்தத்தினால் காணாமற் போனவர்களின் குடும்பங்களை சேர்ந்தவர்கள் அவர்களின் தகவல்களை சிவில் சமூக குழுக்களுக்கும், தூதரக சமூகத்திற்கும் தெரியப்படுத்திக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இந்த குழுவினர் உள் நுழைந்துக், இடையூறு ஏற்படுத்தியதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டவாட்சியை பலப்படுத்தி, இலங்கையிலுள்ள அனைத்து பிரஜைகளினதும் கருத்துச் சுதந்

(19) ஆம் பக்கம் பார்க்க

## (உ/த) பரீட்சார்த்திகளுக்கு மேற்பார்வையாளர்கள் உதவி

### பரீட்சைகள் திணைக்களம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நேற்றையதினம் ஆரம்பமான கல்விப்பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் தோற்றும்பரீட்சார்த்திகளுக்கு மேற்பார்வையாளர்கள் உதவிபுரிவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதென பிரதி பரீட்சைகள் ஆணையாளர் எஸ்.பிரணவதாசன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பரீட்சையின் போது மோசடியில் ஈடுபடும் மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே பரீட்சை மோசடிகள் மற்றும் பரீட்சையுடன் தொடர்புடைய பிரச்சினைகள் குறித்து முறைப்பாடு செய்வதற்காக 24 மணிநேர தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சர்வதேச நிபுணர்குழு விசாரணைகளை நடத்தாது

### ஊடகபிரதானிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி

(கொழும்பு)

காணாமற்போனோர் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு ஆலோசனைகளை வழங்கவென நியமிக்கப்பட்டுள்ள மூவரடங்கிய சர்வதேச நிபுணர்குழு விசாரணைக்குழு அல்லவென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் அலரிமாளிகையில் ஊடக ஆசிரியர்கள் மற்றும் பணிப்பாளர்களுடன் நடாத்திய சந்திப்பின்போதே அவர் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

நியமிக்கப்பட்டுள்ள சர்வதேச நிபுணர்கள் குழு இறுதிக்கட்டபோர் தொடர்பாக விசாரணை எதனையும் செய்ய மாட்டாது மாறாக அவர்கள் ஆலோசனைகளை மட்டுமே வழங்குவர் அத்துடன் காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை நடாத்தும்

(19) ஆம் பக்கம் பார்க்க



## சர்ச்சைக்குரிய கட்டுரை ஜனாதிபதி வருத்தம்

### விசாரணைக்கும் உத்தரவு

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா ஆகியோரை இழிவுபடுத்தும் வகையில், பாதுகாப்பு அமைச்சின் இணையத் தளத்தில், சர்ச்சைக்குரிய கட்டுரை வெளியிடப்பட்டது குறித்து, தாம் விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்றுக் காலை ஊடக ஆசிரியர்கள் மற்றும் பணிப்பாளர்களைச் சந்தித்த போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இந்தக்கட்டுரை வெளியிடப்பட்டது குறித்து கவலை வெளியிட்ட அவர், இதுகுறித்து தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளதாகவும் தெரிவிததுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக, தமிழ்நாட்டில் எழுந்துள்ள கடும் எதிர்ப்பையடுத்து, இலங்கை தூதுவரை அழைத்து இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

### நிதி நியதிச்சட்டத்தில் திருத்தம்

## சட்டமா அதிபருடன் பேச வடக்கு மாகாண சபை மறுப்பு

(யாழ்ப்பாணம்)

நிதி நியதிச்சட்டங்கள் தொடர்பாக மாகாணசபைகளுக்கிடையே பாகுபாடு இருந்தால் அதனை சட்டமா அதிபரின் கவனத்திற்கு கொண்டு சென்று தீர்வினை எட்டுவதற்கு வடக்கு மாகாணசபை மறுப்பு தெரிவித்துள்ளது.

வடமாகாண சபையின் மாதாந்தக் கூட்டத் தொடர் (13 ஆவது) கைதடியில் அமைந்துள்ள வடமாகாண சபைக் கட்டடத் தொகுதியில் நேற்றைய தினம் இடம்பெற்றது.

இதன்போது, . வடமாகாண சபையால் உருவாக்கப்பட்ட நியதிச் சட்டங்கள் (நிதி நியதிச் சட்டம், முதலமைச்சர் நியதிச்சட்டம், மற்றும் முத்திரை வரி கைமாற்றல் நியதிச்சட்டம்) தொடர்பிலான விவாதங்கள் இடம்பெற்றன.

இந்த நியதிச் சட்டங்கள், வடமாகாண ஆளுநரின் சிபாரிசுக்கு அனுப்பியிருந்த வேளையில்,

(19) ஆம் பக்கம் பார்க்க

### மோடி, ஜெயலலிதா கட்டுரை விவகாரம்

## தூதுவர் செனிவிரத்னவிடம் கண்டனம் தெரிவித்த இந்தியா

புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதுவர் சுதர்சன் செனிவிரத்ன நேற்று முன்தினம் இந்திய வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டு கண்டிக்கப்பட்டுளளார்.

தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதாவையும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியையும் தரம் தாழ்த்தும் வகையில், பாதுகாப்பு அமைச்சின் இணையத் தளத்தில் வெளியிடப்பட்ட கட்டுரை தொடர்பாகவே, இந்தக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டுரையை வெளியிடடதற்காக இலங்கைத் தூதுவரை அழைத்துக் கண்டிக்க வேண்டும் என்று, நேற்று முன்தினம் இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும், உறுப்பினர்கள் பிரச்சினையை எழுப்பியிருந்தனர்.

இதையடுத்து, இலங்கைத் தூதுவரை அழைத்து எதிர்ப்புத் தெரிவிப்பதாக, இந்திய வெளி

(19) ஆம் பக்கம் பார்க்க

## கால எல்லை நீடிப்பு

காணாமற்போனோர் தொடர்பான விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் காலம் மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் வரையும் இந்தக் குழு செயற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணைக்குழு 2013ஆம் ஆண்டு

(19) ஆம் பக்கம் பார்க்க

## எழுத்துமூல சாட்சியங்களை ஒக்.30வரை சமர்ப்பிக்கலாம்

### ஐ.நா. விசாரணைக்குழு அறிவிப்பு

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மீறல்கள் குறித்த எழுத்து மூலமான முறைப்பாடுகள், சாட்சியங்களை எதிர்வரும் ஒக்ரோபர் 30ஆம் திகதிக்கு முனனர் சமர்ப்பிக்குமாறு, ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் விசாரணைக் குழு கோரியுள்ளது.

ஐ.நா. மனிதஉரிமை ஆணையாளர் பணியகத்தினால், இந்த விசாரணைக் குழுவின் ஆதாரங்களைத் திரட்டும் முறைகள் மற்றும் விதிமுறைகள் குறித்த அறிவிப்பு நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த விசாரணைக் குழு, 2002ஆம் ஆண்டு பெப்ரவரி 21ஆம் திகதி தொடக்கம், 2011ஆம் ஆண்டு நவம்பர் 15ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது.

சாட்சிகளின் பாதுகாப்புப் பற்றிய கவலைகளைத் தீர்க்கும் வகையில், விசாரணைக் குழு முன்பாக சாட்சியமளிப்பவர்களுகக்குப் பாதுகாப்பளிக்க இலங்கை தொடர்பான ஐ.நா விசாரணைக் குழு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

சாட்சிகளையும், பாதிக்கப்பட்டவர்களையும், இலங்கையில் இருந்து விசாரணைக்குழுவுடன் தொடர்பு கொள்ளும் ஏனையவர்களையும் பாதுகாக்கும் பொறுப்பு இலங்கை அரசாங்கத்துக்கும் உள்ளது.

விசாரணைக் குழுவுடன் தொடர்பு கொள்ளும் நபர், துன்புறுத்தப்

(19) ஆம் பக்கம் பார்க்க

# சப்ரகமுவ மாணவனுக்கு மருத்துவ சிகிச்சைக்கு உதவி

(கிளிநொச்சி)

சப்ரகமுவ பல்கலைக்கழத்தில் தாக்கப்பட்ட சந்திரகுமார் சுதர்சன் என்ற மாணவன் பலாங்கொடை வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக இரத்தினபுரி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாணவனுடன் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தொலைபேசியில் உரையாடியதுடன், அவரின் மருத்துவச் செலவுக்காக 10 ஆயிரம் ரூபா பணத்தையும் வழங்கியுள்ளார். (37)

# குளவி கொட்டியதால் பத்து பேருக்கு பாதிப்பு

(சாவகச்சேரி)

யாழ். மீசாலை ஆலடிப்பிள்ளையார் கோவிலில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளின் போது, குளவிகள் கொட்டியதில் 10 பேர் பாதிக்கப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் மாலை அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆலய வளாகத்திலிருந்த குளவிக்கூடொன்று காற்றில் ஆடி குளவிகள் கலைந்தமையினால், ஆலயத்தில் நின்றவர்கள் மீது குளவிகள் கொட்டியுள்ளன.

சாவகச்சேரிப் பகுதியில் குளவிக்கொட்டிற்கு இலக்காவோர் நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றதுடன் அண்மையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் குளவிக் கொட்டிற்கு இலக்காகி பலர் பாதிக்கப்பட்டதுடன், குளவிகளின் தாக்கத்தி னால் சாவகச்சேரி ஆரம்பப் பாடசாலை ஒரு நாள் இயங் காமல் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (11)

# விபத்தில் சிக்கி பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணார்பண்ணை சிவன் கோவிலுக்கு அருகில், வீதியில் நடந்து சென்ற பெண் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில், அப்பெண் படுகாயமடைந்துள்ளதுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் மாலை அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாயைச் சேர்ந்த ச. அருள்சோதி (வயது-67) என்பவரே இவ்வாறு விபத்தில் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த பெண் மீது மோதிய மோட்டார் சைக்கிளின் ஓட்டுநரை கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகப் பொலிஸார் கூறினர்.

# நாவலர் வீதியில் விபத்து

யாழ்.நகரிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறை நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தும், ஹயர்ஸ் வானும் நாவலர் வீதி, வைமன் வீதிச் சந்தியருகில் மோதிக்கொண்டதால் ஹயர்ஸ் வாகனத்தின் முன் பகுதி சேதமடைந்தது.

நேற்று மாலை 6.00 மணியவில் இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நல்லூர்க் கந்தன் பெருந்திருவிழாவினை முன்னிட்டு இவ்வீதியூடான போக்குவரத்துக்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இவ்வீதியூடாக பெருமளவிலான வாகனப் போக்குவரத்து இடம்பெறும் நிலையிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நிரு)

# குடிநீரைத் தடுக்கும் கூட்டமைப்பு உரிமை பெற்றுத் தருமா?

## வேலணை பிரதேசசபை தவிசாளர் கேள்வி



வேலணை கிழக்கு ஜே/14 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி சங்கத்தினருடனான கூட்டம் நேற்றுக் காலை 10.00 மணியளவில் வேலணை சர்வோதய மண்டபத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர் இ.தவரூபன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வேலணை பிரதேசசபையின் தவிசாளரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணைப் பிரதேச அமைப்பாளருமான சின்னையா சிவராசா (போல்)

சமுர்த்தி அதிகார சபையினை வாழ்வின் எழுச்சித் திட்டமாக அரசாங்கம் விஸ்தரித்ததுடன், அதன் வளர்ச்சி தொடர்பில் முழு மூச்சாகச் செயற்படுவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து 'நாங்களும் அதீத கவனம் எடுக்க நடவடிக்கை எடுப்போம் என இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, இக்கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தமது குடிநீர்ப் பிரச்சினை தொடர்பில் கேள்வி எழுப்பிய போது, தொடர்ந்து உரையாற்றிய தவிசாளர்,

எமது பகுதியில் இடம்பெற்று வரும் குடிநீர்த் தட்டுப்பாடு எதிர்காலத்தில் முற்று முழுதாக இல்லாத நிலை யைத் தவிர்த்துக்கொள்ளும் ஒரு முன் ஏற்பாடாகவே இரணைமடுக் குளத்திலிருந்து இங்கு குடிநீரைக் கொண்டு வரும் திட்டத்தை அரசுடன் இணைந்து எமது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டு வந்திருந்தார். இந்நிலையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதியையும் திருப்பி அனுப்பி வைத்துள்ளது கூட்டமைப்பு.

தேசியம், தமிழ் மக்களின் சுயநிர்ணயம் என மேடைகளில் ஏறி மூச்சு வாங்க வாங்கப் பேசும் இவர்கள், மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பிலோ சிந்திக்காதவர்களாக, அற்ப சுகத்துக்காகத் தங்களின் இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும் தமிழ் மக்களின் உரிமைகளை பகடைக்காய்களாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இதேவேளை, அண்மையில் மண்டைதீவு வைத்தியசாலை திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் இரணைமடுக் குளத்திலிருந்து எமக்கு நீரைக் கொண்டு வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததுடன், எமக்கு ஏற்படவிருக்கும் குடிநீர்த் தட்டுப்பாட்டைத் தடுப்பதற்கு அல்லது அதற்கு மாற்று நடவடிக்கை எது என்பது தொடர்பில் கருத்துக்கள் எதனையும் தெரிவிக்காமல் தனது உரையை நிறைவு செய்துள்ளார்.

எனவே எதிர்காலத்தில் உங்கள் எதிர்காலம் சிறக்க நீங்கள் எடுக்கும் முடிவே காரணமாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆகவே சந்தியுங்கள், செயற்படுங்கள் எனக்கூறி தனது உரையினை நிறைவு செய்தார்.

இந்நிகழ்வில், தீவகம் தெற்கு பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர் செல்வி நகுலராணி, அப்பகுதி கிராம அலுவலர் குலசிங்கம், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி பயனாளிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1080

திகதி 04.08.2014

வெற்றி எண்கள்: 01 05 28 44 — ஆங்கில எழுத்து: I

ஜக்பொட் பரிசு ரூ. 3,53,45,680/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 3,53,45,680/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 10 | 50,000/= | ரூ. 5,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 241 | 1,000/= | ரூ. 2,41,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 465 | 1,000/= | ரூ. 4,65,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11326 | 60/= | ரூ. 6,79,560/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5922 | 40/= | ரூ. 2,36,880/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 148732 | 20/= | ரூ. 29,74,640/= |
| ஆங்கில எழுத்து | 21570 | 20/= | ரூ. 4,31,400/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 65,28,480/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூபா. 35,636,560/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.08.07 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3763)


# சட்ட உதவிக்கான நடமாடும் சேவை

(கிளிநொச்சி)

சட்ட உதவி ஆணைக்குழுவின் கிளிநொச்சி செயலகத்தினால் இன்று காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை நடமாடும் சேவை ஒன்று நடத்தப்படவுள்ளது.

வன்னேரிக்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த இலவச நடமாடும் சேவையின் போது பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளல் மற்றும் தாபரிப்பு, விவாகரத்து தொடர்பான பிரச்சினைகள், காணிப் பிரச்சினைகள் தொடர்பாகவும் விளக்கமளித்து அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (69)

# வீதி விபத்தில் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுப் பிற்பகல் யாழ்.மாநகர சபையின் முன்பாக பருத்தித்துறை வீதியில் நடைபெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் படுகாயங்களுக்குள்ளானார்.

நல்லூரைச் சேர்ந்த பொ.பேரின்பநாதன் (வயது-65) என்ற வயோதிபரே இவ்வாறு படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்தவேளை இவர் அப்பகுதியின் ஊடாக பயணித்த உழவு இயந்திரம் ஒன்றுடன் மோதியதாலேயே இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (பா)

# பொதுக்கூட்டம்

(குடமியன்)

குடமியன் கிராம அலுவலர் பிரிவுக்கான விவசாய சம்மேளனத்தின் பொதுக்கூட்டம் நாளை நடைபெறவுள்ளது.

குடமியன் பொது நோக்கு மண்டபத்தில் காலை 10.30 மணியளவில் இடம்பெறவிருக்கும் இப்பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெறவுள்ளதால் விவசாய சம்மேளனத்தைச் சேர்ந்த அங்கத்தவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (37)


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக்**

**ரீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

021 222 8680,
077 592 5088.

(C/3895)

# பௌசர் மூலம் குடிநீர் விநியோகம் முல்லை மாவட்ட செயலாளர் பணிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைமாவட்டத்தில் வறட்சி காரணமாக ஆறு பிரதேச செயலக பிரிவு மக்களுக்கு குடி நீர் விநியோகத்தை பௌசர் மூலம் வழங்குமாறு மாவட்ட செயலாளர் நா.வேதநாயகம் பணித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய், பாண்டியன்குளம், ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வெலிஓயா ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் தொடர்ச்சியான வறட்சி காரணமாக இப் பிரதேசங்களில் குடி நீர் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இதனை நிவர்த்தி செய்வதற்கு முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் மக்களுக்கு பௌசர் மூலம் குடி நீர் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதியுதவியுடன் பௌசர் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாகவும் பொருளாதார அமைச்சின் நிதி யுதவியுடன் கடுமையாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(40)



வவுனியா கூமாங்குளம் 'அஸ்திரம்' மக்கள் நற்பணி மன்றத்தினால் கடந்த சனிக்கிழமை நெடுங்கேணி ஒலுமடு அ.த.க பாடசாலையைச் சேர்ந்த இவ் வருடம் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் சுமார் 50 மாணவர்களுக்கு இலவச முன்னோடிக் கருத்தரங்கு நடாத்தப்பட்டதுடன் இலவச கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (40)


# ஞானச்சுடர் வெளியீடு

(வடமராட்சி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் 200 ஆவது ஞானச்சுடரின் (ஆவணி மாதமலர்) வெளியீட்டுவிழா எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பேரவைத்தலைவர் குமார.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இம்மலரின் வெளியீட்டுரையை ஆசிரியர் கே.ஸ்ரீச்சந்திரனும் மதிப்பீட்டுரையை இளைப்பாறிய அதிபர் கே.நடேசனும் (தெணியான்) வழங்கவுள்ளார். (01)

# கணனிகள் அன்பளிப்பு




(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட காரியாலங்கள் ஒவ்வொன்றுக்கும் கணனிகள் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராசாவினால் வழங்கப்பட்டுள்ளன.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தினால் 2013 இற்கான மாவட்ட விருது வழங்கல் விழா யாழ்.திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் தம்பிராசா குருகுலராசா கலந்துகொண்டதுடன் இந் நிகழ்வில் வைத்தே கணனிகளும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

வடமாகாண கல்விப் பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சருக்கு ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் ஒரு தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட இக்கணனிகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டன. இளைஞர் செயற்பாடுகளை வலுப்படுத்தும் முகமாக இவை வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் த.குருகுலராசா தெரிவித்தார். (48)

# எதையும் நாங்கள் 25 வருசம் 'லேற்'றாத்தான் விளங்கிக் கொள்வோம்...




வடமாகாண சபையின்ர முதலமைச்சர் "எங்கள் தங்கம் சிவ சிவா"வைப் பற்றின சந்தேகத்தோட விடியற்காலமையே வந்தார் சின்ராசா அண்ண.

ஏனண்ண, என்ன பிரச்சினையெண்டு சின்ராசா அண்ணையைக் கேட்டன்.

"இல்லைத்தம்பி, உவர் விக்கியர், வடக்கு மாகாண சபையின்ர முதலமைச்சராக இருக்கிறாரோ. இல்லையெண்டால் பிரதம நீதியரசராக, இல்லாட்டில் ஒரு ஆன்மீகவாதியாக இருக்கிறாரோ, அதுவுமில்லையெண்டால், ஆள் என்ன முழுமையா–கவே அரசியல்வாதியாக மாறீட்டாரோ..! எண்டார் சின்ராசா அண்ணை.

சின்ராசா அண்ணையின்ர கேள்விகளைக் கேட்க, எனக்கும் விக்கியரைப் பற்றி சந்தேகங்கள் வரத்தொடங்கிச்சு.

ஒரு நாலஞ்சு வருசத்துக்கு முந்தி, விக்கியர், பிரதம நீதியரசர் எண்டுதான் எனக்கு அறிமுகம்.

பிறகுபார்த்தால், ஆள் கொழும்புப் தமிழ்ச் சங்கத்திலும் கம்பன் கழகக் கூட்டங்களிலும் இடையில தலையைக் காட்டுற ஒரு ஆளாக இருந்தார்.

இருந்தாற்போல, தமிழரசுக்கட்சியின் அபிமானியாக பேப்பர்களில கட்டுரைகள் வரத்தொடங்கின.

இதற்கிடையில விக்கியர் ஆன்மீகத்தில நாட்டம் கொண்டிருக்கிறார் எண்டமாதிரி, ஆள் பஜனை பாடுகிற, தியானம் செய்யிற, பூசை செய்யிற காட்சிகள் எல்லாம் பேப்பர்களில வந்திச்சு.

இப்படியே குழப்பமாகத்தான், ஒண்டுக்கொண்டு சம்பந்தமில்லாத காரியங்களில் ஆள் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்.

இதால அந்த நாட்களிலேயே எனக்குச் சில குழப்பங்களும் கேள்விகளும் இருந்தது.

ஒரு உண்மையான ஆன்மீகவாதி எப்படியப்பா அரசியல் வாதியாக இருக்கமுடியும்? அதுவும் தமிழரசுக்கட்சியின்ர அனுதாபியாகவும் ஆதரவாளராகவும் இருக்கிறதெண்டால், அவர் உண்மையான ஆன்மீகவாதியாக இருக்கவே முடியாது. ஆனால், ரண்டையும் ஒரு நேரத்தில செய்துகொண்டிருக்கிற ஒரு ஆளாக விக்கியர் இருக்கிறார் எண்டால், இவர் எப்படிப் பிரதம நீதியரசாக இருந்திருக்க ஏலும்?

இப்படி ஒண்டுக்குமேல ஒண்டா பல கேள்விகள் எனக்கு அந்த நாளையிலயே வந்ததுண்டு.

இப்படி இருக்கேக்க, விக்கியர் தேர்தலில குதிச்சார்.

பிறகென்ன?

பிரதம நீதியரசர் அரசியல்வாதியானார்.

ஆன்மீகவாதி காணாமற்போனார்,

தேர்தல்ல விக்கியர் வெண்டபேறகு, அவரிட்ட மிஞ்சினது அரசியல்வாதி எண்ட அடையாளம்தான்,

அரசியல்வாதியானால், பிறகு சொல்ல வேணுமோ?

குத்துக்கரணங்கள், வாய்ச்சவாடல்கள், முன்னுக்குப்பின் முரண்பாடுகள் என்று எல்லா வருத்தமும் வரத்தொடங்கிச்சு.

இப்ப விக்கியர் ஆன்மீகவாதியாக பஜனை பாடுகிற படம் பேப்பரில வரும்போதெல்லாம் அரசியல்வாதியாக அவர் நடக்கிற, நடிக்கிற காட்சிகள்தான் நினைவுக்கு வருது.

விக்கியரை இப்ப ஆரும் பிரதம நீதியரசர் எண்டு சொன்னால் சிரிப்புத்தான் வருகுது.

சரி, அவர் ஒரு நல்ல அரசியல் தலைவராக இருக்கலாம் எண்டால், அதையும் சரியாகச் செய்யிறமாதிரித் தெரியேல்ல.

ஒரு படிச்ச மனுசன், நீதியரசர், ஆன்மீகவாதி, வயதுக்கு மூத்தவர், அனுபவக்காரன் இப்படியெல்லாம் இருக்கிற ஒருத்தர் அரசியலுக்கு வந்தால், மக்களுக்கு நல்லது நடக்கும் எண்ட ஒரு எதிர்பார்ப்பு சனங்களிடையே இருந்தது உண்மை. ஏன் படிச்சவையே விக்கியரில 100 வீதம் நம்பிக்கை வைச்சிருந்தது உண்மை. அதாலதானே அள்ளி அள்ளி வாக்குகளைப் போட்டவை.

அரசியலுக்கு வந்த புதிசில அப்பிடி ஒரு நம்பிக்கையைக் குடுக்கிறமாதிரி ஆளும் கொஞ்சநாள் நடந்தார்தான்.

ஆனால், விக்கியர் இப்பிடி லைன் (Line) எடுத்தால், தங்களின்ர பிழைப்பில மண் விழுந்திடும் எண்டு கூட்டமைப்புக்குள்ள இருந்த மற்ற ஆட்கள் கொஞ்சம் இறுக்கிப் பிடிச்சு, விக்கியரைக் கொஞ்சம் கடுமையாக விமர்சிக்க தொடங்கிச்சினம்.

அதோட விக்கியர் அடங்கிப்போனார், அப்படியே ஒண்ணாம் நம்பர் மக்கள் விரோதிகளின்ர காலில விழுந்து பஜனை பாடத் தொடங்கிவிட்டார்.

இப்ப மிஞ்சினது, விக்கியர் ஒரு அரசியல் பஜனை பாடும் ஆள் எண்டதுதான்.

சின்ராசா அண்ணை, நீங்கள் விக்கியரை விடக் கெட்டிக்காரன்தான் அண்ணை.

சரியாகத்தான் விக்கியரைப் பற்றி மதிச்சிருக்கிறியள்.

ஆனால், உங்களை இப்போதைக்கு ஆரும் மதிக்க மாட்டாங்கள். அதுக்கும் ஒரு இருவத்தைஞ்சு வருசம் தேவை.

ஏனெண்டால் மாகாணசபையை ஏற்கிறதுக்கே எங்கட ஆக்களுக்கு 25 வருசம் தேவைப்பட்டுது.

புலிகளைப் பற்றிய கற்பனையும் நிஜமும் உடைஞ்ச பிறகும் மாயை இன்னும் கலையேல்ல. அதுக்கும் ஒரு பத்துப் பதினைஞ்சு வருசமாகும்.

இப்பிடித்தான் விக்கியரைப் பற்றிச் சரியாக அறியவும் உங்களைப் பற்றிச் சரியாக மதிப்பிடவும் ஒரு 30 வருசமாவது எங்கட வாழைக்குத்தித் தமிழர்களுக்குத் தேவை.

எப்போதும் அச்சத்தில் இருப்பதை விட ஆபத்தை ஒருமுறை சந்திப்பதே மேல் - டெஸ்கார்ட்டஸ்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## பேசுவதைத் தவிர வழியில்லை

“அரசியல்வாதிகள் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்; அப்படி அவர்கள் ஏமாற்றுவதற்கு புத்திஜீவிகளும் ஊடகக்காரர்களும் உதவிக்கொண்டிருக்கிறார்கள்; இதுதான் எங்கட நிலைமை” என்றார் அலுவலகம் வந்திருந்த நண்பர்.

இப்பிடிச் சூத்திரம் போலச் சொன்னால் புரியாது, விரித்துப் பொருளுரைக்கும்படியாக அவரிடம் வேண்டிக் கொண்டதற்கிணங்க, அவர் விரித்துச் சொல்லியதன் சாராம்சம் இதுதான்:

தமிழ்மக்களிடம் பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவதற்காகத் தலைவர்கள் கைக்கொள்ளும் முதல் ஏமாற்று – புலிகள் அரச படையினரை முன்னேற விடாமலும் பதிலுக்குப் பதில் கொழும்பிலும் குண்டுகள் வெடிக்க வைத்தும் போர் புரிந்து கொண்டிருந்த காலத்து எதிரியாகவே அரசைத் தொடர்ந்து சித்தரித்துக் கொண்டிருப்பதாகும்.

இதன்மூலம் – அரசுடன் பேச முடியாது, அரசு தீர்வைத் தரவே தராது, ஆகவே தொடர்ந்தும் எதிரியுடன் போராடிக் கொண்டிருப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று காட்ட முற்படுகிறார்கள். ஆயுதங்களுக்குப் பதிலாக இனி மனதாலும் வார்த்தைகளாலுமேனும் எதிர்த்தபடி இருப்போம் என்று மக்களைப் பழைய நிலையிலேயே வைத்திருப்பதன் மூலம் தாங்கள் பதவிகளை வைத்துக் கொள்கிறார்கள்.

அவர்களது கொலைகளுக்குப் பதிலாக நாங்களும் கொலைகள் செய்து மிரட்டிக் கொண்டிருந்தது ஐந்தாண்டுகளுக்கு முன்பிருந்த நடப்பு. கொலைகளில் நாங்கள் வெற்றிகொள்ள முடியாது என்று தெரிந்த பிறகு, எங்கள் 'வழிமுறையை மாற்றிக் கொள்ள வேண்டியதுதானே புத்திசாலித்தனமும் யதார்த்தமுணர்தலும் ஆகும்.

மாறாக, அதே பழைய எதிர்ப்பிரச்சாரங்களைச் செய்தபடியும், எதிர்த்தே எதிரியைப் பணிய வைத்துவிடப் போகிறோம் என்றும் மக்களை உணர்ச்சிவசப்படுத்தி, தனிநாடு தனியலகுக் கனவுகளில் காத்திருக்க வைப்பது பச்சையான ஏமாற்றில்லையா?

இந்த ஏமாற்றுத் தலைவர்கள், புலிகளின் ஆயுதங்களுக்குப் பதிலாக இப்போது சர்வதேச அறிக்கை அழுத்தங்களை வைத்துக்கொண்டு 13வது திருத்தச் சட்டம் மாகாணசபை எல்லாவற்றையும் தாண்டிய தன்னாட்சித் தீர்வை நோக்கிப் போய்க்கொண்டிருப்பதாகச் சொல்லிச் சொல்லியே தமிழ் மக்களிடமிருந்து வாக்குகளைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

அவர்கள் தங்கள் பதவி அரசியலுக்கும் வாக்குகளுக்குமாக “எதிரி எதுவும் தரமாட்டான்; சர்வதேசம் வந்தால்தான் தீர்வு” என்று பல்லவி பாடி ஏமாற்றிக் கொண்டிருப்பதை ஒருவகையில் புரிந்துகொள்ளலாம்.

ஆனால் இந்த புத்திஜீவிகளுக்கும் ஊடகக்காரர்களுக்கும் நன்கு தெரியும், எந்தச் சர்வதேசமும் மாகாண சபைக்கு மேலாக எதையும் இங்கு எடுத்துத் தந்துவிடப் போவதில்லை என்பது. அதுவும் பெரும்பான்மை மக்களும் ஏற்றுக் கொள்ளத் தக்கதான ஒரு தீர்வைப் பேசி எடுங்கள் என்பதுதான் அவர்களது அதிகபட்ச வார்த்தையாக இருக்கமுடியும்.

இந்த லட்சணத்தில், எந்த மாயாஜாலத்தை எதிர்பார்த்து; வெறும் எதிர்ப்பு முழக்கங்களையே இன்னும் வைத்துக்கொண்டு இவர்கள் காத்திருக்கிறார்கள்?

யுத்தம் நடத்திய காலத்து எதிர்பார்ப்புகளில் இருந்தும், பேச்சு வழிமுறைகளில் இருந்தும் நாங்கள் மாறாமல் அப்படியே இருந்து கொண்டு, அரசும் சிங்கள மக்களும் சர்வதேசமும் மற்று மற்றுமுள்ள எல்லாரும் இந்த நாட்டின் சமாதான வாழ்வு கருதி மாறியாக வேண்டும் என்று மனப்பால் குடித்தபடி எழுதிக்கொண்டிருப்பது ஜோக்காக இல்லையா?

நேற்றுவரை பதிலுக்குப் பதில் கொலைகள் செய்து போராடித் தோற்றுவிட்டு, இன்றும் அதே பாணியிலேயே சவால்விட்டபடி நடந்துகொண்டு, ஆனால் அவர்களைத் திருத்துவதற்கு ஆலோசனைகளையும் எச்சரிக்கைகளையும் விட்டுக்கொண்டிருப்பது என்னவொரு கோமாளி முட்டாள்தனம்? - ஆசிரியர்.

# வாட்டி வதைக்கும் வறட்சி;
# முல்லையில் 56,469 பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டின் பல மாகாணங்களில் ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக நேற்றுமுன்தினம் வரை 11,50,728 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வடமாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தில் 16,576 குடும்பங்கள் (56,469 தனிநபர்கள்) மோசமான காலநிலையினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வறட்சி, மண்சரிவு, கடுங்காற்று மற்றும் மழை என்பவற்றினால் இதுவரை நாட்டில் 323483 குடும்பங்கள் (11,51,030 தனிநபர்கள்) பாதிக்கப்பட்டுள்ளனர். 3 வீடுகள் முழுமையாகவும் 6 வீடுகள் பாதியளவிலும் சிதைவடைந்துள்ளன.

ஊவா மாகாணத்தின் மொனராகல மாவட்டத்தில் 32,039 குடும்பங்களும் (12,8193 தனிநபர்கள்) வடமத்திய மாகாணத்தின் பொலன்நறுவை மாவட்டத்தில் 45,274 குடும்பங்களும் (1,47,439 தனிநபர்கள்) பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் 10,180 குடும்பங்களும் (31,278 தனிநபர்கள்) மட்டக்களப்பு மாவட்டத்தில் 32,733 குடும்பங்களும் (1,17,540) தனிநபர்கள்), திருகோணமலை மாவட்டத்தில் 2,03 88 குடும்பங்களும் (90,264 தனிநபர்கள்), பாதிக்கப்பட்டுள்ளன.

வடமேல் மாகாணத்தில் குருநாகல மாவட்டத்தில் 1,39,664 குடும்பங்களும் (4,73,125 தனிநபர்கள்) தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 26,584 குடும்பங்களும் (1,06,420 தனிநபர்கள்) பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுதவிர கடுங்காற்று காரணமாக மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தின் மிஹிரிகம பிரதேசத்தில் 53 குடும்பங்களைச் சேர்ந்த 243 தனிநபர்களும், களுத்துறை மாவட்டத்தின் ஹொரான பிரதேசத்தில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 21 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மண்சரிவு காரணமாக நுவரெலிய மாவட்டத்தில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேரும் கடுங்காற்று மற்றும் மழை காரணமாக கேகாலை மாவட்டத்தின் தெரணியகல பிரதேசத்தில் 5 பேரும் கேகாலை பிரதேசத்தில் 4 பேரும் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சப்ரகமுவ அபிவிருத்திக்கு 744 கோடி ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் “வீட்டுக்கு வீடு - கிராமத்துக்கு கிராமம்” தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் சப்ரகமுவ மாகாண அபிவிருத்திக்கு 744 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாணத்துக்குட்பட்ட இரத்தினபுரி கேகாலை ஆகிய இரு மாவட்டங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி கேகாலை மாவட்டத்தில் 17 தேர்தல் தொகுதிகளைச்சேர்ந்த 28 பிரதேச செயலகப்பிரிவுகளிலும் இந்த அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும். இதன் மூலம் 49 இலட்சம் குடும்பங்கள் நன்மையடைவர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் மேற்பார்வையில் இந்த அபிவிருத்தித்திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக இரத்தினபுரி மாவட்ட செயலாளர் சுனில் கன்னங்கரவும், கேகாலை மாவட்ட செயலாளர் துசித வணிகசிங்க ஆகியோர் தெரிவித்தனர். சிரேஷ்ட அமைச்சர் அதாவுட செனவிரத்ன, அமைச்சர்களான ஜோன் செனவிரத்ன, பவித்ரா வன்னியாராச்சி, வாசுதேவ நாணயக்கார, ஜகத் பாலசூரிய, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, முதலமைச்சர் மகிபால ஹேரத், பிரதி அமைச்சர்களான லலித் திசாநாயக்க, எச்.ஆர்.மஹபால, பிரேமலால் திசாநாயக்க, பிரேமலால் ஜயசேகர ஆகியோரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

# தண்டனைபோதுமானதாக இல்லை சட்டமா அதிபர் திணைக்களம் மனு

(கொழும்பு)

தங்காலையில் பிரித்தானிய பிரஜை கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை போதுமானதாக இல்லை என சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு மனுவொன்றை தாக்கல் செய்த சட்டமா அதிபர் திணைக்களம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

பிரித்தானிய பிரஜை குர்ஹாம் ஷேக்கை கொலை செய்து அவரது காதலியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட தங்காலை பிரதேச சபையின் முன்னாள் தலைவருக்கு கடந்த 18 ஆம் திகதி 20 வருட கடுழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த 31ஆம் திகதி தங்காலை முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் கொழும்பு உயர் நீதிமன்றில் மேன்முறையீட்டு மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதிய அரசியல் தீர்வொன்று உருவாக்கப்பட வேண்டும்

## கூறுகிறார் ரணில்

(கொழும்பு)

சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணும் வகையிலான புதிய அரசியல் தீர்வொன்று உருவாக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இன்று இந்த நாட்டு மக்களுக்கு அரசியல் முறைமை வேண்டாம் என்று போய்விட்டது. அரசியல்வாதிகளிடம் அதிகாரம் இருக்கின்றது. இந்த நிலையில் மக்களால் எவ்வாறு அரசியலில் தமது கருத்துக்களை முன்வைக்க முடியும். அமெரிக்கா, இங்கிலாந்து ஏன் இந்தியாவில் செய்ய முடியும் என்பதை ஏன் இலங்கையில் செய்ய முடியாது எனவும் ரணில் விக்ரமசிங்க கேள்வியெழுப்பினார்.

# பிள்ளைகளின் எதிர்காலத்தை தீர்மானிக்கவே அரசாங்கம் பெருமளவில் கடன்படுகின்றது

## என்கிறார் கல்வியமைச்சர்

(கொழும்பு)

உலகம் முழுவதும் கடன்பட்டாவது இலங்கை தேசத்து பிள்ளைகளின் எதிர்காலத்தை ஒளி மயமானதாக மாற்ற வேண்டியுள்ளது என கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பலப்பிட்டிய சித்தார்த்த மகிந்தோதய விஞ்ஞான கூடத்தை மாணவர்களுக்கு வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில்,

அரசாங்கம் கடன்பட்டு கோதுமைமா வாங்கவில்லை ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் இலங்கை தேச பிள்ளைகளின் எதிர்காலத்தை நிர்மாணிப்பதற்காகவே கடன்படுகின்றது.

இதை விட அரசாங்கத்திற்கு எதுவும் செய்ய முடியாது. இது தான் மிகவுயர்வானது. ஏனையவற்றைக் கவனிப்பது மாகாண சபைகளினதும் கல்வி அதிகாரிகளினதும் பெற்றோர்களினதும் கடமையாகும் என்றார்.



**மார்க்சிய தத்துவம் காலங் காலமாக கூறி வருவதைப் போன்று, "இழப்பதற்கு எதுவுமற்ற மக்கள் தான் போராட முன்வருவார்கள்." தமிழீழ விடுதலைப் போராட்டத்திலும் அது தான் உண்மை. இழப்பதற்கு நிறைய சொத்துக்களை வைத்திருப்பவர்கள், வெளிநாடுகளுக்கு சென்று, சுகபோக வாழ்க்கை வாழ்ந்து கொண்டு, மற்றவர்களுக்கு தமிழ் தேசிய பாடம் நடாத்திக் கொண்டிருப்பார்கள்.**

கலையரசன் கட்டுரையிலிருந்து

# புலிகளின் "குழந்தைப் போராளிகளும்" புலம்பெயர்ந்த "குழந்தை அறிவுஜீவிகளும்"

மேற்கத்திய மனித உரிமை நிறுவனங்களும், ஐ.நா. வும் தான், குழந்தைப் போராளிகள் விடயத்தை ஒரு முக்கியமான பிரச்சினையாக மாற்றினார்கள். ஐ.நா. அதற்கென்று விசேட பிரிவை உருவாக்கியது.

அமெரிக்க சி.ஐ.ஏ., தனது இலங்கை தொடர்பான வருடாந்த அறிக்கைகளில், புலிகளின் சிறார் போராளிகளைப் பற்றிக் குறிப்பிட்டு வந்தது. சி.ஐ.ஏ. அதற்கு ஆதாரமாகப் பயன்படுத்திய வளங்களில் பெரும்பகுதி புலிகளின் பிரச்சார சாதனங்களில் இருந்து பெறப் பட்டன.

உதாரணத்திற்கு, மாவீரர் துயிலும் இல்லத்தில் இருந்த சமாதிகளில், பிறந்த ஆண்டும், மரணமடைந்த ஆண்டும் பொறிக்கப் பட்டிருந்தன. சி.ஐ,ஏ, அதை சுட்டிக் காட்டி, மரணமடைந்த போராளிகளின் வயதைக் கணக்கிட்டு கூறி வந்தது. விழிப்புற்ற புலிகள் இயக்கம், அதற்குப் பின்னர் போராளிகளின் சமாதிகளில் பிறந்த வருடம் குறிப்பிடும் வழக்கத்தை நிறுத்திக் கொண்டது.

ஒரு காலத்தில், புலிகள் இயக்கத்திற்கு ஆட்களை தெரிவு செய்வதில் அதிக கவனம் செலுத்தி வந்தனர். துடிதுடிப்பான, இராணுவ சாகசம் செய்யும் ஆர்வம் கொண்ட கட்டிளம் காளைகளை மட்டுமே தெரிந்தெடுத்தனர். ஆரம்பத்தில் பெண்களையும், சிறுவர்களையும் போராளிகளாக சேர்த்துக் கொள்ள விரும்பவில்லை. அன்றிருந்த ஐந்து பெரிய இயக்கங்களில், புலிகளில் மட்டுமே குறைந்த எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் இருப்பதாக கருதப் பட்டது.

PLOTE, TELO, EPRLF ஆகியன, ஒரு மரபு வழிப் படையணியை கட்டுவதற்கு தேவையான ஆள் பலம் வேண்டுமென்று கூறி, வருவோர் போவோர் எல்லோரையும் கூப்பிட்டு சேர்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், புலிகளோ கமாண்டோ பாணி தாக்குதல்களை செய்யக் கூடிய கெரில்லாப் படையை வைத்திருப்பதில் மட்டுமே ஆர்வம் காட்டினார்கள். திடீர் கெரில்லா தாக்குதல்களில் கிடைத்த வெற்றிகள், புலிகள் மக்கள் மத்தியில் பிரபலமடையக் காரணமாக இருந்தன.

1986ஆம் ஆண்டுக்குப் பின்னர் தான், ஒரு பெரிய திருப்புமுனை உருவாகியது. வடமராட்சியில் நடந்த ஒப்பறேஷன் லிபரேஷன் போர் நடவடிக்கை மூலம், இலங்கை இராணுவம் பெரியதொரு பிரதேசத்தைக் கைப்பற்றியிருந்தது. அந்தப் போரில், புலிகள் இயக்கத்திற்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டதாகவும், பெருமளவு போராளிகள் மரணமடைந்ததாகவும் கருதப் பட்டது. இந்தத் தகவலை, அன்றைக்கு அனுப்பப்பட்ட அமெரிக்க தூதரக கேபிள் தெரிவித்ததை, விக்கிலீக்ஸ் பகிரங்கப்படுத்தி இருந்தது. இலங்கை இராணுவம் யாழ் குடாநாட்டின் பிற பகுதிகளைக் கைப்பற்றுவதற்கு முன்னர், இந்தியா தலையிட்டு ஒப்பந்தம் போட்டது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டு, இரண்டு மாதங்களுக்குப் பின்னர், புலிகளுக்கும், இந்தியப் படைகளுக்கும் இடையில் யுத்தம் மூண்டது. அப்போது தான், குழந்தைப் போராளிகள் என்ற தோற்றப்பாடு வெளித் தெரிய ஆரம்பித்தது. அதற்குக் காரணம், வழமையான புலிப் போராளிகள் எவரும் வெளியில் நடமாட முடியவில்லை. பல சிக்கல்களுக்கு மத்தியில், தலைமறைவு வாழ்க்கை வாழ வேண்டியிருந்தது.

இந்திய இராணுவத்தின் முற்றுகைக்குள், தேடுதல்களுக்குள் அகப்படாமல் தப்புவதற்காக, புலிப் போராளிகள் ஒரு ஊரில் இருந்து இன்னொரு ஊருக்கு, அடிக்கடி நகர்ந்து கொண்டிருக்க வேண்டி இருந்தது. அப்போது வழியில் படையினர் நிற்கின்றனரா என்று உளவு பார்ப்பதற்காக, சிறுவர்களை பிடித்து முன்னுக்கு அனுப்புவார்கள். இந்திய இராணுவமும், எக் காரணம் கொண்டும் சிறுவர்களை சந்தேகிக்கவில்லை. ஊர் மக்களிடையே இரகசியமாக பணம் சேர்ப்பதற்கும் அவர்கள் பயன்படுத்தப் பட்டனர். அப்போது அந்த சிறுவர்கள் வைத்திருந்த ஒரே ஆயுதம், கிரனேட் மட்டுமே.

இந்தியப் படைகள் இலங்கையை விட்டு வெளியேறிய காலத்தில், உதவியாளர்களாக இருந்த சிறுவர்கள், போராளிகளாக மாற்றப் பட்டனர். புலிகள் தமது முந்திய கொள்கைக்கு முரணாக, சிறுவர்களை படையணியில் சேர்த்துக் கொள்வதற்கு சில சமூகக் காரணிகள் இருந்தன.

1985 - 1986 கால கட்டத்தில் நடந்த இயக்க மோதல்கள், புலிகள் பிற இயக்கங்களைத் தடை செய்தமை, ஆகிய காரணங்களினால் மக்களுக்கு போராட்டத்தில் ஈடுபடும் ஆர்வம் குன்றி இருந்தது. பல வருடங்களாக, இந்தியா படையனுப்பி தம்மைக் காப்பாற்றும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். 1987-ல், எதிர்பாராவிதமாக இந்திய இராணுவத்திற்கும், புலிகளுக்கும் இடையில் நடந்த போர் தந்த அதிர்ச்சியில் இருந்து மீள முடியவில்லை. இதற்கிடையே, வெளிநாடுகளுக்கும், இந்தியாவுக்குமான புலம்பெயர்தல் அதிகரித்திருந்தது.

இந்தியப் படைகள் விலக்கிக் கொள்ளப் பட்ட பின்னர், வட மாகாணத்தில் பெரும் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமாகியது. புலிகள் வைத்திருந்த நடைமுறை (de facto) தமிழீழத்தில் இருந்து வெளியேறிச் சென்ற நடுத்தர வர்க்கத்தினரில் பெரும்பான்மையானோர், போராளியாகும் வயதில் இருந்த இளைஞர்கள் அதாவது 16 - 25 வயதிலான இளைஞர்கள் தான் பெருமளவில் புலம் பெயர்ந்தனர்.

16 வயதுக்கு உட்பட்டோர் விசா எடுக்கத் தேவையில்லை என்ற சட்டத்தை பயன்படுத்தி, ஏராளமான இளைஞர்கள், 17 - 24 வயதானவர்கள் கூட, போலி கடவுச்சீட்டு தயாரித்து ஜெர்மனிக்கு சென்றனர். ஓரளவு வசதியானவர்கள் கூட, தம்மிடம் சொந்தமாக இருந்த நிலத்தை, நகை களை அடைவு வைத்து விட்டு, அல்லது அவற்றை விற்று பணம் சேர்த்துக் கொண்டு, வெளிநாடுகளுக்கு செல்ல முடிந்தது.

மூளைசாலிகளின் வெளியேற்றம் ஒரு வளர்ந்து வரும் நாடொன்றின் பொருளாதாரத்தைப்பாதிப்பது போன்று, போராளிகளின் வயதையொத்த தமிழ் இளைஞர்களின் வெளியேற்றம், புலிகளின் போராட்டத்தை பாதிக்கும் என்று உணரப் பட்டது. அதனால், தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து, 45 வயதுக்கு உட்பட்டோர் எவரும் வெளியேறக் கூடாது என்று, புலிகள் சட்டம் போட்டார்கள்.

விசா போன்று, பாஸ் நடைமுறையையும் கொண்டு வந்தார்கள். ஏதாவது அலுவலாக கொழும்புக்கு செல்வதாக இருந்தால், நெருங்கிய உறவினரை பணயம் வைத்து விட்டு செல்ல வேண்டும். ஆயினும், வசதி படைத்தவர்கள் பெருமளவு பணம் கொடுத்து, பாஸ் எடுத்துக் கொண்டு சென்றனர். அவ்வாறு வெளியேறிய பெரும் பகுதியினர், வெளிநாடுகளுக்கு ஓடி விட்டனர்.

**ஊரில் ஒரு பாடசாலை மாணவனாக வாழ்ந்த காலங்களில் அரசியலை நினைத்துப் பார்க்க மறுத்தவர்கள், பல்கலைக்கழக பட்டம், வெளிநாட்டு வாழ்க்கை கைவரப் பெற்ற பின்னர் தான், "நமக்கு தமிழீழம் வேண்டும்" என்று உணர்ந்து கொண்டார்கள்! அவர்கள் தான் தற்போது இணையத்திலும், சமூக வலைத்தளங்களிலும் தமிழீழ விடுதலைப் போராட்டம் நடாத்திக் கொண்டிருக்கிறார்கள்.**

இதிலே வேடிக்கை என்னவென்றால், "ஈழத்தில் வாழ்ந்த காலங்களில், போராளியாக மாறக் கூடிய அருமையான சந்தர்ப்பத்தை உதறித் தள்ளி விட்டு" வெளிநாடுகளுக்கு ஓடியவர்கள், புலம்பெயர்ந்த நாடுகளில் நிரந்தரமாக தங்கி விட்டவுடன், "புலி ஆதரவாளர்" வேஷம் போடத் தொடங்கினார்கள். வெளிநாடு செல்லும் வரையில், அவர்களுக்கும் புலிகளுக்கும் எந்த வித சம்பந்தமும் இருக்கவில்லை. தமிழீழப் போராட்டம் பக்கம் தலை வைத்துக் கூடப் படுக்கவில்லை.

இறுதி யுத்தம் வரையில், புலிகளின் படையணிகளில் இருந்த பெரும்பான்மையான போராளிகள்,குழந்தைப் போராளிகள் உட்பட, வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். நடுத்தர வர்க்க "குழந்தை அறிவுஜீவிகளை" பின்பற்றி, வெளிநாடு செல்வதற்கு பண வசதி இல்லாதவர்கள்.

மேற்கத்திய நாடுகளில், வசதியாக வாழ்ந்து கொண்டிருக்கையில், திடீரென தமிழ் தேசிய ஞானம் கைவரப் பெற்றவர்கள், விடுதலை உணர்வு பற்றி போதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மார்க்சிய தத்துவம் காலங் காலமாக கூறி வருவதைப் போன்று, "இழப்பதற்கு எதுவுமற்ற மக்கள் தான் போராட முன்வருவார்கள்." தமிழீழ விடுதலைப் போராட்டத்திலும் அது தான் உண்மை. இழப்பதற்கு நிறைய சொத்துக்களை வைத்திருப்பவர்கள், வெளிநாடுகளுக்கு சென்று, சுகபோக வாழ்க்கை வாழ்ந்து கொண்டு, மற்றவர்களுக்கு தமிழ்த் தேசியப்பாடம் நடத்திக் கொண்டிருப்பார்கள்.

புலிகள் புதிய உறுப்பினர்களை சேர்ப்பதற்கென்றே பிரச்சாரப் பிரிவில் ஆட்களை வைத்திருந்தார்கள். ஆயினும், அந்தப் பிரச்சாரம், தற்போது வெளிநாடுகளில் தீவிர தமிழ் தேசியம் பேசிக் கொண்டிருக்கும், நடுத்தர வர்க்க மாணவர்கள் மனதில் எந்த சலனத்தையும் உண்டு பண்ணுவதில்லை.

ஏனென்றால், அவர்களுக்கு நன்றாகத் தெரியும், படித்தால் தமக்கு எதிர்காலம் உண்டென்று. குறைந்த பட்சம், தமது பெற்றோர் தம்மை வெளிநாட்டுக்காவது அனுப்பி வைப்பார்கள் என்பதும் அவர்களுக்கு தெரியும்.

மத்திய தர வர்க்கத்திலும் விதிவிலக்காக சிலர் இருப்பார்கள். தாமாகவே விரும்பி போராளியாக சேர்ந்து கொள்வார்கள். அப்படியான சிலரை, பெற்றோர் தமது செல்வாக்கை பயன்படுத்தி, முகாமில் இருந்து விடுவித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகும் தமது பிள்ளை ஊரில் இருந்தால் இயக்கத்தில் சேர்ந்து விடுவான் என்று நினைத்து, வெளிநாடொன்றுக்கு அனுப்பி வைப்பார்கள்.

ஏழை மக்களின் நிலைமை வேறு. அவர்களிடம் வெளிநாடு செல்லும் அளவிற்கு வசதி, வாய்ப்புகள் எதுவும் கிடையாது. ஏழை மாணவர்கள் மனதில், புலிகளின் பிரச்சாரங்கள் பெரும் தாக்கத்தை உண்டு பண்ணிவிடும். குடும்பக் கஷ்டத்தை உணர்ந்தும் பலர் போராளியாக சேர்ந்து கொள்ள முன்வருவதுண்டு. அப்படியாவது, தாம் பெற்றோருக்கு பாரமாக இருக்க மாட்டோம் என்று அந்த பிஞ்சு உள்ளங்கள் நினைத்துக் கொண்டன.

மத்தியதர வர்க்க "குழந்தை அறிவுஜீவிகள்", சக மாணவர்கள் அரசியலில் நாட்டம் கொள்வதையே கண்டிப்பார்கள். "நமக்கு முக்கியம் படிப்பு, பல்கலைக்கழக அனுமதி, அதற்குப் பிறகு உத்தியோகம், கடைசியாக ஒரு மேற்கத்திய நாடொன்றில் நிரந்தரமாக தங்கி விடுதல்..." என்று அறிவுரை கூறுவார்கள்.

ஊரில் ஒரு பாடசாலை மாணவனாக வாழ்ந்த காலங்களில் அரசியலை நினைத்துப் பார்க்க மறுத்தவர்கள், பல்கலைக்கழக பட்டம், வெளிநாட்டு வாழ்க்கை கைவரப் பெற்ற பின்னர் தான், "நமக்கு தமிழீழம் வேண்டும்" என்று உணர்ந்து கொண்டார்கள்!

(18ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு கிழக்கு காணிப்பிணக்குகளுக்கு உடனடியாக தீர்வு காணப்படவேண்டும்

## அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோன் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணி தொடர்பிலான 180, 000 பிணக்குகள் தீர்க்கப்படாத நிலையில் நிலுவையில் இருக்கின்றன. இந்தப் பிணக்குகள உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டியவைகளாகும். என காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.


இந்தப் பிணக்குகளில் 160899 பிணக்குகள் வடக்கு மாகாணத்தில் பதிவாகியுள்ளதுடன் ஏனையவை கிழக்கு மாகாணத்தில் பதிவாகியுள்ளன.

பலவந்தமான முறையில் காணியை பிடித்துக் கொள்ளல், போலிக் காணி உறுதி தயாரித்தல், எல்லைப் பிரச்சினை, காணிகளின் உரிமையை உறுதி செய்ய ஆவணங்கள் இல்லாமை போன்றன பிரதான முறைப்பாடுகளாகும்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய காணிப் பிணக்குகளை தீர்க்க திட்டமொன்று வகுக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

காணிப் பிணக்குகள் பலவற்றுக்கு ஏற்கனவே தீர்வு வழங்கப்பட்டுள்ளது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# யானைகளை பாதுகாக்குமாறு நீதிமன்றில் வழக்குத் தாக்கல்



யானைகளை கடத்தல் மற்றும் யானைகளுக்கு ஏற்படும் துன்புறுத்தல்கள் தொடர்பாக ஆராய்வது குறித்த இரண்டு மனுக்களை மேன் முறையீட்டு நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்து கொள்ள தீர்மானித்தது.

சர்வதேச விலங்கியல் நலன்புரி அமைப்பு உள்ளிட்ட மேலும் சில அமைப்புக்கள் இந்த மனுக்களை தாக்கல் செய்தன.

பிரதிவாதிகளாக வனவள பாதுகாப்பு அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா மற்றும் வன பாதுகாப்பு பணிப்பாளர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

தாம் சமர்ப்பித்துள்ள இந்த மனுக்கள் ஊடாக சட்டவிரோதமாக இடம் பெறும் யானைக்கடத்தல்கள் மற்றும் துன்புறுத்தல்கள் தொடர்பில் கவனம் செலுத்த முடியும் என உயிரியல் பாதுகாப்பு மத்திய நிலையத்தின் தலைவர் புபுது வீரரட்ன தெரிவித்தார்.

# சிறைக் கைதியிடமிருந்து பெருந்தொகை பணம் மீட்பு

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவரிடமிருந்து 95000 ரூபா பணம் மீட்கப்பட்டுள்ளது.

5000 ரூபா பெறுமதியான 19 தாள்களை சிறைச்சாலை அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

கொலைக் குற்றத்திற்காக பத்தாண்டு சிறைத்தண்டனை அனுபவித்து வரும் குற்றவாளி ஒருவரிடமிருந்து பணம் மீட்கப்பட்டுள்ளது.

அண்மையில் கைதி ஒருவரிடமிருந்து மீட்கப்பட்ட மிகக் கூடிய தொகைப் பணம் இதுவெனத் தெரிவிக்கப்படுகிறது.

கைதிக்கு எவ்வாறு பணம் கிடைத்தது, என்ன நோக்கத்திற்காக பணம் வைத்திருந்தார் என்பது குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# சமய அடையாளங்களை நிறுவ விரைவில் புதிய சட்டம் அமுல்

சகல சமயங்களினது வணக்கஸ்தலங்களையும் சமய அடையாளங்களையும் நிறுவுவதை ஒழுங்குபடுத்துவதற்கென, புத்த சாசன மற்றும் சமய விவகாரங்கள் அமைச்சினால் ஒரு புதிய சட்டம் கொண்டுவரப்படவுள்ளது.

வணக்கஸ்தலங்கள் நிர்மாணிக்கப்படுவது தொடர்பில் சில பிரதேசங்களில் எழுந்த அமைதியற்ற சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

புதிய சமய வழிபாட்டு ஸ்தலங்களை நிர்மாணிப்பது தொடர்பில், சமய விவகார அதிகார சபையிடமிருந்து முன் அனுமதி பெறுவதை கட்டாயமாக்கும் ஒரு சுற்றறிக்கையை புத்த சாசன மற்றும் சமய விவகாரங்கள் அமைச்சு, கடந்த 2008 ஆம் ஆண்டில் வெளியிட்டது.

மேலும், வழிபாட்டிடம் என்பதன் வரைவிலக்கணத்தை அமைச்சு கடந்த வருடம் ஒக்ரோபரில் வெளியிட்ட சுற்றறிக்கை மூலம் விரிவுபடுத்தியிருந்தது.

இந்த சுற்றறிக்கையின் படி பௌத்த விகாரைகள், இந்துக் கோவில்கள், பள்ளிவாசல்கள்,, தேவாலயங்கள், வழிபாட்டு நிலையங்கள், தியான மண்டபங்கள், சமய கற்கை நிலையங்கள் மற்றும் பொது இடங்களிலுள்ள சமய அடையாளங்கள் ஆகிய சகலவற்றையும் இந்த சுற்றறிக்கை உள்ளடக்குகின்றது.

இருப்பினும், இந்தச் சுற்றறிக்கை அரசியலமைப்பின் உறுப்புரை 10 உடன் முரண்பட்டது. ஒவ்வொருவருக்கும் சிந்தனை சுதந்திரம், சமய சுதந்திரம், விரும்பிய சமயத்தை பின்பற்றும் சுதந்திரம் உள்ளதென இந்த உறுப்புரை 10 கூறுகிறது.

இதனால், சமய ஸ்தாபனங்களை அமைப்பது கட்டுப்பாடின்றி நடைபெற்றது. குறித்த சமயமொன்றுடன் தொடர்புபடும் மக்கள் தொகையுடன் ஒப்பிடுமிடத்து சில இடங்களில் உள்ள சமய வழிபாட்டு ஸ்தலங்களின் எணணிக்கை அதிகமாக உள்ளன என அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

எனவே, நாடாளுமன்றில் ஒரு புதிய சட்ட மூலத்தை நாம் கொண்டுவரவுள்ளோம். இது தற்போது சட்ட வரைஞர் திணைக்களத்தில் உள்ளது.

பின்னர் இது அமைச்சரவைக்கு அனுப்பப்படும். சகல சமய பெரியார்களுடனும் ஆலோசித்த பின்னர் இந்த சட்ட மூலம் தாயாரிக்கப்பட்டதென தெரிவிக்கப்படுகின்றது.

# மலையகத்தில் கடும் மழை; வான்கதவுகள் திறப்பு



(கொழும்பு)

மலையகத்தில் தொடர்ந்து பெய்துவரும் அடைமழையினால் சில நீர்த்தேங்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

மேல்கொத்மலை, கெனியன், லக்ஸபான ஆகிய நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் டீ.பீ.ஜீ.குமார சிறி தெரிவித்தார்.

இதேவேளை, சில நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வான் பாயும் அளவிற்கு உயர்வடைந்துள்ளது.

களனி கங்கை, காசல்ரீ மற்றும் மவுசாகலை ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. குறித்த நீர்தேக்கங்களை அண்மித்து வாழும் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் மாவட்ட செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# துறைமுக அதிகார சபையின் செயற்பாடுகள் விஸ்தரிப்பு

(கொழும்பு)

இலங்கை துறைமுக அதிகார சபையின் செயற்பாடுகள் நடப்பு ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக சபையின் தலைவர் கலாநிதி. பிரியாத் பந்து விக்ரம தெரிவித்திருந்தார்.

2013 ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் யூன் ஆகிய மாதங்களுக்கிடையில் இலங்கைத்துறைமுக அதிகார சபையின் டேர்மினல்களின் மூலம் கையாளப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கை நடப்பு ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 6.7 வீத அதிகரிப்பை பதிவு செய்து 1.27 மில்லியன் அலகுகளாக அதிகரித்திருந்தது.

இலங்கைத் துறைமுக அதிகார சபையின் 35 ஆவது ஆண்டு வருட பூர்த்தி வைபவத்தில் உரையாற்றுகையில் கலாநிதி. பிரியாத் பந்து விக்ரம இத் தகவல்களை வெளியிட்டார்.

# அரச வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கல்

(கொழும்பு)

பொதுமக்களுக்கு கால தாமதமின்றி, சிறந்த அரச சேவையை வழங்கும் நோக்கில் அரச வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்களை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் குருநாகல் மாளிகாபிட்டிய விளையாட்டரங்கில் நடைபெற்றது.


ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் போது, குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த 600 அரச வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு ஜனாதிபதியால் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

அமைச்சர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, ஜயரத்ன ஹேரத், டி.பீ.ஏக்கநாயக்க, ஜோன்ஸ்டன் பெர்னான்டோ,



இந்திக பண்டார, வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜய சேகர உட்பட அரச உயரதிகாரிகள் பலரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# தூதுவருக்கு பிரியாவிடை



(கொழும்பு)

இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் டொன் சின் தானுக்கு நகர மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் பிரியாவிடை வழங்கினார்.

இப்பிரியாவிடை வைபவத்தின் போது செயலாளரும் தூதுவரும் சிநேகபூர்வமான உரையாடலில் ஈடுபட்டனர். இவ்வுரையாடலின் போது இரு நாடுகளுக்கிடையிலான நீண்டகால உறவு - பரஸ்பர ஆர்வங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

இலங்கைக்கு ஆற்றிய சேவையை கௌரவிக்கும் வகையில் வியட்நாம் தூதுவருக்கு நினைவுச் சின்னமொன்றையும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இவ்வைபவத்தின் போது கையளித்தார்.

# சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்க இணைந்த செயற்பாடு அவசியம்

## நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

(நெல்லியடி)

இன்றைய காலத்தில் சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்ற நிலைமை கவலைக்குரியதாகும். இத்தகைய வன்முறைகள் இடம் பெறுவதைத் தடுக்க பொதுமக்களும் சிவில் பாதுகாப்பு குழுவினரும் இணைந்து செயற்பட வேண்டும் என நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கங்கார தெரிவித்துள்ளார்.

நெல்லியடி பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் நெல்லியடி சிவில் பாதுகாப்புக் குழுக்கள் பொதுமக்களுக்கான ஆலோசனைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

சிவில் பாதுகாப்பு குழுவினர் கிராமங்கள் தோறும் சென்று சிறுவர்களின் பாதுகாப்பு, அணுகுமுறை குறித்து பெற்றோருடன் கலந்துரையாட வேண்டும்.

இதன் மூலம் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுவதாக அமையும் மேலும் தற்போது க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகியுள்ள நிலையில் ஆலயங்களில் காலையிலும் மாலையிலும் ஒலிபெருக்கி பாவனையைக் குறைத்து மாணவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் இது தொடர்பில் ஆலய நிர்வாகத்தினர், கவனம் செலுத்துமாறும் கேட்டுக் கொண்டார். மேலும் விபத்துக்களை தடுப்பதற்கு பொதுமக்கள் போக்கு வரத்து விதிமுறைகளை பின்பற்றுமாறும் அவர் அறிவுறுத்தினார். (18)

## சிகை ஒப்பனையாளர்கள் பொதுக்கூட்டம் இன்று


யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் ஒன்றியத்தின் பொதுக கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஒன்றியத் தலைவர் இரத்தினராசா தலைமையில் நடைபெறவுள்ள இப்பொதுக் கூட்டத்துக்கு பிரதம விருந்தினராக வடமாகாண பிரதித் தொழில ஆணையாளர் க.கணகேஸ்வரன், கூட்டுறவு உதவி ஆணையாளர் கு.அருந்தவநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்பொதுக் கூட்டத்தின் போது புதிய நிர்வாகத் தெரிவும், கூட்டுறவுத்திணைக்களத்தில் பதிவு செய்யும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன. எனவே யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து சிகை ஒப்பனையாளர்களும் தமது தொழில் நிலையங்களை மூடி கூட்டத்துக்கு சமூகமளிக்குமாறு ஒன்றியத்தின் செயலாளர் ஞா.சுரேந்தர் அறிவித்துள்ளார்.

குறிப்பாக வடமராட்சி கிழக்கிலுள்ள அம்பன், குடத்தனை, மணற்காடு நாகர் கோவில், கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, தாழையடி போன்ற இடங்களில் சிகை அலங்கரிப்பு நிலையங்களை நடாத்துவோர் தவறாது கூட்டத்துக்கு சமூகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## விபரங்கள் கோரல்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் 11 ஆவது ஞானச் சுடர், மலரில 2009 ஆம் ஆண்டு தை மாதம் முதல் 2013 ஆம் ஆண்டு மார்கழி மாதம வரையான காலப்பகுதியில் வெளிவந்த ஆக்கங்களை ஆக்கியவர்கள் தமது விபரங்களை (பெயர், முகவரி, விபரங்கள்) பேரவைக்கு அறிவிக்குமாறு பேரவைத்தலைவர் கேட்டுள்ளார். (01)



அருள்மிகு கைதடி நவபுரம் ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலய பட்டுக்குடைத் திருவிழா கடந்த திங்கட்கிழமை மங்கள வாத்தியங்களுடன் நடைபெற்றபோது... (51)

## கரவெட்டி சமுர்த்தி பிரிவு சேமிப்பில் முதலிடம்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் அதிகூடிய சித்திரை புத்தாண்டு சேமிப்பு செய்து முதலாம் இடத்தை பெற்று கரவெட்டி மேற்கு சமுர்த்தி பிரிவு பாராட்டு பெற்றுள்ளது.

இப்பிரிவில் பணவைப்பு செய்த சிறுவர்கள், மாணவர்கள் ஆகியவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் கந்தசாமி குகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெல்லியடி சமுர்த்தி வங்கியினால் பரிசில்கள் வழங்கப்பட்டன. இந் நிகழ்வுக்கு சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஆர்.உதயகுமார், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி ரி.மதி, சிறிநாரதர் பாடசாலை அதிபர் கே.கிரிதரன், சமுர்த்தி சங்க தலைவர்கள் போன்றோர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர். (18)






# 19 வினாடிக்குள் 200 மீற்றர் இலக்கை அடைவதே எனது கனவு

(லண்டன்)

200 மீற்றர் ஓட்டப் போட்டியில் 19 வினாடிக்குள் கடந்து புதிய சாதனை படைக்க வேண்டும் என்பதே எனது இலக்கு மற்றும் கனவு என உலகின் அதிவேக மனிதன் உசைன் போல்ட் தெரிவித்துள்ளார்.


உலகின் அதிவேக மனிதரான ஜமேக்காவை சேர்ந்த தடகள ஜாம்பவான் உசைன் போல்ட் 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டத்தில் இரண்டு முறை ஒலிம்பிக் மற்றும் உலக போட்டியில் தங்கப்பதக்கம் வென்று அசத்தியிருக்கிறார்.

27 வயது கறுப்பு வைரமான உசைன்போல்ட் 100 மீற்றர் ஓட்டத்தில் 9.58 வினாடியிலும், 200 மீற்றர் ஓட்டத்தில் 19.19 வினாடியில் பந்தய தூரத்தை கடந்து உலக சாதனையாளராகவும் கோலோச்சி வருகிறார். இந்த சாதனையை அவர் 2009ஆம் ஆண்டில் பெர்லினில் நடந்த உலக போட்டியில் படைத்தார். அவரது சாதனை இன்னும் சாய்க்க முடியாத் இமயமாக 5 ஆண்டுகளுக்கு மேல் இருந்து வருகிறது.

கிளாஸ்கோவில் நடந்த கொமன்வெல்த் விளையாட்டு போட்டியில், காயம் காரணமாக தனிநபர் பந்தயங்களை தவிர்த்த உசைன் போல்ட் 100 மீற்றர் தொடர் ஓட்டத்தில் கடைசிச் சுற்றில் ஓடி ஜமேக்கா அணிக்கு தங்கம் பெற்று கொடுத்ததுடன், அந்த அணி சாதனை படைக்கவும் முக்கிய காரணமாக விளங்கினார். தனது அடுத்த குறி என்ன என்பது குறித்து உசைன்போல்ட் தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்த ஒரு பேட்டியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், 200 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் 19 வினாடிக்குள் பந்தய தூரத்தை கடக்க விரும்புகிறேன். இது என்னுடைய மிகப்பெரிய குறிக்கோள் மற்றும் கனவுகளில் ஒன்றாகும். 100 மீற்றர் ஓட்டத்தில் நான் போதிய அளவு சாதித்து விட்டதாகக் கருதுகிறேன். 100 மீற்றர் ஓட்டத்தில் இன்னும் வேகமாக ஓட வேண்டும் என்று மக்கள் விரும்புவது எனக்கு தெரியும். இருப்பினும் எனக்கு பிடித்தமான 200 மீற்றர் ஓட்டத்தையே நான் அதிகம் விரும்புகிறேன். அதில் சிறப்பாக ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைக்கிறேன்.

உலக சாதனைகள் ஒருநாள் தகர்க்கப்பட தான் செய்யும். யார் அடுத்து ஆதிக்கம் செலுத்துவார்கள் என்பதை ஒரு போதிலும் அறிய முடியாது. இருப்பினும் 200 மீற்றர் ஓட்டத்தில் 19 வினாடிக்குள் கடந்து புதிய சாதனை படைக்க நான் கடினமாக பயிற்சி மேற்கொள்வேன். அதன் பின் நான் என்ன செய்கிறேன் என்பதை பார்க்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புகைப்பிடிக்கலாம் வாங்க லா லிகா கிளப்பிற்கு



ஜெர்மி மாத்யூ என்ற வீரரை லாலிகா கிளப் எங்கள் அணிக்கு வந்தால் புகைப்பிடிக்கலாம் என்று கூறி 20 மில்லியன் பவுண்ஸுக்கு ஒப்பந்தம் செய்துள்ளது.

பொதுவாக கால்பந்து வீரர்களுக்கு புகைப்பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கும். போட்டிகளில் நீண்ட நேரம் ஓட வேண்டியிருப்பதால் மூச்சு திணறாமல் இருக்க இந்த தடை விதிக்கப்படும்.

இந்நிலையில் ஜெர்மி மாத்யூக்கு புகைப்பிடிக்க அனுமதியளித்து லா லிகா கிளப் அவரை விளையாட ஒப்பந்தம் செய்துள்ளது.

இது பற்றி ஜெர்மி மாத்யூ கூறுகையில், என்னது நான் புகைப்பிடிப்பேனா? இது ஒருவரின் தனிப்பட்ட உரிமை. இதை யாரும் கேட்க முடியாது.

நான் ஒன்றும் மற்றவர்கள் போல் ஒரு பைக்கெட் முழுவதும் புகைக்க மாட்டேன். அதே போல் எல்லா நாட்களும் புகைப்பிடிக்க மாட்டேன். இதை ஒரு விடயமாகப் பேச தேவையில்லை என்று கூறியுள்ளார்.

இவர் மட்டுமல்ல சமீபத்தில் மரியோ படோலி கூட மறைமுகமாக புகைப் பிடிக்க முயற்சித்து மாட்டிக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

## காயத்தால் லக்மல் விலகல் டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பம்

(காலி)

இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் சுரங்க லக்மல் இன்று ஆரம்பமாகவுள்ள பாகிஸ்தான் அணியுடனான டெஸ்ட் தொடரிலிருந்து விலகியுள்ளார். தென்னர்பிரிக்கா அணியுடன் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஏற்பட்ட உபாதை குணமடையாத நிலையில் அவர் அணியில் இருந்து விலகியுள்ளார். இடது கணுக்காலில் ஏற்பட்ட உபாதையே அவர் விளையாட முடியாத நிலையை உருவாக்கியுள்ளது.

இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் உபாதையடைந்து இருந்த சமின்ட எரங்க குணமடைந்துள்ளார். அவர் முதற்போட்டியில் விளையாடுவார் என நம்பப்படுகின்றது. இலங்கை கிரிக்கெட் அணியின் முகாமையாளர் மைக்கல் டி சில்வா சுரங்க லக்மலின் இடத்திற்கான மாற்று வீரர் மிக விரைவில் அறிவிக்கப்படுவார் என கூறியுள்ளார்.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி இன்று காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டி குறித்து கருத்துத் தெரிவித்த இலங்கை அணிக் கப்டன் மத்தியூஸ், எங்களைப் பொறுத்த வரையில் இப்போட்டித் தொடர் முக்கியத்துவம் மிக்க தொடர் தான். ஒரு போட்டி தொடருக்கு எவ்வாறு தயாராகிக் கொள்வோமே அதே போன்றுதான் இப்போட்டிக்குத் தாயாராகியுள்ளோம். இப்போட்டித் தொடருடன் அனுபவ வீரர் மஹேல ஜெயவர்த்தன டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறவுள்ளது எங்களுக்கு எந்த நெருக்கடியையும் ஏற்படுத்தவில்லை. அவருக்கு அது நெருக்கடியும் இல்லை. ஆனாலும் அவருக்கு சிறப்பான பிரியாவிடை அளிப்போம் என்ற நம்பிக்கை உள்ளது. நாங்கள் வலுவான அணியாக உள்ளோம், பாகிஸ்தான் அணியை வெல்ல முடியும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. இங்கிலாந்து, தென்னாபிரிக்க அணிகளுக்கான டெஸ்ட் தொடரில் நாங்கள் நிறைய விடயங்களைக் கற்றுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாளை நான்காவது டெஸ்ட்

(லண்டன்)

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நான்காவது டெஸ்ட் போட்டி நாளை மான்செஸ்டரில் ஆரம்பமாகவுள்ளது.

டோனி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்று ஆட்டங்கள் நிறைவடைந்துள்ளன. இதில் இருஅணிகளும் ஒவ்வொரு வெற்றியைப் பதிவு செய்துள்ளன. இந்நிலையில் நான்காவது டெஸ்ட் போட்டி நாளை இங்கிலாந்தின் மான்செஸ்டரில் ஆரம்பமாகவுள்ளது.

இந்திய அணியில் அதிரடியான சில மாற்றங்கள் இடம்பெற வாய்ப்பிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் காயத்திற்கு உள்ளாகியிருக்கும் புவனேஸ்வர் குமார் விளையாடுவது குறித்து சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## செரீனா சம்பியன்

(ஸ்டான்போர்ட்)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் ஸ்டான்போர்ட் நகரில் நடைபெற்ற பேங்க் ஓப் வெஸ்ட் கிளாசிக் ரென்னிஸ் போட்டித் தொடரில், நட்சத்திர வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) சம்பியன் பட்டம் வென்றார்.

இறுதிப் போட்டியில் ஜேர்மனியின் ஏஞ்சலிக் கெர்பருடன் மோதிய செரீனா, முதல் செட்டில் 1-5 என பின்தங்கினாலும் பின்னர் அதிரடியாக விளையாடி புள்ளிகளைக் குவித்தார். டைபிரேக்கர் வரை நீடித்த அந்த செட்டை செரீனா 7-6 (7-1) என்ற கணக்கில் கைப்பற்றினார்.

இரண்டாவது செட்டிலும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய அவர் 7-6 (7-1), 6-3 என்ற நேர் செட்களில் வென்று 3ஆவது முறையாக வெஸ்ட் கிளாசிக் தொடரில் சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார்.

## கிறிஸ் கெய்ல் புதிய சாதனை



கரிபீயன் பிறிமியர் லீக் போட்டியில் விளையாடி வரும் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் உலக சாதனை படைத்துள்ளார்.

ருவெண்ரி-20 போட்டிகளில் கெய்ல் களமிறங்கிவிட்டால் மைதானத்தில் சூறாவளியாக சுழன்று அடிப்பார். அது மட்டுமல்லாது அவர் இதுவரை கடைசி 90 போட்டிகளில் டக் அவுட் ஆனதே இல்லை.

இதன் மூலம் ருடிெவன்ரி-20 போட்டிகளில் அதிகமுறை டக் அவுட் ஆகாமல் இருந்த வீரர் என்ற சாதனையை படைத்தார் கெய்ல். இதுவரை பாகிஸ்தான் அணியின் வீரர் மலிக் 89 முறை டக் அவுட் ஆகாமல் இருந்ததே சாதனையாக இருந்தது.

ஆனால் கெய்ல் 90 முறை டக் அவுட் ஆகாமல் விளையாடி உலகசாதனை படைத்தார். மற்றவர்கள் 89, 82 என்ற நிலைகளில் ஓட்டங்கள் எடுக்காமல் ஆட்டமிழந்து பட்டியலில் இருந்து வெளியேறிவிட்டனர்.

கெய்லின் சாதனை வரிசையில் இந்திய அணித்தலைவர் டோனி 80 முறை என்ற நிலையில் 4ஆவது இடத்தில் உள்ளார். டோனி சாதிக்கும் முன்னே கெய்ல் கரிபீயன் பிறிமியர் லீக் போட்டியில் விளையாடி சாதனை படைத்து விட்டார். கெய்லின் சாதனையை முறியடிக்க டோனி இன்னும் 11 முறை நிலைத்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## ஆஸி. அணியில் லயன் இணைப்பு

(சிட்னி)

சிம்பாப்வேயில் நடைபெறவுள்ள முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடருக்கான அவுஸ்ரேலிய அணியில், சுழற்பந்துவீச்சாளர் நதன் லயன் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவுஸ்ரேலியா, தென்னாரிக்கா, சிம்பாப்வே அணிகள் மோதும் முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடர், சிம்பாப்வேயில் எதிர்வரும் 25ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 6ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்த தொடருக்கான ஆஸி. அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டன.

இதேவேளை, ஒரு நாள் போட்டியில் அணியில் இடம்கிடைத்தமை மகிழ்ச்சி அளிக்கிறது என லயன் தெரிவித்துள்ளார். எதிர்வரும் பெப்ரவரி மாதம் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நியூசிலாந்து, அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ளது. எனவே, உலகக் கிண்ணத் தொடரில் விளையாட வேண்டும் என்பதே எனது நீண்ட நாள் கனவு. முத்தரப்புத் தொடரில் சிறப்பாகச் செயற்பட்டு அணியில் நிரந்தர இடத்தைப் பிடிக்க முடியற்சிப்பேன். இதன் உலகக் கிண்ண அணியில் இடம்பிடிக்க முடியும் என்று நம்புகின்றேன் எனத் தெரிவித்தார்.


அவுஸ்ரேலிய அணி விபரம்: மைக்கல் கிளார்க் (கப்டன்), ஆரோன் பிஞ்ச், ஷேன் வட்சன், ஜோர்ஜ் பெய்லி, ஸ்ரீபன் ஸ்மித், கிளென் மைக்ஸ்வெல், பிராட் ஹடின் (விக்கெட் காப்பாளர்), மிட்செல் மார்ஷ், ஜேம்ஸ் பாக்னர், மிட்செல் ஜோன்சன், பென் கட்டிங், மிட்செல் ஸ்டார்க், கேன் ரிச்சர்ட்சன், நதன் லயன்.

# மென்பந்து கிரிக்கெட் தொடர்

(அச்சுவேலி)

குப்பிளான் வடக்கு விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடாத்தும் அணிக்கு ஏழு பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 16ஆம் திகதி குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இச்சுற்றுப் போட்டியில் பங்குகொள்ளவிரும்பும் அணிகள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொண்டு, இச்சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள முடியும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (85)

# அச்சுவேலி மத்திக்கு பெருமை சேர்த்த முத்துக்கள்



வடக்கு மாகாணப் பாடசாலை அணிகளுக்கிடையிலான கராத்தே போட்டி அண்மையில் வவுனியாவில் நடைபெற்றது. இதில் அச்சுவேலி மத்திய கல்லூரி வீரர்கள் குழுக் காட்டாப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்டதுடன் தேசிய மட்டப் போட்டிக்கு முதன் முறையாக தகுதி பெற்றுள்ளனர். இதில் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ள பார்த்தீபன், கஸ்மன், நிரோஜன் ஆகியோர் பயிற்சி ஆசிரியர் சென்.சே ரமணிகாந்துடன் நிற்பதைக் காணலாம்.

# மருதங்கேணி பிரதேச செயலக பெருவிளையாட்டு நாளை ஆரம்பம்

(மருதங்கேணி)

மருதங்கேணி . பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கான வருடாந்த விளையாட்டு விழாவின் பெரு விளையாட்டுகள் நாளை முதல் நடைபெறவுள்ளன.

இப்போட்டித் தொடரில் பங்குபற்றவுள்ள அணிகளுக்கு போட்டி நிரல்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும், எனவே, போட்டி நடைபெறும் தினங்களில் குறித்த அணிகளை உரிய நேரத்திற்கு வருகை தந்து நேர விரயத்தைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

இதேவேளை, நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பெரு விளையாட்டுகள் பல நிறைவடைந்துள்ளதாகவும், விரைவில் ஏனைய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி மோகனதாஸ் தெரிவித்துள்ளார். (எஸ்.பி.)

## பாடுமீன் விளையாட்டுக்கழகத்தின் பொன் விழா கால்பந்து

# கிண்ணம் வென்றது யாழ். பல்கலை

(யாழ்ப்பாணம்)

குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகம் நடாத்திய பொன்விழா கால்பந்துத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை யாழ். பல்கலைக்கழக அணி கைப்பற்றிக் கொண்டது.

யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண ரீதியில் மாபெரும் கால்பந்தாட்டத் போட்டித் தொடரை நடாத்தியது. இப்போட்டி தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் அரியாலை ஐக்கிய அணியும் யாழ். பல்கலைக்கழக அணியும் மோதின. இதில் யாழ். பல்கலைக்கழக அணி 8-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் உடுப்பிட்டி நவஜீவன் அணியும் மோதின. இதில் இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதிக் கொண்டன. இதன் விளைவாக இரு அணிகளாலும் இறுதி வரை கோல் எதனையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. நிறைவில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் பாடுமீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் யாழ். பல்கலைக்கழகம் மற்றும் நாவாந்துறை சென். மேரிஸ் அணிகள் பலப்பரீட்சை நடாத்தின. போட்டி ஆரம்பமாகி முதலாவது நிமிடத்திற்குள் யாழ். பல்கலைக்கழக அணி அதிரடியாக ஒரு கோலைப் போட்டு முன்னிலை பெற்றது. தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய யாழ். பல்கலைக்கழக அணி கோல் அடிக்கும் வாய்ப்புக்கள் பலவற்றைக் கோட்டை விட்டது. மறுபுறத்தில் பதில் கோல் போடும் முனைப்புடன் செயற்பட்ட நாவாந்துறை சென். மேரிஸ் அணி முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வர ஐந்து நிமிடங்கள் இருக்கையில் கோல் அடித்து போட்டியைச் சமன் செய்தது. இந்நிலையில் முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் வெற்றிக் கோலை அடிக்க இரு அணிகளும் முனைப்புடன் செயற்பட்டன. இரு அணிகளுக்கும் கோல் அடிக்கும் அரிய வாய்ப்புகள் வந்தபோதிலும் இறுதி நேரத்தில் கோட்டை விட்டு சொதப்பினர். இந்நிலையில் இரண்டாவது பாதி ஆட்டம் கோல் எதனையும் பெற்றுக்கொள்ளாத ஆட்டமாக நிறைவடைந்தது. பின்னர் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் யாழ். பல்கலைக்கழக அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்ட நாயகனாக சென். மேரிஸ் அணியின் யூட், சிறந்த கோல் காப்பாளராக உடுப்பிட்டி நவஜீவன் அணியின் கிருசாந், போட்டித் தொடரின் ஆட்டநாயகனாக பல்கலைக்கழக அணியின் ஞானரூபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். கிண்ணம் வென்ற அணிக்கு 50 ஆயிரம் ரூபாவும் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட அணிக்கு 25 ஆயிரம் ரூபாவும் மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்ட அணிக்கு 15ஆயிரம் ரூபாவும் கிண்ணத்துடன் வழங்கப்பட்டன. இப்போட்டியின் பிரதம நடுவராக சுகிர்தன், பக்க நடுவர்களாக கெவின், லக்கி ஆகியோர் கடமையாற்றினர்.

இப்போட்டி நிகழ்வில் யாழ். மாவட்ட குருமுதல்வர் சகாயநாயகம், ஈ.பி.டி.பி.யின் மாநகர சபை உறுப்பினர் றீகன், வடமாகாண சபை உறுப்பினர் ஆனோர்ட், யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் அன்ரனிப்பிள்ளை உட்படப்பலர் கலந்து கொண்டு கிண்ணங்களை வழங்கி கௌரவித்தனர். (எஸ்.பி.)






# அசத்திய வடக்கு, தெற்கு அணி

(கொழும்பு)

தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தி நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் போட்டியில் அமைச்சர்கள் அணியை தோற்கடித்து வடக்கு, தெற்கு இளைஞர் தலைவர்கள் அணி வெற்றி பெற்றுள்ளது.

நாட்டில் ஒருமைப்பாட்டை அபிவிருத்தி செய்யும் பொருட்டு இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெருமவை தலைவராகக் கொண்ட அணியும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடக்கு, தெற்கு இளைஞர் தலைவர்களுக்கிடையிலான போட்டி அண்மையில் அநுராதபுர சிறைச்சாலைகள் மைதானத்தில் நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் போட்டியில் மூன்று விக்கெட்டுகளால் வடக்கு, தெற்கு இளைஞர் அணி வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இளைஞர் தலைவர்கள் அணியின் தலைவர் ஜயரங்க முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார். 12 பந்து ஓவர்களைக் கொண்ட இப்போட்டியில் முதலில் ஆடிய அமைச்சர் டலஸ் அழகப்பெரும தலைமையிலான அணி 12 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் சஜீவ 30, மொஹமட் 14, திலின 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் இளைஞர் தலைவர்கள் அணி சார்பில் டெஸ்மன், ரஞ்சித் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 105 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வடக்கு, தெற்கு இளைஞர்கள் அணி 10.1 ஓவர் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மேலன் 24, டெஸ்மன் 19, அனுஷ்யந்தன் 7 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தினேஷ், சஜீவ, மனோஜ் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகன் விருதை இளைஞர் தலைவர்கள் அணியின் மேலன், சிறந்த பந்துவீச்சாளராக டில்சான், சிறந்த களத்தடுப்பாளராக சஜீவ ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அமைச்சர் டலஸ் அழகப்பெருமாவின் அணியில் நாடாளுமன்ற உறுப்பினர்களான றொஹான் சோம சிங்க, எரிக் பிரசன்ன வீரவர்தன, வடமத்திய மாகாணசபை பிரதான அமைச்சர் எஸ்.எம்.ரஞ்சித் சமரக்கோன், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தலைவர் லலித் பியும் பெரேரா போன்றோர் இடம்பெற்றிருந்தனர். வடக்கு, தெற்கு இளைஞர் தலைவர்கள் அணியில் யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை மாவட்ட இளைஞர் கழக அங்கத்தவர்களை உள்ளடக்கிய இளைஞர் தலைவர்கள் அணி போட்டியில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# தொடரை வெல்ல இங்கிலாந்து வாய்ப்பு

(லண்டன்)


இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரை வெல்லக்கூடிய அதிக வாய்ப்பு இங்கிலாந்து அணிக்கு உள்ளது. இதற்கு இந்திய துடுப்பாட்ட வீரர்களை நிலைத்து நிற்கவிடாமல் . விரைவாக களத்தை விட்டு வெளியேற்றும் யுக்தியை இங்கிலாந்து அணிக் கப்டன்குக் வகுத்துக் கொள்ளவேண்டும். மூன்றாவது டெஸ்டில் அவர் இந்த யுக்தியைக் கையாண்டதன் விளைவே இங்கிலாந்து வெற்றிபெற முடிந்தது. இதனை இன்னும் கூர்மையாக்க வேண்டும் என இங்கிலாந்து அணியின் முன்னாள் கப்டன் ஸ்ரேரர்ஸ் தெரிவித்துள்ளார்.



கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண ரீதியில் சைக்கிள் ஓட்டப் பந்தயம் கடந்த 2ஆம் திகதி நடாத்தப்பட்டது. இதில் போட்டியாளர்கள் ஆயத்த நிலையில் நிற்பதைக் காணலாம். (51)

# வாக்குப் பலத்தை நிருபித்து என்ன பயன்?

– கே.சஞ்சயன் கட்டுரையிலிருந்து.



2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது, தமிழர்களின் வாக்குகள் வெற்றியை தீர்மானிக்கத்தக்கதாக இருந்தன.

விடுதலைப் புலிகளின் கோரிக்கையை ஏற்று வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் அப்போது வாக்களிக்காமல் இருந்தனர். அதனால், ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தோல்வியைத் தழுவினார்.

அப்போது தமிழ் மக்களை வாக்களிக்க புலிகள் அனுமதித்திருந்தால் நிலைமை தலைகீழாக மாறியிருக்கும். ஏனென்றால், மிகக் குறுகிய எண்ணிக்கையான வாக்குகளின் வித்தியாசத்தில்தான் ரணில் விக்கிரமசிங்கவின் தோல்வியும் மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றியும் நிகழ்ந்தன.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதில் தமிழர் தரப்பு தோல்வி கண்டது.

கடந்தமுறை பொதுவேட்பாளராக சரத் பொன்சேகாவை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரை மனதுடன் முன்னிறுத்தியபோதே, குழப்பங்களும் கருத்து முரண்பாடுகளும் அதிகம் ஏற்பட்டிருந்தன.

ஏனென்றால், அவரை முன்னிறுத்துவதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு, தமிழ் மக்களுக்கு என்ன இலாபம் கிட்டுமென்ற வலுவான கேள்வி தமிழர்களிடத்தில் இருந்தது. அதற்குரிய சரியான பதிலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் கொடுக்கவும் முடியவில்லை.

அதாவது மஹிந்த ராஜபக்ஷவையும் சரத் பொன்சேகாவையும் தமிழர்களால் அப்போது வேறுபடுத்திப் பார்க்க முடியவில்லை. இரண்டுமே ஓர் உருவத்தின் இரு நிழல்களாக தெரிந்தன.

இந்தப் பின்னணியில் அடுத்து நடக்கவுள்ள ஜனாதிபதி தேர்தலில் எத்தகைய அணுகுமுறையை கடைப்பிடிக்கலாம் என்ற கேள்வி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஏற்கெனவே தோன்றிவிட்டது.

ஏனென்றால், இந்த ஜனாதிபதி தேர்தலின் ஊடாக அடையப்போகின்ற விளைவு தமிழர்களுக்கு எத்தகைய பயனைத் தருமென்று ஆராயப்பட வேண்டியது அவசியமாகும்.

எந்த ஜனாதிபதியாலும் எந்த அரசியல் கட்சியாலும் தீர்க்கப்படாமல் இழுபறிப்பட்டுள்ள தமிழர் பிரச்சினைக்கு முடிவு காண்பதற்கான எந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்படாத நிலையில், ஜனாதிபதி தேர்தலை அதற்கான துருப்புச் சீட்டாகப் பயன்படுத்திக்கொள்வது குறித்து கூட்டமைப்பு சிந்திக்கலாம்.

அதாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிப்போ, 17ஆவது திருத்தச்சட்டத்தை மீள நிலைப்படுத்துவதோ தமிழர்களுக்கென்று தனியாக எந்த நலனையும் கொண்டுவந்து விடப்போவதில்லை.

ஒருவேளை, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டுவிட்டாலும் கூட, நிறைவேற்று அதிகார பிரதமர் பதவியை அவர் கையில் எடுக்க வாய்ப்புகள் உள்ளன. எனவே, இந்த ஒரு விடயத்துக்காக தமிழர்களின் வாக்குகளை பணயமாக்குவது சரியானதா என்ற கேள்வி எழுகிறது.

இன்னொரு பக்கத்தில் தமிழர் தரப்பின் அடிப்படை நோக்கம் என்னவென்று பார்க்கவேண்டும். அதாவது, மஹிந்த ராஜபக்ஷவை பதவியிலிருந்து இறக்குவதா, தமிழர் பிரச்சினைக்கு தீர்வை எட்டுவதற்கு வழி தேடுவதா என்று தீர்மானிக்கவேண்டும்.

பெரும்பாலான எதிர்க்கட்சிகள் பொது நிலைப்பாடு குறித்துப் பேசினாலும், அவற்றின் முக்கிய இலக்கு மஹிந்த ராஜபக்ஷவை பதவியிலிருந்து விலக்குவதே என்பதில் சந்தேகமில்லை.

ஏனென்றால், அவரதும் அவரது குடும்பத்தினதும் செல்வாக்கு அரசாங்கத்துக்குள் வலுப்பெறுவது எதிர்கட்சிகளுக்கு அச்சத்தைக் கொடுக்கிறது.

ஆனால், தமிழ் மக்களை பொறுத்தவரையில் அவரது அசுர வளர்ச்சி பற்றி அலட்டிக்கொள்வதாக இல்லை. ஏனென்றால், அவர்கள் இது போன்ற எதிர்ச்சக்திகளை தாங்கிப் பழக்கப்பட்டுப் போனவர்கள்.

இந்தத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பதால் என்ன இலாபம் கிட்டும்? அவரை தோற்கடிக்காமல் விடுவதால் என்ன நட்டம் ஏற்படும்? என்றும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

அது மட்டுமன்றி, இந்தத் தேர்தலில் பொதுவேட்பாளரை ஆதரிக்காமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஒரு வேட்பாளரை நிறுத்தி பலத்தை நிரூபிக்க வேண்டுமென்ற கருத்தும் உள்ளது. ஆனால், அதனால் என்ன இலாபம் கிடைக்கப் போகிறது என்ற கேள்விகளும் உள்ளன.

தமிழர் ஒருவரால் ஒருபோதும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறமுடியாது என்ற நிலையில், பலத்தை நிரூபித்து என்ன பயன்?


# இப்படியும் ஒரு ரசிகை!

இத்தாலியை சேர்ந்த மொடல் அழகி நடாலியா. ஒரு சில ஹிந்திப் படங்களிலும் நடித்துள்ளார். இவர், ஆர்ஜெண்ரீனா கால்பந்தாட்ட அணியின் பிரபல வீரர் லயோனல் மெஸ்ஸியின் தீவிர ரசிகை. சமீபத்தில் பிரேசிலில் நடந்த உலக கோப்பை போட்டிகளில், மெஸ்ஸியின் ஆட்டத்தைப் பார்த்து, அவரிடம் மனதை பறிகொடுத்து விட்டார் நடாலியா.

இதனால், மெஸ்ஸிக்காக எதையாவது வித்தியாசமாக செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில், மெஸ்ஸியின் படத்தை, தன் மார்பில் பச்சை குத்தி, அதை விதம் விதமாக புகைப்படம் எடுத்து, சமூக வலைத் தளங்களில் வெளியிட்டார். நினைத்தது போலவே, அவரின் இந்த வித்தியாசமான நடவடிக்கை, சர்வதேச அளவில் பிரபலமாகி விட்டது. ஆனால், மெஸ்ஸியிடமிருந்து, இதுபற்றி எந்தத் தகவலும் வரவில்லையே என்ற கவலையில் இருக்கிறார், நடாலியா.



# கம்ப்யூட்டர் ஆணா, பெண்ணா?



கல்லூரியில் ஆசிரியர் ஒருவர் வகுப்பு நடாத்திக் கொண்டிருக்கும் போது, “ஆண் பால், பெண் பால் வேறுபடுத்தி காட்ட வார்த்தைகள் உள்ளன. ஆனால், ஆங்கிலத்தில் உயிரற்ற சில பொருட்களை பெண்பாலாக அழைப்பது உண்டு. உதாரணமாக, கப்பல் உயிரற்ற பொருள் ஆனால், அதை ஆங்கிலத்தில் பெண்பாலாகக் கூறுவர்...“ என, ஆசிரியர் விளக்கிக் கொண்டிருந்தார். அப்போது துடுக்கான மாணவன் ஒருவன் எழுந்து, “கம்ப்யூட்டர் எந்த வகையைச் சேர்ந்தது?“ என்று, கேட்டான்.

ஆசிரியருக்கு பதில் தெரியவில்லை மொழி அகராதியிலும் இதற்கான விடை இல்லை. எனவே, வகுப்பிலுள்ள மாணவர்களை ஒரு குழுவாகவும், மாணவியரை இன்னொரு குழுவாகவும் பிரித்து, இதற்கான விடையை கண்டுபிடியுங்கள் என்றார். “நீங்கள் சொல்லும் விடையை நிரூபிக்கும் வகையில், நான்கு உதாரணங்களையும் கூற வேண்டும்...” என்றார்.

இரண்டு குழுக்களும் தனித்தனியாக கூடி கம்ப்யூட்டர் குறித்து, ஆராய்ச்சி செய்தனர். பின், மாணவியர் அனைவரும், “கம்ப்யூட்டர் ஆண் இனத்தைச் சேர்ந்தது...” என்றும், மாணவர்கள் அனைவரும், “கம்ப்யூட்டர் ஒரு பெண்...” என்றும் கூறினர். அதற்கு அவர்கள் கூறிய விளக்கம் என்ன தெரியுமா?

**மாணவியர் கூறிய விடை:**

✧ கம்ப்யூட்டரில் ஏதாவது வேலை செய்ய வேண்டுமெனில், முதலில் அதை, “பவர் ஓன்” செய்ய வேண்டும்.

✧ ஏகப்பட்ட தகவல் தொகுப்புக்கள் கம்ப்யூட்டரில் இருந்தாலும், அவைகளால் சுயமாக சிந்திக்க முடியாது.

✧ கம்ப்யூட்டர்கள் பிரச்சினைகளை தீர்க்க உதவினாலும், பல நேரங்களில் அவையே பிரச்சினைகளாக அமைகின்றன.

✧ ஒரு கம்ப்யூட்டர் வாங்கிய உடன் யோசிப்போம்... “ஐயோ... சிறிது காலம் பொறுத்திருந்தால், இதை விட சிறந்த கம்ப்யூட்டராக வாங்கியிருக்கலாமே...” என்று!

- இந்த காரணங்களால், கம்ப்யூட்டர் ஆண் இனத்தை சேர்ந்தது தான் என்று கூறினர் மாணவியர்.

**“கம்ப்யூட்டர் பெண்ணுக்குத் தான் சமம்...” என்பது மாணவர்களின் கருத்து. அதற்கு அவர்கள் கூறும் காரணம்:**

✧ கம்ப்யூட்டரின் தொழில்நுட்பம் அதை உருவாக்கியவரைத் தவிர, வேறு யாருக்கும் எளிதில் புரிவதில்லை.

✧ ஒரு கம்ப்யூட்டரில் பயன்படுத்தும் சொப்ட்வெயரை, இன்னொரு கம்ப்யூட்டரில் எளிதில் பயன்படுத்தி விட முடியாது. அதாவது, கம்ப்யூட்டருக்கு, கம்ப்யூட்டர் பயன்பாடுகள் மாறுபடும்.

✧ நாம் செய்யும் சிறு தவறுகளைக் கூட கம்ப்யூட்டர் நினைவில் பதித்திருக்கும். நெடு நாட்களுக்கு பின் கூட, அதைத் திரும்ப எடுத்துக் கூறும் ஆற்றல் அதற்கு உண்டு.

✧ ஒரு கம்ப்யூட்டரை வாங்கிய உடனே, தொடர்ந்து மாத வருமானத்தில் பாதிப் பணம், அந்த கம்ப்யூட்டரின் மற்ற பாகங்களை வாங்க செலவு செய்ய வேண்டியிருக்கும் என்றனர் மாணவர்கள்.

இவற்றில் இருந்து கம்ப்யூட்டர் ஆணா, பெண்ணா என்று உங்கள் அனுபவத்தில் நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

- கம்ப்யூட்டர் பயன்படுத்துவோரே... உங்கள் அனுமானம் என்ன?

# அழகாக மாறுங்கள்...



● சில துளிகள் பாதாம் எண்ணெய், முட்டையின் மஞ்சள் கரு இரண்டையும் கலந்து முகத்தில் மென்மையாகத் தடவிக் கொள்ளுங்கள். பதினைந்து நிமிடம் கழித்துக் குளித்தால் முகச்சருமம் பட்டுப் போல மென்மையாக இருக்கும்.

● கொஞ்சம் பாலை எடுத்து அதில் எலுமிச்சைச் சாற்றைச் சில துளிகள் பிழிந்து கலந்து முகம் பாதங்கள், கைகள், கழுத்து முதலிய இடங்களில் தடவிக் கொண்டு பதினைந்து நிமிடங்கள் கழித்துக் குளிப்பதை வழக்கமாக்கிக் கொண்டால் சருமம் ஆரோக்கியமாகவும் மிருதுவாகவும் எடுப்பாகவும் இருக்கும்.

● தினமும் நித்திரைக்குப் போவதற்கு முன்பு தேயிலைத் தண்ணீர் கொண்டு கண்களைச் சுற்றி கழுவி வந்தால் சுருக்கம், கறுப்பு வளையம் நீங்கி பளபளப்பு உண்டாகும்.


● பாதாம் பருப்புக்களை தோலுரித்து நன்றாக அரைத்து முட்டையின் வெள்ளைக் கருவையும் சில சொட்டு எலுமிச்சம் பழச் சாற்றையும் கலந்து முகத்தில் தடவி ஊறிய பின் முகத்தைக் கழுவினால் முகத்திலுள்ள கரும்புள்ளி, செம்புள்ளி மறைந்துவிடும்.

● வெள்ளரிக்காயைத் துருவி சாறு பிழிந்து எண்ணெய்ப் பசையான சருமம் உள்ளவர்கள் தடவி வந்தால் சருமத்தில் இருக்கும் நுண்ணிய துவாரங்கள் சுத்தமாகும்.

● பசும்பாலில் ஒரு தேக்கரண்டி கசகசாவை இரவில் ஊற வைத்து காலையில் நன்றாக அரைத்து தேய்த்து வர, முகம் சிவப்பழகு கிடைத்துவிடும்.

● நல்ல சந்தனத்தில் ஜாதிக்காயைப் போட்டு அரைத்து முகத்தில் தடவி வந்தால் பருக்கள் மறைந்து முகம் பளபளக்கும்.

# சாதனைக்கு ஊனம் தடையல்ல




● இசையில் சாதனை புரிந்த பித்தோவான் காது கேளாதவர்.

● இலியட், ஒடிசி போன்ற அழியாக் காவியங்களைப் படைத்த ஹோமர், பார்வையற்றவர்.

● இழந்த சொர்க்கம், மீண்ட சொர்க்கம் போன்ற உலகப் புகழ்பெற்ற காவியங்களை தனது கண் பார்வை இழந்த பின்னரே மில்டன் எழுதினார்.

● குழந்தைப் பருவத்திலேயே கேட்கும் திறனையும், பேச்சுத்திறனையும் இழந்தவர் ஹெலன் கெல்லர் என்ற பெண்மணி. பின்னாளில் அவர் ஊனத்தை உதறிவிட்டு மற்றவர் நலனுக்காகப் பாடுபட்டுப் புகழ் பெற்றார்.

# காக்காய் வலிப்பு நோய் இருந்த பிரபலங்கள்




1. சோக்ரட்டீஸ்



2. புத்தர்



3. ஜூலியஸ் சீசர்



4. அலெக்சாண்டர்



5. நெப்போலியன்

# அற்புத உலகில் ஆலிஸ்

ஆங்கில மூலம் : லூயிஸ் கரோல்
தமிழில் : சுகுமாரன்

3

ஆலிஸ், டோடோ, லோஹி, சுண்டெலி உட்பட எல்லோரும் கரையை அடைந்தனர். அவர்கள் ஈரம் சொட்டச் சொட்ட நனைந்திருந்தனர். ஈரத்தை எப்படி உலர வைப்பது? இதுதான் முதல் பிரச்சினையாகத் தெரிந்தது. அவர்கள் வட்டமாக உட்கார்ந்துகொண்டு யோசித்தனர்.

உடம்பில் ஈரம் காயாவிட்டால் சளி பிடித்துவிடுமே என்று பயந்தாள் ஆலிஸ். சுண்டெலி ஒரு பழங்காலக் கதை ஒன்றைக் கூறிவிட்டு "எல்லோருடைய உடம்பிலும் ஈரம் காய்ந்துவிட்டதா?" என்று கேட்டது.

"இன்னும் ஈரமாகத்தான் இருக்கிறது" என்றாள் ஆலிஸ். "கதை கேட்பதால் ஈரம் உலர்ந்துவிடும் என்று நான் நினைக்கவில்லை" என்றாள்.

டோடோ குறுக்கிட்டது. "நமக்குள் ஒரு ஓட்டப்பந்தயம் வைத்துக்கொண்டால் ஈரம் உலர்ந்துவிடும் என்று நினைக்கிறேன்" என்றது.

"என்ன ஓட்டப்பந்தயம்" என்று ஆலிஸ் ஆர்வமில்லாமல் கேட்டாள்.

"நாம் நேராக ஓட வேண்டியதில்லை, வட்டமாகவே ஓடலாம்" என்றது டோடோ பறவை.

டோடோ வட்டமான வடிவத்தில் ஓர் ஓட்டப்பந்தயப் பாதையை வரைந்தது. எல்லோரையும் அந்த வட்டத்திற்கு வரவழைத்தது.

எல்லோரும் வட்டத்தில் வந்து நின்றனர். ஒன்று... இரண்டு... மூன்று... இப்படி ஒன்றும் சொல்லாமலே ஓட்டப்பந்தயம் தொடங்கியது. விரும்பும்போது ஓடலாம். விரும்பாதபோது நின்று கொள்ளலாம் என்று பந்தய நிபந்தனையை டோடோ கூறியது.


எல்லாம் வேடிக்கையாக இருக்கிறது என்று ஆலிஸ் நினைத்தாள். பந்தயம் எப்போது முடியும் என்பதற்கும் வரையறை கிடையாது. பந்தயத்தில் எல்லோரும் கலந்துகொண்டு ஓடினர். அரைமணி நேரம் ஓட்டப்பந்தயம் தொடர்ந்தது. எல்லோரும் நன்றாக உலர்ந்து போனார்கள். அதனால் டோடோ திடீரென்று பந்தயம் முடிந்ததாக அறிவித்தது.

"ஓட்டப்பந்தயத்தில் வெற்றி பெற்றது யார்?" என்று அனைவரும் கேட்டனர்.

சிறிது நேரம் யோசித்த பிறகு டோடோ பதிலளித்தது: "எல்லோரும் வெற்றி பெற்று விட்டீர்கள். எல்லோருக்கும் பரிசு வழங்கப்படும்".

"என்ன பரிசு? யார் பரிசு தருவார்கள்?" என்று லோஹி என்ற கிளி கேட்டது.

"ஆலிஸ்" என்று டோடோ கூறியது. எல்லோரும் ஆலிஸிடம் பரிசு தருமாறு கேட்டனர். ஆலிஸ் பரிசுக்கு எங்கே போவாள்? அவள் திணறினாள். அவள் தன்னுடைய பையில் கையை விட்டாள். உள்ளே ஒரு டப்பாவில் இனிப்புக்கள் இருந்தன. நல்லவேளை தண்ணீரில் நனையவில்லை. ஒவ்வொருவருக்கும் ஒரு இனிப்பு வீதம்



கொடுத்தாள்.

"பரிசளித்த ஆலிஸிற்கு ஒரு பரிசு வேண்டாமா?" என்று சுண்டெலி கேட்டது.

ஆலிஸ் மறுபடியும் தன்னுடைய பையில் கையைவிட்டுப் பார்த்தாள். துணி தைக்கும்போது பயன்படுத்தும் பொப்பின்ஸ் இருந்தது. அதை எடுத்துக் காட்டினாள். டோடோ அதை வாங்கிக் கொண்டது.

"பொப்பின்ஸ்சை ஆலிஸ்க்குப் பரிசளிப்பதில் மிகுந்த பெருமைப்படுகிறோம்" என்று டோடோ சம்பிரதாயமாகக் கூறி அதை அவளிடம் கொடுத்தது. எல்லோரும் கை தட்டினர். பின்னர் இனிப்பு தின்னும் ஆரவாரம் ஆரம்பமாகியது. பெரிய பறவைகளுக்கு வாயில் போட்டு சாப்பிடுவதற்கு அந்த இனிப்பு போதவில்லை. சிறிய பறவைகளுக்கு இனிப்பு தொண்டையில் அடைத்துக்கொண்டது.

சுண்டெலி வருத்தமுடன் உட்கார்ந்திருப்பதை ஆலிஸ் பார்த்தாள். "உன்னுடைய கதையை என்னிடம் கூறுகிறேன் என்று சொன்னாயே, இப்போது சொல்" என்று கேட்டாள்.

"என்னுடைய கதை நீண்ட சோகக் கதை" என்று சுண்டெலி கூறி ஒரு கதையைச் சொல்லத் தொடங்கியது.

சுண்டெலி கூறிய கதை ஆலிஸ்க்குப் புரியவில்லை.

ஆலிஸ் தன் கதையைக் கவனித்துக் கேட்கவில்லை என்பது சுண்டெலிக்குத் தெரிந்தது. அதனால் அது கோபப்பட்டு புறப்பட்டது.

"என்னை மன்னித்து விடு. போகாதே" என்று ஆலிஸ் கூறினாள். ஆனால், சுண்டெலி போய்விட்டது.

"ரொம்ப மோசம்! எலி போய்விட்டது" என்று லோஹி கிளி கூறியது. அங்கிருந்த முதிய நண்டு ஒன்று இளைய நண்டுக்கு புத்திமதி கூறியது. "கோபப்படுவது நல்லதல்ல, தெரிந்து கொள்" என்றது.

"வாயை மூடு பாட்டி" என்று இளைய நண்டு பதிலுக்குக் கூறியது.

"என்னுடைய டினா இங்கிருந்திருந்தால் அந்த எலியைப் பிடித்துக்கொண்டு வந்திருக்கும்" என்று ஆலிஸ் கூறினாள்.

"டினா யார்?" என்று லோஹி கிளி கேட்டது. "டினா எங்கள் வீட்டுப் பூனை. என் செல்லம். வெள்ளச்சி என்று கூடக் கூப்பிடுவோம். எலி பிடிப்பதில் கெட்டிக்காரி. பறவைகளைக்கூட அது பாய்ந்து பிடிக்கும். ஒருசமயம் ஒரு கிளிக்குஞ்சைச் சாப்பிட்டு ஏப்பம் விட்டுவிட்டது" என்று ஆலிஸ் சொல்லி முடிப்பதற்குள் பறவைகள் எல்லாம் அவசரம் அவசரமாகப் பறக்கத் தொடங்கிவிட்டன.

"உறங்க நேரமாகிவிட்டது" என்று டோடோவும் கிளம்பிவிட்டது. ஆலிஸ் மட்டும் தனிமையில் இருந்தாள்.

"டினா பற்றி நான் பேசியதால்தான் எல்லோரும் போய் விட்டனர்" என்று ஆலிஸ் வருத்தத்துடன் தனக்குத்தானே கூறிக்கொண்டாள். "இங்குள்ளவர்களுக்கு டினாவைப் பற்றி தெரியவில்லை. உலகத்திலேயே மிக நல்ல பூனை அதுதான். திருடிக்கூடத் தின்னாது. என் செல்லம். டினா, உன்னை எப்போது பார்க்கப் போகிறேன் என்று கவலையில் கூறிக்கொண்ட ஆலிஸுக்கு அழுகை வந்தது. சுற்றும் முற்றும் பார்த்தாள். அவளைத் தவிர யாரும் இல்லை. சற்று தூரத்தில் எங்கோ காலடி ஓசை கேட்டது. அரைகுறையாக விட்ட கதையைக் கூற சுண்டெலி மீண்டும் வரும் என்று ஆலிஸ் எதிர்பார்த்துத் திரும்பினாள்.

ஆனால், வந்தது சுண்டெலி அல்ல...

(தொடரும்...)

# பயிர் காப்புறுதி செய்த பூநகரி விவசாயிகளுக்கு நஷ்டஈடு

(முழங்காவில்)

இந்த ஆண்டு காலபோகமழை பொய்த்த காரணத்தால் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 95 வீதமான விவசாயிகள் பாதிப்படைந்து பெருநட்டத்தை அடைந்து கஷ்டமடைவதை நாம் அறிகிறோம் இவர்கள் எல்லோரும் காப்புறுதி செய்வது பற்றி அக்கரை கொள்ளாமல் இருந்தமையால் காப்புறுதி செய்த 75 பேருக்கே நஷ்டஈட்டை வழங்க முடிந்ததாக பூநகரி பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற பயிர் காப்புறுதி சபையால் நஷ்டஈடுவழங்கும் நிகழ்வில் உரையாற்றிய காப்புறுதிக் சபைத் தலைவர் அன்ரனி ஆரியதிலக தகநாயக்கா தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கிளிநொச்சி மாவட்டத்திலேயே பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள 75 பேர் உட்பட 240 பேர்மட்டுமே பயிர்க் காப்புறுதியைச் செய்துள்ளனர்.

இயற்கை பேரழிவான நோய், வறட்சி, பெருமழை, விலங்கு ஆகியவற்றால் ஏற்படும் அழிவுகளுக்கு காப்புறுதி செய்வதன் மூலம் பெருநட்டத்திலும் நன்மை பெற முடியுமாதலால் அனைவரும் இத்திட்டம் பற்றி விரிவா அறிந்து பயன்பெற வேண்டுமென விவசாயிகளைக் கேட்டுக கொண்டார்.

பூநகரி பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் காப்புறுதிச்சபைப்பணிப்பாளர் பந்துகவீரசிங்க, கிளி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீனிவாசன் கமநலசேவை ஆணையாளர் உட்பட பலர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர். (112)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று....

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் ஆன்மீக சிந்தனையும் சமயச் சொற்பொழிவும் கல்லைநிகழ்வுகளும் தினமும் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று வருகின்றன.

இதில் ஆறாம் நாளான இன்று கவின்தரு கந்தபுராணம் என்னும் விடயம் பற்றி சைவப் புவலர் செ.பாலச்சந்திரன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து அரியாலை துரசடிப்பிள்ளையார், ஏழாலை ஆத்மஜோதி, அரியாலை ஸ்ரீ ஞான வைரவர், மயிலணி சிவன், சுன்னாகம் சொர்ணவரத காளி, சுன்னாகம் கதிரமாலைச் சிவன் ஆகிய அறநெறிப்பாடசாலைகளின் கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளள.

♦ ♦ ♦

நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடாத்தும் தெய்வீக இசையரங்கு நிகழ்வு தினமும் மாலை 6.45 முதல் 8.15 மணிவரை நடைபெற்று வருகிறது.

இதில் ஆறாம் நாளான இன்று இராதாகிருஷ்ணனின் மாணவர்களான இ.பிரசாந்தினி, த.எழினியின் வயலின் கச்சேரியும், திருமதி ஜெயபா ரதி இசையரங்கமும் பக்கவாத்திய சகிதம் இடம் பெறவுள்ளன. (42)

# முரசின் இன்றைய பலன்

(06.08.2014 புதன்கிழமை)



ஐய வருஷம் ஆடி மாதம் 21 ஆம் திகதி.
தசமித்திதி / அமிர்தசித்தம்.
அனுச நட்சத்திரம் காலை 06.51 வரை. பின் கேட்டை.
இராகு காலம் 12.04 - 01.34 வரை. சுபநேரம் 04.34 - 06.04 வரை.

**ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | உடையவன் பாராத இடத்து ஒரு முழம் கட்டையாவது போல் தொழிலில் கண்ணுங்கருத்துமாக இருங்கள், ஒய்வு பெற்ற பின்னர் தேகநிலை நன்றாக இருப்பதினால் மீள் நியமனத்திற்கு விண்ணப்பம் செய்தல். |
| ரிஷபம் | மாணவர் பிரச்சினைகளை மனிதாபிமானத்துடன் அணுகியமையினால் பெற்றோரின் பாராட்டுப் பெறல், கௌரவிப்பு நிகழ்வில் பங்குகொள்ள தம்பதியர் சகிதம் செல்லல். |
| மிதுனம் | தொழில் அபிவிருத்திக்காக கிளை நிறுவனம் ஒன்றைத் திறக்க உத்தேசம், விவாகத்தை நிறைவேற்றிய புரோக்கர்பணம் கொடுக்காமையையிட்டு வாக்குவாதம் ஏற்படல். |
| கடகம் | வெளியூர் பயணம் கைகூடவந்தவேளை பணமுடை காரணமாகக் கைவிட்டுவிடல், வேலைப்பளுவில் மூழ்கி உடல் நலத்தில் பராமுகமாக இருந்ததினால் நோய் ஏற்படல். |
| சிம்மம் | கிரகநிலைகள் பாதகமாக இருப்பதினால் நீர் மூலம் வெளியூர் செல்வதைக்கைவிடல், பழுதடைந்த உணவினை உட்கொண்டதால் தேக நலம் பாதிக்கப்படல். |
| கன்னி | பிதாவின் சொத்தினைப் பகிர்ந்து கொள்ள ஏகமனதான முடிவிற்கு வருதல், விபத்தினை தடுக்கும் முகமாக வேகத்தைக்கட்டுப்படுத்தி செலுத்த முயலல். |
| துலாம் | அரசியல் விமர்சனத்தினால் வாக்குவாதம் ஏற்பட்டு நட்புக் கெட்டுவிடல், கைப்பேசி மூலம் தொடர்பு கொண்டு நீண்ட நாட்களாக இழுபட்ட நிலுவை பெற முயற்சித்தல். |
| விருச்சிகம் | மங்கல நிகழ்வு நடாத்த நாட்குறித்த தினத்தன்று அமங்கல சம்பவம் ஏற்படல், சத்திர சிகிச்சை செய்து நோயைக குணப்படுத்த பணம் இன்மையால் பதகளிப்படைதல். |
| தனுசு | அசௌகரியமான இடத்திற்கு வந்த இடமாற்றக்கழதம் கண்டு கவலையில் ஆழ்தல், சம்பளப்பற்றாக் குறையினால் சிப்பந்தி தொழிலைக் கைவிட்டு தனித்தியங்க விரும்புதல். |
| மகரம் | ஹெரோயின் போதைப்பொருள் பயணப்பைக்குள் மறைப்பு கொண்டு வந்தமை கண்டு பிழக்கப்படல், தொழில் அபிவிருத்திக்காக மேலுமொரு கிளை நிறுவும் எண்ணம் மேலிடல். |
| கும்பம் | பொருட்களை எடுப்பதற்கு கதிரையில் ஏறியவேளை நிலைதடுமாறி வீழ்ந்து காயமேற்படல், மாணவ விசாவில் கற்க லண்டனுக்கு அழைப்புக்கழதம் கிட்டுதல். |
| மீனம் | விளை நிலங்களில் பயிர்களை நாசஞ்செய்யும் கட்டாக்காலி கால்நடைகளினால் துயர்மிகுதல், எதிர்பாராத செலவு ஏற்பட்டதால் கடன்பட நண்பர் குழாமை நாடும் நிலை ஏற்படல், சுவீப் அதிர்ஷ்டம் உண்டாகலாம். |

# ஏகாதசி தீர்த்தம்

(குருநகர்)

அளவெட்டி - நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை வியாழக் கிழமை ஏகாதசித்தீர்த்தம் பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும் 9 மணிக்கு சமய நிகழ்வுகள் இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெற்று ஸ்ரீமத் நாகவரத நாராயணர் பூமாதேவி, ஸ்ரீதேவி புடைசூழ விசேட அலங்காரத் தண்டிகையில் திருவீதி எழுந்தருள்வார்.

மதியம் 12 மணிக்கு அடியார்களுக்கான மகோஸ்வர பூசை நடைபெறும். (68)


# பெருவிழா

வவுனியா செட்டிகுளம் பெரியகட்டு புனித அந்தோனியார் ஆலய பெருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார் ஆயர் இராயப்பு யோசேப் ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க பெரியகட்டு அந்தோனியார் ஆலயத்தின்பெருவிழாவில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டிருந்த நிலையில் மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி ஏ. விக்ரர் சோசை அடிகளார்இ அருட்பணி எம்.ஏ.ஜெயசீலன் அடிகளார் இணைந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

திருப்பலியின் நிறைவில் புனித அந்தோனியாரின் திருச்சொரூப பவனி நடைபெற்றது. குறித்த திருவிழா திருப்பலியின்போது ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.(70)

# நல்லைக் கந்தனுக்கு இன்று 6 ஆம் நாள் திருவிழா



## வள்ளி தெய்வானை மணவாளனே!

ஆறுபோல வருமருளால் அவனியெலாம் குளிரட்டும்
ஈறுகூட இன்றிமக்கள் அலைகடலாய்ப் பொங்கட்டும்
நீறுபூசி நெற்றியெலாம் வெற்றிவேலை நினைக்கட்டும்
சேறுகுனழத்தாடக் கண்கள் பரவசநீர் சொரியட்டும்
சாறுசேர்க்க செந்தமிழும் கனியதுவாய் உதிரட்டும்
தேறுதலும் ஆறுதலும் கந்தனிங்கு வழங்கட்டும்
பாறுவினை பாறுவண்ணம் பக்திசுவை மோதட்டும்
ஊறும்பக்தி பெருக்கெடுக்க அடியார் வழிவகுக்கட்டும்.

-ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம் மூளாய்-

## அலங்கார கந்தனே!

பச்சை மயில் மீதேறி பறந்து வரும் வேலா
பகல் இரவாய் உன்தரிசனம் கண்டு மகிழ்கிறோம்
பசித்திருந்து விழித்திருந்து நோன்பு கொண்டோம்
பற்றுருதி கொண்டே அல்லும் பகலும் உன்பதியில்

அடியவர் வினை தீர்த்திடவே வீதி உலாவருகிறாய்
அழகு மயில் மீதேறியே அலங்காரத்துடன்
அடியவர்கள் ஆனந்தத்துடன் அணஅணியாய திரள்கின்றனர்
அன்பைச் சொரியும் பக்தர்கள் குறைதீர்த்தருள்வாய்.

-பூநகர் பொன்.தில்லைநாதன்-

## நல்லையில் உறைபவனே!

தொல்லை வினை தீர்க்கும் நல்லைக் கந்தனே!
காத்தருள் புரிவாய் கடைக்கண்ணால் பார்த்தே!
இல்லை யெனாது வரமீந்தருளும் முருகனே!
ஈசன் திருமகனே! வள்ளி மணவாளனே!
கல்லை யொத்த மனமும் கசிந்துருகச் செய்யும்
காட்சிதரும் கந்தனே! ஆறுமுகனே!
நல்லை யிலுறைந்து நல்லருள் புரியும் வேலனே!
முத்துக் குமரனே சரணம்! சரணம்!

-கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்-

## சூரன் பகையோட்டியவனே!

தந்தைக்குக் குருவானவரே! தரணியிலே புகழ்பூத்தவரே!
விந்தைகள் பலபுரிந்தே! வீறு கொண்டசூரன் பகையோட்டியவரே!
செந்தமிழர் கடவுளரே! சேயோன் எனும் நாமமுடையவரே!
நம்தமிழர் வாழ்வினிலே நல்லதீர்வைத் தாருமையா!

-கவிஞர் சரசாலையூரான்-

## பேரருள் கிடைத்திடும்!

ஊர்வீதி யாலே உடம்பால் உருண்டுதலஞ்
சேர்கின்ற பக்தர் செயலுக்குத் - தீர்வாக
பேறருளி நல்லூர்ப் பெருமான் அவர்க்குற்ற
ஊறகற்று வாரென் றுணர்.

-நல்லைக் கந்தன் பாமாலை-

## கருணை செய்வான்!

நல்லூர் என்றே நாமம் துலங்க
நம்மால் ஒன்றும் செய்வ தேதாம்
கல்லும் உருகும் கந்தன் பேரால்
கருணை செய்வான் கரங்கள் கூப்பு!

-நவாலியூர் கவிராஜர்-

# தொழில்நுட்ப மாற்றங்களுக்கேற்ப அறிவாற்றலை மேம்படுத்த வேண்டும்

## - இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு -

இன்றைய நவீன விஞ்ஞான, நாகரீக தொழில்நுட்ப மாற்றங்களுக்கேற்ப சிறுவர்களின் அறிவு ஆற்றல்கள் பல்வேறு துறைகளிலும் மேம்படுத்தப்பட வேண்டும். அப்போது தான் எதிர் காலத்தில் நாட்டை வழிநடாத்தச் செல்லும் சிறந்த பிரஜைகளை உருவாக்க முடியுமென இளைப்பாறிய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் செல்வி தர்சனா செல்வராஜா தலைமையில நடைபெற்ற பருத்தித்துறை கலைமகள் சர்வதேசக் கல்லூரியின் ஆங்கில தின விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இளைப்பாறிய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரமூர்த்தி இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

இன்றைய சிறுவர்களே நாளைய நாட்டை வழி நடாத்திச் செல்லும் வலிமை மிக்க தலைவர்களாவர் அவர்களை நாட்டிற்கு சிறந்த பிரஜைகளாக உருவாக்குவது சமூகத்தின் முக்கிய கடமையாகும்.

சிறுவர்களுக்குச் சர்வதேச மொழியான ஆங்கிலத்தைச் சிறுவயது முதலே போதிக்கப்பட வேண்டும். கணனி அறிவை மேம்படுத்துவதில் அதிக கவனமெடுக்க வேண்டும் ஆங்கிலமும் கணனியும் மாணவர்களின் இருகண்களாகும்.

கலைமகள் சர்வதேச கல்லூரி சிறுவர்களின் கல்வியறிவை மேம்படுத்துவதில் முன்னணியில் நிகழ்வது மகிழ்ச்சிக்குரியது சிறுவயது முதலே சிறுவர்களுக்கு ஆங்கிலக் கல்வி போதிக்கப்படும் போது அவர்களது ஆங்கில அறிவு மேம்பாடடைவதுடன் செழுமையும் அடைகின்றது.

இன்று இங்கு இடம்பெற்ற சிறார்களின் ஆடல், பாடல், பேச்சு, நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் மிகத் திறமையாகவிருந்தன. இச்சிறார்களை வழிநடாத்தும் ஆசிரியர்களின் சேவைகள் பாராட்டுக்குரியன. இச்சர்வதேச கல்லூரி மேலும் அபிவிருத்தியடைய அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

வடமராட்சி வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் ஐ.செல்வராசா, வட இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் எஸ் இரவீந்திரன் ஆகியோர் உரையாற்றினர். சிறார்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (01)

## மண்டைதீவு வேப்பந்திடல் முத்துமாரியம்மன் கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு வேப்பந்திடல் முத்துமாரியம்மன் கோவில் திருவிழா கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நேற்று ஐந்தாம் நாள் திருவிழா நிகழ்வு நடைபெற்றதுடன் போர்க்கால சூழ்நிலைகள் காரணமாக வேப்பந்திடல் முத்துமாரியம்மன் கோவில் சேதங்களுக்குள்ளாகி பூசை வழிபாடுகள் இல்லாது இருந்து வந்தது. மண்டை தீவுப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் அங்கு மீள்குடியேற்றப்பட்டதனையடுத்து அப்பகுதி இந்து மக்களால் இந்த ஆலயம் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகமும் நடைபெற்றிருந்தது.

இந் நிலையில் தற்சமயம் வருடாந்த திருவிழா நிகழ்வு மீளவும் கடந்த முதலாம் திகதி ஆரம்பித்திருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# சபாபதி நிதியத்தின் நினைவுதின நிகழ்வு



கிளிநொச்சியில் பல் திறமையுள்ள மாணவர் சமுதாயத்தின் முன்னோடியும் சிறந்த நிர்வாகியும் முன்னாள் கல்விப் பணிப்பாளருமான அமரர் பொன். சபாபதி நிதியத்தின் நினைவு நிகழ்வு அண்மையில் கிளிநொச்சி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையில் நடைபெற்றது.

ஆசிரியர் எஸ்.ஆர்.ஜெ.சுதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டு துறை அமைச்சர் த.குருகுலராசா கலந்துகொண்டார்.

ஓய்வு நிலை விருந்தினர்களாக வடமாகாணசபை உறுப்பினர் ப.அரியரத்தினம் முன்னாள் பிரதிக் கல்விப்பணிப்பாளர் சின்னராசா முன்னாள் பிரதிக்கல்விப பணிப்பாளர் செல்வராசா முல்லைத்தீவு முன்னாள் பிரதி கல்விப்பணிப்பாளர் சி.நாகரட்ணம் சிறப்பு விருந்தினர்களாக மருத்துவ அத்தியட்சகர் சத்தியமூர்த்தி பிரதிக்கல்விப்பணிப்பாளர் சிறீகுமரன் முல்லை மாவட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் ஆதவன் உதவிக்கல்விப் பணிப்பாளர் கோசலை ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ம.சத்தியகுமார் பௌதீகவியல் ஆசிரியர் இ.குமரன் கிளிநொச்சி தமிழ் சங்கத் தலைவர் இறைபிள்ளை வன்னி விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் ரூபராஜ் கிளிநொச்சி சிங்கர் பிளஸ் முகாமையாளர் விஜயகுமார் யாழ். நகர் நியூ சிற்றி ரெக்ஸ் உரிமையாளர் வசிகரன் அமரர் பொன்சபாபதியின் மாணவன் ஜேர்மனி கிருபாகரன் ஆகியோரும் கலந்து கொண்டதுடன் விசேடமாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கல்ந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

இந்த ஆசியுரைகளை கிளிநொச்சி கந்தசாமி கோவில் தேவஸ்தான குருக்கள் பிரம்மசிறீ ஜெகதீஸ்வரக்குருக்களும் அன்னை இல்ல இயக்குநர் அருட்தந்தை அன்ரனி சில்வஸ்ரரும் நிகழ்த்தியதைத் தொடர்ந்து அமரர் பொன்.சபாபதி நினைவுரையை கிளிநொச்சி மகா வித்தியாலய அதிபர் பங்கயற்செல்வன்வழங்கினார். அத்துடன் அதிஸ்ட இலாப சீட்டிழுப்பு பெற்றோரை இழந்த மற்றும் மாற்றுத்திறனாளிகளாக பல் கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கு ஊக்குவிப்பு நிகழ்வு என்பனவற்றுடன் விழிப்புலனற்றோரின் இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றன.

## செபஸ்தியார் ஆலய பெருவிழா

(பூநகரி)


பூநகரி மண்ணித்தலை செபஸ்தியார் ஆலய பெருநாள் எதிர்வரும் 24 ஆம் திகதி சிறப்புற நடைபெறவுள்ளது.

யாழ்.குடாநாட்டில் உள்ள கிறிஸ்தவ மக்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் இப்பெருநாள் பூசைக்கு பலவுள்ளதால் கடந்த முதலாம் திகதி இப்பெருநாளுக்கான ஏற்பாடுகளை செய்வதற்கான ஒழுங்கமைப்புக் கூட்டம் பூநகரி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது.

பூநகரி பொலிஸ் பிரிவு அதிகாரி இராணுவ அதிகாரி கடற்படை அதிகாரிகள் உட்பட பூநகரி பிரதேச சபையினர் சுகாதாரப் பகுதியினர் ப.நோ.கூ.சங்கத்தினர், கிராம சேவகர்கள் உட்படப் பல தரப்பினர் கலந்துகொண்டு செயற்பாடுகள் சம்பந்தமாக ஆலோசித்தனர். (112)

# ஆயுர் வேதம்

## இரத்தத்தில் ஈமோகுளோபின் அளவு குறைந்து விட்டதா...?




இரத்தத்திற்குப் போதுமான அளவு ஊட்டச்சத்து கிடைக்காமற் போவதற்கான காரணங்களை ஆயுர்வேதம் விளக்கிக் கூறுகிறது. பித்தத்தை முக்கிய அம்சமாக கொண்ட மூன்று தோஷங்களாகிய வாதம், பித்தம் மற்றும் கபம் சீற்றமடைகின்றன.

பலம் மிக்க வாயுவினால் உந்தப்பட்டு இதயத்திலுள்ள பித்தமானது 10 தமனிகளிலும் பரவிய பிறகு உடல் முழுவதும் பரவுகிறது. கபம், சருமம், இரத்தம், மாம்சம் ஆகியவற்றைக் கெடுப்பதுடன் சருமம், மாம்சம் இவற்றின் இடையே தங்கி சருமத்தில் வெண்மை, மஞ்சள், பச்சை ஆகிய நிறங்களை தனித்தனியாக உண்டாக்குகிறது.

ஹீமோகுளோபின் குறைவினால் வெண்மை அதிகமாகக் காணப்படுவதால் பாண்டு என்றும் தமிழில் சோகை நோய் என்றும் குறிப்பிடப்படுகிறது.

உடலில் ஹீமோகுளோபின் குறையத் தொடங்கும்பொழுது இதய படபடப்பு, சருமம் வறண்டு போதல், ருசியின்மை, சிறுநீர் மஞ்சளாக இருத்தல், வியர்வையின்மை, பசி மந்தம், களைப்பு ஆகியவை காணப்படும்.

ஹீமோகுளோபினின் குறைவினால் உடல் கனம், தாதுக்களின் தளர்ச்சி, பலக்குறைவு, ஐம்புலன்களின் தளர்ச்சி, இதய பலவீனம், கண்கள் வீங்கி இருத்தல், உடல் தளர்ச்சி, கோபம் கொள்ளுதல், காறித் துப்புதல், பேச்சுக் குறைவு, உணவு வேண்டாமை, குளிர்ச்சியில் வெறுப்பு, ரோமங்கள் உதிர்தல், பசிக்குறைவு, தொடையில் ஓய்ச்சல், காய்ச்சல், மூச்சிரைப்பு, காதில் ஒலி, பிரமை, சிரமம் ஆகியவை பொதுத்தோற்றங்களாகக் காணப்படும்.

இந்த ஹீமோகுளோபின் குறைவானது பித்தத்தை அதிகமாகக் கொண்டு ஏற்படுவதால் பித்தத்தை வெளியேற்றி அடுத்ததாக வாத, கப தோஷங்களை ஜெயிப்பதன் மூலம் ஹீமோகுளோபின் அளவை நம்மால் அதிகரிக்கச் செய்ய முடியும்.

ஆயுர்வேத நெய் மருந்துகளாகிய கல்யாண க்ருதம், பஞ்சகவ்ய க்ருதம், மஹாதிக்தக க்ருதம், தாடிமாதி க்ருதம் ஆகியவற்றில் ஒன்றை உடலுக்கு நெய்ப்பு ஏற்படுமளவு குடிக்கச் செய்தபிறகு வாந்தி மற்றும் பேதி மருந்துகள் கொடுத்துக் குடலை சுத்தம் செய்ய வேண்டும்.

இதற்கு அதிமதுர கஷாயத்தில் இந்துப்பு, மருக்காரைப்பழம், தேன் ஆகியவை சேர்த்து வாந்தி செய்வித்தலும், பசுவின் சிறுநீர் விட்டு அரைத்த கடுக்காய்த் தோல் அல்லது பசுவின் நீரில் வேக வைக்கப்பட்ட த்ரிபலயை உட்கொள்ளச் செய்வதன் மூலமாகவும், பேதி மூலமாகவும் குடலைச் சுத்தம் செய்து கொள்ளும் சிகிச்சையை நம் முன்னோர் கையாண்டனர்.


குடல் சுத்தம் ஏற்பட்ட பிறகு, வாஸாகுடூச்யாதி கஷாயம், நவாயஸம் சூரணம், புனர்நவமண்டூரம், மண்டூர்வடகம், த்ராகக்ஷாதி லேஹ்யம் போன்ற ஆயுர்வேத மருந்துகளை மருத்துவரின் ஆலோசனைப்படி சரியான விகிதத்தில் நேர அமைப்புடன் சாப்பிட்டு வர இரத்தத்தில் ஹீமோகுளோபினுடைய அளவு நன்றாக வளர்ந்து பிராண வாயுவின் உட்சேர்க்கையானது நுரையீரல் வழியாக உடலை அடைந்து கழிவுப் பொருளாகிய கரியமில வாயுவை வெளியேற்றுவதும் சீராக நடைபெறும்.

இதனால் மேற்குறிப்பிட்ட பலக்குறைவு, இதயபலவீனம், புலன்களின் தளர்ச்சி போன்றவை மாறக்கூடும். சுரப்பிகளின் செயற்பாடு இதன் மூலம் சீரடையும்.

ஹீமோகுளோபினை அதிகரிக்கக் கூடிய உணவு வகைகளாகிய முருங்கைக் கீரை, பசளிக்கீரை, பொன்னாங்கண்ணிக் கீரை, கருவேப்பிலை, கொத்தமல்லிக்கீரை, வெந்தயக்கீரை, விற்றமின் பி சத்து நிறைந்த பால் வெண்ணெய், முட்டை, பச்சைக் காய்கறிகள், கோதுமை, தானியத்திலிருந்து பெறப்பட்ட மா வகைகள், பேரீச்சம்பழம், பீற்ரூட், வெல்லம் கலந்த பொட்டுக் கடலை, தேங்காய், மாங்காய், பட்டாணி கலந்த சுண்டல் போன்ற இரும்பு சத்து நிறைந்த உணவுப் பொருட்களை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்தச் சத்துப் பொருட்களில் அடங்கியுள்ள மூலப்பொருட்களை உடல் ஏற்றுக் கொள்வதற்கு குடல் சுத்தமும் பசித் தீயின் மேன்மையும் முக்கியமானவை. இதை மனதில் கொண்டே ஆயுர்வேதம் குடல் சுத்தி முறைகளை வலியுறுத்தி அதன் பிறகே மருந்துகளையும், உணவுகளின் சிறப்பையும் எடுத்துக் கூறுகிறது.


நேரடியாக ரொனிக் மருந்துகளைச் சாப்பிடுவதன் மூலமாக ஏற்படும் ஹீமோகுளோபின் வளர்ச்சியானது ஒரு தாற்காலிக நிவாரணமாக மட்டுமே அமையக்கூடும். அதுவே நிரந்தரத் தீர்வாகாது.

பருத்தித்துறை கலைமகள் சர்வதேச பாடசாலையின் ஆங்கிலதின விழாவிலே விருந்தினர்கள் பான்ட் வாத்தியத்துடன் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினர்கள் இளைப்பாறிய ஆங்கில உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சுந்தர மூர்த்தி மங்கள விளக்கேற்றி ஆரம்பிப்பதையும் வட இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் எஸ்.இரவீந்திரன் பரிசில்கள் வழங்குவதையும் காணலாம். (01).

# கடற்றொழில் செய்வதற்கான வாய்ப்பை தக்க வைக்க முயற்சிக்க வேண்டும்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் கடலில் சுதந்திரமாக தொழில் செய்வதற்கான வாய்ப்பு கிட்டியுள்ளது அதனை தக்க வைத்துக் கொள்வதற்கு கடற்றொழிலாளர்கள் முயற்சிக்க வேண்டும் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித் துள்ளார்.

கடந்த சனிக்கிழமை மாதகல் இராஜ இராஜேஸ்வரி கடற்றொழிலாளர் சங்க நிர்வாகத்திற்குட்பட்ட தொழிலாளர்களை சந்தித்து கலந்துரை யாடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஒரு சமூகத்தின் பலம் என்பது அவர்களின் ஒன்றுபட்ட சக்தியிலேயே தங்கியிருக்கின்றது ஆனால் ஒரு இனமோ சமூகமோ பல பிரிவுகளாகவும் பல கொள்கைகளின் அடிப்படையிலும் பிரிந்து செயற்பட முனைகின்ற சந்தர்ப்பத்தில் பலத்தை இழந்து விடுகின்றனர். இதனால் அவர்களுக்கு எதிராக உருவாகின்ற சவால்களை சந்திக்கின்ற அல்லது அதனை எதிர்கொள்கின்ற பலம் அவர்களிடமிருந்து அற்றுப் போய்விடுகின்றது இது வரலாற்று படிப்பினையும் கூட.

இன்று கடற்றொழிலாளர்கள் பல சவால்களுக்கும் விளைவுகளுக்கும் முகங்கொடுக்க வேணடியவர்களாக உள்ளனர் அது மாதகல் கடற்றொழிலாளர்களுக்கு மட்டும் விதிவிலக்கானதல்ல இந்நிலையில் மிகக் குறுகிய பிரதேசத்திற்குள் கடற்றொழிலில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்கள் ஒரு சங்க நிர்வாகத்தின் கீழ் இயங்க முயற்சிக்க வேண்டும் மாறாக அவர்கள் பல சங்கங்களாக பிரிந்து செயற்படுவது அவர்களின் நலன்களுக்கே பாதிப்புக்களை ஏற்படுத்தும். எனவே இவ்விடயத்தில் மாதகல் பிரதேச கடற்றொழிலாளர்கள் தீர்க் கமான சிந்தனையின் அடிப் படையில் செயற்பட முயற்சிக்க வேண்டும். நிலைமைகளை மேலும் மோசமாக்கி தொழிலுக்கு இடையூறுகளை ஏற்படுத்திக் கொள் ளும் செயற்பாடுகளை தோற்று விப்பதற்கு அவர்கள் முயற்சிக் கக் கூடாது.

இன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலில் நாம் யாழ். மாவட்டத்தில் உள்ள பல உயர்பாதுகாப்பு வலயங்களை மீட்டுள்ளோம தொடர்ந்தும் மீதமுள்ள பகுதிகளையும் மீட்டெடுப்பதற்காக முயற்சித்து வருகின்றோம். எனவே அதற்கு வலுச்சேர்க்கும் வகையில் மக்களின் செயற்பாடுகள் அமைய வேண்டுமே தவிர மாறாக இருக்கும் பிரதேசங்களிலும் காவலரண்களையும் படைமுகாம்களையும் புதிதாக அமைப்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்கும் நடவடிக்கைகளில் மக்கள் ஈடுபடக் கூடாது. ஆனால் அண்மைக்காலமாக மாதகல் உள்ளிட்ட சில கடற் பகுதிகளிலிருந்து வரும் சில தகவல்கள் தொடர்பிலும் அதுசார்ந்த சட்டத்திற்கு புறம்பான செயற்பாடுகள் தொடர்பிலும் அனைத்து தொழிலாளர்களும் விழிப்புடன் செயற்பட வேண்டும்

இந்நிகழ்வில் வலி/மேற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் பாலகிருஸ்ணன் (ஜீவன்) மானிப்பாய் பிரதேச சபையின் உறுப்பினர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா) பச்சிலைப் பள்ளி பிரதேசசபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் முரளிதரன் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள யாழ்.மாவட்ட பிரதிப்பணிப்பாளர் கணேசமூர்த்தி மற்றும் இராஜ இராஜேஸ்வரி கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் செயலாளர் மற்றும் நிர்வாகத்தினர் கடற்றொழிலாளர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# மண் அகழ்வைத் தடுக்கச் சென்ற கிராம அலுவலர் மீது தாக்குதல்

## வல்வெட்டித்துறை பொலிஸில் முறைப்பாடு

யாழ்.உடுப்பிட்டி விறாட்டிக் குளத்தில் அனுமதியின்றி மண் அகழ்ந்தவர்களைத் தடுக்கச் சென்ற தன் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக ஜே / 352 கிராம அலுவ்லர் நாகரத்தினம் மகாநேசன் நேற்று முன்தினம் மாலை முறைப்பாடு செய்துள்ளதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மேற்படி குளம் நீரின்றி வற்றியிருக்கும் நிலையில், நேற்று முன்தினம் மதியம் உழவு இயந்திரங்களுடன் வந்த சிலர் குளத்தில் அனுமதியின்றி மண் அகழ்ந்துள்ளனர்.

அது தொடர்பாக அப்பகுதி மக்கள் கிராம அலுவலருக்கு அறிவித்தனையடுத்து, கிராம அலுவலர் மண் அகழ்வு நடவடிக்கையினைத் தடுக்கச் செனறுள்ளார். இதன்போது, மண் அகழ்வில் ஈடுபட்டவர்கள் தன்னைத் தாக்கியதாக கிராம அலுவலர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# அனுமதியின்றி மண் ஏற்றிச் சென்ற இருவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம்

யாழ். வல்வை வீதி வழியாக அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரம் மற்றும் கன்ரர் ரக வாகனம் ஆகியவற்றில் மண் கொண்டு சென்ற இருவருக்கும், மல்லாகம் நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ஜோய் மகிழ்மகாதேவா தலா 10 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தார்.



ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய சந்தேக நபரும் அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய சந்தேகநபரும், அச்சுவேலிப் பொலிஸாரினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்யப்பட்டனர்.

ஆலயம் ஒன்றின் வெளிவீதிக்கு மண் போடுவதற்காக, வல்வைப் பகுதியிலுள்ள தரிசு நிலத்திலிருந்து அனுமதியின்றி மண்வெட்டிச் சென்றுகொண்டிருந்த போதே மேற்படி சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

தொடர்ந்து, மேற்படி நபர்களை மேலதிக நீதவான் முன்னிலையில் நேற்று முன்தினம் மாலை ஆஜர்ப்படுத்திய போதே நீதவான் தண்டம் விதித்தார்.

# முள்ளிவாய்க்கால் பகுதியில் தூவல் நீர்ப்பாசன பயிர்ச் செய்கை

## வெங்காயச் செய்கையில் அதிக விளைச்சல்

(கிளிநொச்சி)

முள்ளிவாய்க்கால் பகுதியில் நீர் தட்டுப்பாட்டுக்கு உகந்த நர்ப்பாசன முறையான தூவல் நீரப்பாசன முறையைப் பயன்ப டுத்தி மக்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றனர்.

இதற்கான உபகரணங்களை அனர்த்த முகாமைத்துவப் பிரிவு வழங்கியுள்ளது.

முள்ளிவாய்க்கால் மக்கள் சின்ன வெங்காயப் பயிர்ச் செய்கைளில் ஈடுபட்டு சிறந்த விளைச்சலைக் கண்டுள்ளனர்.



நீர்த்தட்டுப்பாடான காலத்தில் கிடைக்கும் குறைந்தளவான நீரைப் பயன்படுத்தி இந்த நீர்ப்பாசன முறையை பின்பற்றுவதன் மூலம் சிறந்த பலனை எட்டமுடியும் என்று முள்ளிவாய்க்கால் விவசாயிகள் கூறுகின்றனர்.

# ஓமானில் வேலைவாய்ப்பு பெற்றுச் சென்ற இலங்கைப் பெண்ணுக்கு ஏற்பட்ட கதி

ஓமானில் வேலைவாய்ப்பிற்காக சென்ற உதேனி தம்மிக்கா என்ற யுவதிக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக விசாரணைகளை நடாத்துவதற்கு விசேட குழுவொன்று அமைக்கப் பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேராவின் ஆலோசனைக்கு அமைய இந்த விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் செயலாளர் மற்றும் வெளிநாட்டு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர், பொலிஸ திணைக்களத்தின் மகளிர் பிரிவிலுள்ள பொலிஸ் அதிகாரி ஆகியோர் இந்தக் குழுவில் அடங்குகின்றனர்.

2014 ஜனவரி மாதம் 10ஆம் திகதி பணியகத்தில் பதிவு செய்த பின்னர் ஓமானுக்கு வேலை வாய்ப்பிற்காக சென்ற குறித்த யுவதி, கடந்த மார்ச் மாதம 31ஆம் திகதி தனது தொழில் வழங்குநரால் பாலியல் வல்லு றவுக்கு உட்படுத்தப்பட்டுள் ளதாக 2014 ஏப்ரல் 14ம் திகதி அவரது கணவருக்கு தெரிவித் துள்ளார்.

பெண்ணின் கணவர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு செய்த முறைப்பாட்டை அடுத்து ஏப்ரல் மாதம் 29ம் திகதி ஓமானில் உள்ள இலங்கை தூதரகத்தின் பாதுகாப்பு இல்லத்திற்கு அப்பெண் கொண்டு வரப்பட்டார்.தற்போது அந்தப் பெண் கர்ப்பமுற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக அவர் இரண்டு தடவைகள் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த இரண்டு வைத்திய பரிசோதனைகளிலும் இவர் கருவுற்றிருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மீண்டும் மே மாதம் 22ஆம் திகதி அவரை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தினர். இந்த வைத்திய பரிசோதனையிலும் அவர் கருவுற்றிருக்கவில்லை என தெரிவிக்கப்பட்டது.

எனினும் தூதரகத்தில் உள்ள தொழிலாளர் பிரிவின் அதிகாரிகளினால் இந்த யுவதி கருக் கலைப்பு செய்யப்பட்டார் என ஊடகங்கள் குற்றம்சாட்டியிருந்தன.

இது தொடர்பாக அந்நாட்டிலுள்ள இலங்கை தூதுவர் கடந்த ஏப்ரல் 23ஆம் திகதி முதல் விசாரணைகளை ஆரம்பித்திருந்தார். இந்த சம்பவம் தொடர்பாக பல்வேறான தகவல்கள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன.

எனவே, இந்த சம்பவம் தொடர்பாக ஓமானுக்கே சென்று விசாரணைகளை நடாத்துவதற்கு அமைச்சர் டிலான் பெரேரா தீர்மானித்துள்ளார். இதனடிப்படையில் மேற்படி மூவர் கொண்ட விசாரணைக்குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் சில தினங்களில் இக்குழு ஓமானுக்கு புறப்பட்டுச் செல்லும் என்று அமைச்சின் செயலாளர் நிஸங்க விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்

# G.C.E. (O/L) Examination model Paper

## கணிதம்

இல :1

### பகுதி I

01) புத்தகம் ஒன்றின் விலை ரூ. 60 உம், புற அட்டையின் விலை ரூ. 10 உம் ஆகும். இரு புத்தகங்களினதும் புற அட்டைகள் இரண்டினதும் விலை எவ்வளவு?

02) 4008 Kg, மெட்ரிக் தொன்னில் தருக.

03) 4.08 x 0.1 பெறுமானம் காண்க.

04) ஒருவருக்கு $\frac{1}{2}$ படி 4 பாண்களை எத்தனை பேருக்குப் பங்கிடலாம்.

05) $\frac{1}{4}$ சதவீதத்தில் தருக.

06) $\frac{1}{8} + \frac{1}{4}$ பெறுமானம் காண்க.

07) 8, 7,6,8,7,6,9,4,6 இவ் வெண்தொடரின் ஆகாரம் யாது?

08) 2, 8 இல் பெருக்கலிடை யாது?


09) $\frac{x}{2} = 3$ x இன் பெறுமானம் காண்க.

10) 6 - 10 வகுப்பாயிடையில் நடுப்பெறுமானம் என்ன?

11) முக்கோணி ABC யில் $\hat{A} + \hat{B} = 120^0$ ஆகும். $\hat{B} + \hat{C} = 100^0$ ஆகும்.


$\hat{C}, \hat{B}$ யின் பெறுமானம் காண்க.

12) $1011_{இரண்டு} - 101_{இரண்டு}$ இன் பெறுமானத்தினைக் காண்க.

13) 


இம் முக்கோணம் இரண்டிலும் ப: கோ: ப எனும் சந்தர்ப்பத்தின் கீழ் ஒருங்கிசைவதற்கு வேண்டிய எஞ்சிய அங்க சோடியினை எழுதுக.


14) (3x + 1) (4 - x) சுருக்குக.

15) 


PQSR வட்ட நாற்பக்கங்களாகும். இங்கு QSR ஐ காண்க.

16) $\sqrt{V} = x^2 - 2gh$ எனின் x ஐக் காண்க.

17) -4 , - 10, 16 ............... இக்கூட்டல் விருத்தியில்,
1) பொது வித்தியாசம் காண்க.
2) 4 ஆவது உறுப்பினைக் காண்க.

18) 


x இன் பெறுமானத்தினைக் காண்க.

19) a+ 2 உம், b = -3 எனின், $\frac{3a^3}{b^2}$ இன் பெறுமானம் காண்க.

20) A யிலிருந்து B யின் திசைக்கோள் $048^0$ ஆகும். B யிலிருந்து A யின் திசைக்கோள் யாது?

21) $log_3 243$ இன் பெறுமானத்தினைக் காண்க.

22) x + 4 y = 8 ஆகும்.
x + 2y = 2 ஆகும்
தீர்க்காமல் x + y இன் பெறுமானத்தினைக் காண்க.

23) கமலனுக்கும் விமலனுக்குமிடையில் 2:3 எனும் விகிதத்திலும், கமலனுக்கும் கசுனுக்குமிடையில் 3:1 எனும் விகிதத்திலும், பங்கிட்ட விகிதத்தினைக் காண்க.

24) $A = \begin{bmatrix} 1 & 2 \\ 3 & 5 \end{bmatrix}$ $B = \begin{bmatrix} -1 & 2 \\ 0 & 4 \end{bmatrix}$ தாயம் 2 B இனைக் காண்க.


25) $Y = (x-1)^2 + 5$ இவ் வரைபின்
1) சமச்சீர் அச்சின் சமன்பாட்டினை எழுதுக.
2) இழிவுப் புள்ளியின் ஆள்கூறுகளை எழுதுக.

26) $(16)x^{\frac{-3}{4}} \left(8^{1/4}\right)^0$ பெறுமானம் காண்க.

27) 5% எளிய வட்டிக்கு ரூ.10000 ஐ கடனுக்கு பெற்ற ஒருவர் 2 வருடங்களின் பின் கடனிலிருந்து மீளுவதற்கு செலுத்த வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?

28) $\sqrt{48} + \sqrt{3}$ இன் பெறுமானம் காண்க.

29) (1 - x), x, $(x-1)^2$ பொது மடங்கில் சிறியதைக் கணிக்க.

30) 


1) $\frac{AE}{EB}$ இற்கு சமமாகும் விகிதத்தினை எழுதுக
2) AE இன் நீளத்தினைக் காண்க:

### பகுதி B

01) ரூ. 188000 ஆண்டுப் பெறுமானம் உடைய வீடொன்றிற்கு வரியாக ஆண்டுப் பெறுமானத்தின் 5% வீதம் அறவிடப்படுகிறது. இவ்வீடு ரூ. 8000 மாதாந்த வாடகைக்கு விடப்படுகிறது. ஒரு வருடத்திற்குமான வாடகை அறவிடப்பட்டு, அதிலிருந்து வரியினை செலுத்தி மீதிப்பணம் 25% வட்டி வழங்கும் வங்கியில் வைப்பிலிடப்படுகிறது.

1) ஆண்டு வரியினைக் காண்க
2) காலாண்டு வரியினைக் காண்க.
3) அவர் வருடத்திற்கு பெறும் மொத்த வாடகை எவ்வளவு?
4) அவர் வங்கியில் வைப்பிலிட்ட பணம் எவ்வளவு?
5) அவருக்கு வருட இறுதியில் கிடைக்கப்பெற்ற மொத்தப்பணம் எவ்வளவு?

02) நீர்த்தாங்கியொன்றில் 1/4 பங்கு நீரால் நிரம்பியுள்ளது. அதில் குளிப்பதற்காக 20 லீற்றர் நீர் பயன்படுத்தப்பட்ட பின் தாங்கியில் 1/12 பங்கு நீர் எஞ்சியது.

1) குளிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட நீர் நீர்த் தாங்கியின் என்ன பின்னமாகும்.
2) தாங்கியின் கொள்ளளவினைக் கணிக்க?
3) ஆரம்பத்தில் நிரம்பியிருந்த நீரின் கனவளவு யாது?

03) அமாலியிடமும் நிமாலியிடமும் பெட்டியொன்றில் சிவப்பும் கறுப்பும் பேனைகள் உள்ளன. பெட்டியிலிருந்து நிமாலி எழுமாறாக பேனை யொன்றை எடுக்கும்போது அது சிவப்பாக இருப்பதற்கான நிகழ்தகவு 3/5 ஆகும். எடுத்த பேனையை நிமாலிக்கு எழுதுவதற்கு கொடுத்த அமாலி இன்னொரு பேனையை பெட்டியிலிருந்து எடுத்தாள்.

1) முதலாவது சந்தர்ப்பத்தில் கறுப்பு பேனை கிடைப்பதற்கான நிகழ்தகவு யாது?
2) இரண்டாம் சந்தர்ப்பத்தில் பேனையொன்றை எடுப்பதற்கான நிகழ்தகவினைக் காட்டும் மரவரிப்படமொன்றை வரைக.
3) மரவரிப்படம் மூலம் இரு சந்தர்ப்பங்களிலும் சிவப்புப்பேனை கிடைப்பதற்கான நிகழ்தகவினைக் காண்க.
4) குறைந்தது இரு சந்தர்ப்பங்களில் ஒரு முறையாவது கறுப்புப் பேனை கிடைப்பதற்கான நிகழ்தகவினைக் கணிக்க.

04) பாடசாலையொன்றில் புலமைப் பரிசில் வகுப்பொன்றில் அரையாண்டுப் பரீட்சையில் மாணவர்கள் கணிதப்பாடத்தில் பெற்ற புள்ளிகளின் பரம்பல் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| புள்ளிகள் | 1-10 | 11-20 | 21-30 | 31-40 | 41-50 | 51-60 | 61-70 | 71-80 | 81-90 | 91-100 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 7 | 10 | 12 | 19 | 18 | 17 | 16 | 14 | 6 | 1 |

1) இப்புள்ளிகளின் ஆகார வகுப்பு யாது?

2) 51 - 60 எனும் வகுப்பாயிடையின் நடுப்பெறுமானத்தினை எடுகொண்ட இடையாகக் கொண்டு மாணவனொருவன் பெற்ற புள்ளிகளின் இடையைக் கணிக்க.

3) 60 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையை சதவீதத்தில் தருக.

05) 18 cm ஆரையுடைய அரைக்கோளவடிவ பாத்திரமொன்றில் இலைக்கஞ்சி இடப்பட்டுள்ளது. இதை எடுப்பதற்காக 3 cm ஆரையுடைய அரைக்கோளவடிவ கரண்டி பாவிக்கப்படுகிறது. 3 cm ஆரையும் 12 cm உயரமும் உடைய கோப்பையிலிட்டு அவை விற்கப்படுகின்றன.

1) இலைக்கஞ்சி நிரப்பப்பட்ட பாத்திரம் அரைக்கோள வடிவ கரண்டியின் எத்தனை மடங்காகும்?
2) கோப்பையின் கொள்ளளவு கரண்டியின் கொள்ளளவிலும் எத்தனை மடங்காகும்?

3) முற்றாக நிரப்பப்பட்ட இலைக்கஞ்சி கோப்பையொன்று ரூ.5 உம் கருப்பட்டி ஒரு துண்டு ரூ. 1 உம் ஆகும். பாத்திரம் முற்றாக இலைக்கஞ்சியினால் நிரப்பப்பட்டுள்ளபோது அவற்றினை முற்றாக விற்றுப் பெற்ற பணம் எவ்வளவு?

(ஆரை r உடைய கோளத்தின் கனவளவு $\frac{4\pi r^3}{4}$ ஆரை r உடைய சிலின்டரின் கனவளவு $\pi r^2 h$ ஆகும்.

## பகுதி II

### பகுதி A

01) வியாபாரமொன்றினை ஆரம்பிப்பதற்கு அணிலுக்கு ரூ.60,0000 தேவைப்பட்டது. அவன் ரூ. 250, 000 ஐ 20% எளிய வட்டிக்கு சரஸ்வதி கம்பனியிலும், மீதிப் பணத்தினை 22% எளிய வட்டிக்கு நரேன் கம்பனியிலும் பெற்றுக்கொண்டான்.

1) கடனிலிருந்து மீளுவதற்கு அணில் சரஸ்வதி கம்பனிக்கு வருடக் கடைசியில் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?

2) நரேன் கம்பனியிலிருந்து பெற்ற கடன் பணம் எவ்வளவு?

3) ஒரு வருடக் கடைசியில் நரேன் கம்பனிக்குச் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?


4) அணில் இதே முறையில் இப்பணத்தொகையினை அதே வட்டி விகிதத்தில் கூட்டு வட்டிக்கு பெற்று ஒரு வருடத்தில் கடனிலிருந்து மீண்டார் எனின், எளிய வட்டியும் கூட்டு வட்டியும் சமமானதா? அல்லது வேறுபட்டதா? காரணம் தருக.

02) விளையாட்டு சங்கமொன்றிலிருந்த 40 மாணவர்களிடமிருந்து பெற்ற தகவல்கள் கீழே வென்வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளன.

A - (கிரிக்கெட் விளையாடும் மாணவர்கள்)

B - (கரப்பந்து விளையாடும் மாணவர்கள்)

C - (எல்லே விளையாடும் மாணவர்கள்)




1) 3 விளையாட்டுக்களிலும் பங்கு பற்றும் மாணவர்கள் எத்தனை பேர்?

2) கிரிக்கெட் விளையாடும் ஆனால் கரப்பந்து விளையாடாத மாணவர்கள் எத்தனை பேர்?
3) $(A\cap B)\cap C'$ உரித்தான பிரதேசத்தினை நிழற்றிக் காட்டுக.

4) $n(A\cap B)C'$ பெறுமானத்தினைக் காண்க.

5) இச்சங்கத்திற்கு எல்லே விளையாடும் ஒரு மாணவன் வந்தால், அவருடன் விளையாட முடியுமான மாணவர்களின் எண்ணிக்கை யாது?

03) (அ) $y = x(x+2)$ வரைபை வரைவதற்குரிய பூரணமற்ற அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| x | -5 | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| y | | 8 | | 0 | -1 | 0 | | | 15 |

1) அட்டவணையிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.

2) x அச்சு வழியே 10 சிறிய அலகுகளை 1 எனவும், y அச்சு வழியே 10 சியி அலகுகளை 2 எனவும் கொண்டு மேற்படி வரைபினை வரைக.

ஆ. 1) $y = x(x+2)$ வரைபின் இழிவுப் பெறுமானம் யாது?

2) சமச்சீர் அச்சின் சமன்பாடு யாது?

3) $y = x(x+2)$ வரைபு மறையாகும். ஒரு பெறுமான வீச்சினைக் காண்க.

4) $x^2 + 2x = 0$ மூலகங்களை வரைபினூடாகக் காண்க.

04) $A = \begin{pmatrix} 2x & 8 \\ 7 & 5x \end{pmatrix}$ $B = \begin{pmatrix} y & 4 \\ -8 & -y \end{pmatrix}$ $C = \begin{pmatrix} 13 & 20 \\ -7 & 1 \end{pmatrix}$

1) தாயம் 3 B இனை y இனூடாக எழுதுக.

2) தாயம் A + 3 B இனை (x,y இனூடாக) எழுதுக.

3) தாயம் A + 3 B = C எனின், ஊடாக ஒருங்கமை சமன்பாட்டினை கட்டியெழுப்புக. அவற்றினைத் தீர்த்து பெறுமானங்களைக் கண்ட தாயம் A, தாயம் B இனை மீள எழுதுக.

05) விளையாட்டுப் பொருட்களைத் தயாரிக்கும் குறிப்பிட்ட நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் பணிப்பெண்கள் பொம்மைக்கான ஆடைகளைத் தனித்தனியாக தயாரிக்கிறார்கள். நாளாந்தம் பொம்மைகளுக்கான ஆடை தைப்பதை கீழுள்ள அட்டவணை காட்டுகிறது.

| நா.பொ.ஆடை. த | 150-200 | 200-250 | 250-300 | 300-350 | 350-400 | 400-450 | 450-[illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| பணி. பெ. எண் | 4 | 9 | 14 | 25 | 9 | 6 | 6 |

1) ஆகார வகுப்பின் நடுப்பெறுமானத்தினை எடுகொண்ட இடையாகக் கொண்டு பணிப்பெண் நாளொன்றிற்கு தைக்கும் ஆடைகளின் இடையைக் காணிக்க.

2) இதில் எழுமாறாக பணிப்பெண் ஒருவரைத் தெரிந்தெடுத்தால் அவர் நாளாந்தம் தைக்கும் ஆடைகள் 250 அல்லது அதற்கு மேல் தைப்பவராக இருப்பதன் நிகழ்தகவினைக் கணிக்க.

06) 14.50 m உயரமுடைய கட்டடத்தின் உச்சியில் புத்தர் சிலை ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கட்டடத்தின் அடியிலிருந்த கிடைத்தளத்தில் A எனும் புள்ளியிலிருந்து கட்டட உச்சியின் ஏற்றக்கோணம் $26^0$ ஆகும். புத்தர்சிலை உச்சியின் ஏற்றக்கோணம் $38^0\,12'$ ஆகும்.


அ) மேற்படி தரவுகளை பரும்படி படத்தில் குறிக்க.
ஆ) திரிகோண கணித அறிவினைப் பயன்படுத்தி,
i) கட்டட அடியிலிருந்து A இற்கு உள்ள தூரம்?
ii) புத்தர் சிலையின் உயரம் என்ன?

## பகுதி III

07) i) AB = 6 cm $A\hat{B}C = 45^0$, BC = 8.5cm ஆகுமாறு முக்கோணி ABC ஐ நிர்மாணிக்குக.
ii) பக்கம் AB ஐ A இல் தொடுமாறு $A\hat{B}C$ இரு கூறாக்கியின் மீது மையம் அமையுமாறு வட்டத்தினை அமைக்க.
iii) B யிலிருந்து வட்டத்திற்கு தொடலியை அமைக்க. (BA தவிர) BD எனப் பெயரிடுக. BD யின் நீளம் எவ்வளவு?

08) 1 -7 வரை இலக்கமிடப்பட்டுள்ள அட்டைகள் மேசைமீது புரட்டி வைக்கப்பட்டுள்ளது.
அ) அதில் ஒன்றை எழுமாறாக எடுத்தால் அது இரட்டை எண்ணாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?
ஆ) முதலில் எடுத்த அட்டையை கையில் வைத்துக்கொண்டு இரண்டாவது அட்டை எடுக்கப்படுகிறது. மேற்படி தகவல்களை தெட்காட்டி வரைவில் காட்டுக. அதனூடாக,
i) எடுக்கும் அட்டை இரண்டும் இரட்டை எண்ணாதல்.
ii) அட்டைகள் இரண்டிலும் உள்ள எண்கள் மூன்றிலும் குறைதல்.
iii) இரண்டு அட்டைகளினதும் கூட்டுத்தொகை 10 ஆதலின் நிகழ்தகவினைக் கணிக்க.

09) வட்டத்தின் வில்லினால் வட்டத்தின் மையத்தில் எதிரமைக்கப்படும் கோணம் அது வில்லினால் பரிதியின் எஞ்சிய பகுதியின் மீது எதிரமைக்கப்படும் கோணத்தின் இரு மடங்கு என நிறுவுக.




O மையமாகும். AC நேர்கோடாகும். காரணம் காட்டுவதன் ஊடாக,
i) x இன் பெறுமானம் யாது?
ii) y இன் பெறுமானம் யாது?
iii) $A\hat{B}C$ பெறுமானத்தினைக் காண்பதற்கு நிறுவின தேற்றத்தினைப் பயன்படுத்தும் விதத்தினை விபரிக்க.

# தரம் 5 மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

ஐந்தாம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் வழிகாட்டல் கருத்தரங்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குளி உப அலுவலகத்தில் அமைந் துள்ள கந்தையா கனகம்மா நினைவு மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இக்கருத்தரங்கிற்கு யாழ். பிரதேச முன்னணி ஆசிரியர் அன் பழகன் பிரதம வளவாளராகக் கலந்து கொள்ளவுள்ளார. அவருடன் இணைந்து பல பிரபல புகழ்பூத்த ஆசிரியர்ளும் வளவாளராக கலந்து மாணவர்களுக்கான வழிகாட்டல்களை வழங்கவுள்ளனர்.

ஆர்வமுள்ள அனைத்து மாணவர்களும் இதில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கந்தையா கனகம்மா நிறுவனத்தைச் சேர்ந்த க.மய்யில்வாகனம் அழைப்பு விடுத்துள்ளார். (137)

# இலகுவேலைத் திட்டம் ஆரம்பம்

மண்டைதீவுப் பகுதியில் இலகு வேலைத் திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

கடந்த 1 ஆம் திகதியில் இருந்து இந்த இலகுவேலைத் திட்டம் அமுலுக்கு வந்திருப்பதாக தெிவிக்கப்படும் அதே வேளை எதிர்வரும் 10 ஆம் திகதிக்குள் இந்த மாதத்திற்கான இலகு வேலைத்திட்டத்தை முடிவுறுத்தவும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. இந்த வேலைத்திட்டத்தின் கீழ்.மண்டைதீவுப் பகுதியில் சேமக்காலை வீதி, வைத்தியசாலை வீதி என்பன துப்புரவு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மண்டைதீவின் ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவு ரீதியாக இந்த வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (பா)




நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் 33 வருடங்களாக ஆசிரியராக பணியாற்றிய திருமதி சுதாநிதி யோகேஸ்வரனுக்கான பிரிவுபசார விழா அண்மையில் நடைபெற்ற போது

# மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய புனரமைப்பு பணிகளுக்கு உதவி நாடல்

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் புனருத்தாரண மற்றும் மீள்கட்டுமான வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்ற நிலையில் இப்பணிகளுக்கு பொதுமக்கள் கொடையாளிகள், பொது நிறுவனங்கள் உதவிகளைச் செய்யமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் வடமாகாண ஆளுநர் செயலகம் ஊடாக ஆலய பரிபாலன சபையால் முனனெடுக்கப் பட்டுள்ளன.

இதன்படி இவ்வாலயத்தின் புனரமைப்பு வேலைகள் தற்போது துரிதகதியில் நடைபெற்று வருகின்றண. இவ்வாலயத்தின் நிர்வாக சபை ஆளுநருடனான கலந்துரையாடலின்போது ஆலய புனருத்தான வேலைகள் தொடர்பாக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

இதனைக் கருத்திற்கொண்ட ஆளுநர் கோபுர கட்டு மான வேலைகள், சுற்றுப்புறச் சூழல் மற்றும் நந்தவனம் அமைத்தல் போன்ற முக்கிய செயற்பாடுகளுக்காக உதவிகளை வழங்குவதென தீர்மானித்து இதன் முதற்கட்டுமான கோபுர கட்டுமானப் பணிகளுக்கு ஆரம்ப நிதியுத வியாக ஆளுநர் நிதியத்திலிருந்து ரூபா ஒரு மில்லியனை வங்கிக் கணக்கு இல. 76216427 மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய புனரத்தாபன குழு இராஜகோபுரக் கருத்திட்டம் என்ற இலங்கை வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டுள்ளார்.

இதற்கான மொத்தச் செலவு மதிப்பீடு 300 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது இதற்காக எதிர்பார்க்கப்படும் நிதியை பொதுஸ்தாபனங்கள், கொடையாளிகள், நலன் விரும்பிகள் மற்றும் பொதுமக் கள் ஆகியோரிடமிருந்து நன்கொடையாகப் பெறுவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியை நன்கொடையாக வழங்க விரும்புபவர்கள் மேற்படி வங்கிக் கணக்கில் வைப்பிலிட முடியும்.

சுற்றுப்புறச் சூழலைச் சுத்தம் செய்தல் என்ற திட்டத்தின் கீழ் ஆலயத்திருப்பணிகளில் ஆர்வமுள்ளவர்களை உள்ளடக்கிய தொண்டர் அணி உருவாக்கப்பட்டு அவர்களின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு உள்ளீடுகளை வழங்குவதன் மூலம் இதனை துரித கதியில் செயற்படுத்த முடியும் என தீர்மானிக்கப்பட்டது.

அதன் முதற்கட்டமாக ஆளுநரின் செயலகத்தால் 21.07.2014 ஆம் திகதி முழுநாள் சிரமதானமொன்று மேற்கொள்ளப்பட்டது. இப்பணிக்காக சாரணர்கள், இளைஞர்கள் மற்றும் நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

மேலும் சரணவணப் பொய்கையைச் சூழவர நந்தவனம் ஒன்றை உருவாக்கும் திட்டத்தின் கீழ் கந்தனுக்குகந்த பூசைக்குரிய மலர்களுக்காக மரங்களை நாட்டுவதற்கு விவசாய அமைச்சு மற்றும் திணைக்களத்தின் ஒத்துழைப்பை பெறுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம் மரக்கன்றுகளை தனிப்பட் டவர்களும் நன்கொடையாக வழங்கமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பட்டமளிப்பு விழா

பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரிப் பரீட்சைகளுக்கு 2013 ஆம் ஆண்டு தோன்றிச் சித்தியடைந்த பரீட்சாத்திகளுக்கான பட்டமளிப்பு விழா அடுத்த மாதம் 29 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென பேராதனைப் பல்கலைக்கழக தொடர் தொலைக்கல்வி நிலைய சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் எம்.எஸ்.ரணசிங்ஹ அறிவித்துள்ளார்.

இப்பட்டமளிப்பு விழாவிலே 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வியாபார நிர்வாகமாணி பரீட்சைக்குத் தோற்றி சித்தியெய்திய பரீட் சார்த்திகளும் 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கலைப் பட்டப் படிப்பு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியெய்திய பரீட்சார்த்திகளும் பட்டங்களைப் பெற்றுக்கொள் வார்களெனவும் சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் ரணசிங்ஹ மேலும தெரிவித்துள்ளார். (01)

# தென்மராட்சி பிரதேசத்தின் உயிர்ப்பல்வகைமையை பாதுகாப்பதுடன் குரங்குத் தொல்லையையும் குறைத்தல்



தென்மராட்சி பிரதேச மக்கள் தமது வீட்டில் பயன்தரு மரங்களை குறிப்பாக பழ மரங்களை வளர்த்தும் வீட்டுத் தோட்டங்களைப் பராமரித்தும் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வந்தார்கள். இதனால் தொன்மராட்சி பிரதேசத்திற்கே உரிய பழ மரங்கள் மற்றும் சில மரக்கறி வகைகள் பாதுகாக்கப்பட்டு பிரதேசத்தின் பெயரை நிலை நிறுத்தியிருந்தன. அத்துடன் இப் பிரதேசம் மா, பலா போன்ற பழங்களிற்கான தனித்துவத்தை தன்னகத்தே கொண்டிருந்தன.

தென்மராட்சி பிரதேசத்தின் பழ உற்பத்தித்திறனைக் கருத்திற் கொண்டு மாகாண விவசாயத் திணைக்களமானது யாழ். மாவட்ட மக்களின் தரமான பழங்களுக்கான சந்தைப்படுத்தல் வசதிகளை மேற்கொள்வதற்காக தென்மராட்சி பிரதேசத்தில் பழமுதிர்சோலை எனும் விற்பனை நிலையத்தை ஸ்தாபித்து, அது இயங்குவதற்கான தனது முழுப்பங்களிப்பையும் வழங்கி வருகின்றது.

எனினும் தென்மராட்சி மக்களுடனான கலந்துரையாடல்கள் மற்றும் கூட்டங்களின்போது குரங்குகளால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டால் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதுடன் பழமுதிர்சோலைக்கு தரமான பழங்களை வழங்கமுடியும் என சகல தரப்பாலும் வலியுறுத்தப்பட்டது.

மேலும் சாவகச்சேரி மற்றும் கைதடி விவசாயப் போதனாசிரியர்கள் தமது அறிக்கைகளில் இப்பிரதேசத்தில் விவசாயத்திற்கு குரங்கு எனும் பீடை சவாலாக காணப்படுவதாக குறிப்பிட்டார்கள். முக்கியமாக பழ மரங்களுக்கும் மரக்கறிப் பயிர்களுக்கும் கூட்டம் கூட்டமாக வந்து குவிகின்றன.

மேலும் மக்களின் அசையும் அசையா சொத்துக்களுக்கும் சேதத்தினை விளைவிக்கின்றன. இதனால் அப்பகுதி மக்கள் தமது உடைமைகளை பாதுகாப்பதற்காக பயன்தரு மரங்களை வெட்டுவதுடன் வீட்டுத்தோட்டங்களையும் கைவிடுகின்றனர். இதனால் தென்மராட்சி பிரதேசத்தின் உயிர்ப்பல்வகைமை பாதிப்படையும் அபாய நிலை காணப்படுகின்றது.

இதனால் மாகாண விவசாயப் பணிப்பாளரின் ஆலோசனையின் கீழ் வன விலங்கு திணைக்களத்தின் தொழில்நுட்ப அனுசரணையுடன் வீட்டுத்தோட்டத்தை ஊக்குவித்து தென்மராட்சி பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தையும் உயிர்ப்பல்வகைமையையும் மேம்படுத்துவதற்காக வீட்டுத் தோட்டத்தின் முக்கிய பீடையாகவுள்ள குரங்குப் பிரச்சினையை குறைப்பதற்குமான திட்டம் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் (விரி) மற்றும் அவர்களது உத்தியோகத்தர்களால் தயாரிக்கப்பட்டது.

திட்டம் : தென்மராட்சி பிரதேச உயிர்ப் பல்வகைமையை பாதுகாத்தல்.

நோக்கம் : தென்மராட்சி பிரதேசத்தின் ஷிவசாய மற்றும் வன சூழல் தொகுதியை சீராக்குவதற்கு வீட்டுத்தோட்டத்தின் முக்கிய பீடையான குரங்கு பிரச்சினையை குறைப்பதற்கான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தலும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி தொடர்ச்சியான வருமானத்தை பெறுவதற்கான வழிகளை உருவாக்கலும் மாதிரி வீட்டுத்தோட்டங்களை அமைத்தலும்.

இத்திட்டத்திற்கு யாழ்ப்பாண UND' நிறுவனத்தின் முன்மொழிந்தம்மக்கமைவாக UNDP இன் உலகளாவிய சூழல் வசதி சிறிய கொடைத்திட்டம் நிதிப் பங்களிப்பை மேற்கொள்வதற்கு முன்வந்துள்ளது. இதன் சமூகமட்ட அமைப்புக்களினூடாக திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஆலோசகராக திருமதி இராஜேந்திரமணி ஞானேஸ்வரன் (தலைவர், விலங்கியல் துறை, விஞ்ஞானபீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்) கடமையாற்றுகின்றார்.

இவரின் ஆலோசனையின் கீழ் இத்திட்டமானது சாவகச்சேரி பழ உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) இனால் யாழ்மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளரின் நேரடி வழிகாட்டிலின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தில் குரங்கு பிரச்சினையால் பாதிக்கப்படும் அனைத்து மக்களும் பயனாளிகளாக கருதப்படுகின்றனர்.

இத்திட்டத்தின் பங்குதாரர்களுடன் இத்திட்டத்தை ஆரம்பிப்பதற்காகவும் சுமுகமாக நடைமுறைப்படுத்துவதற்கான கலந்துரையாடல் 4.07.2014 அன்று மீசாலை கண்டி வீதியில் அமைந்துள்ள பழமுதிர் சோலையில் நடைபெற்றது.

இத்திட்டத்தில் உயிர்ப்பல்வகைமைமையை பாதுகாப்பதற்காக குரங்கு பிரச்சினையை குறைப்பதற்கான உத்திகளை மேற்கொள்வதுடன் 50 மாதிரி வீட்டுத் தோட்டங்களை உருவாக்குவதற்கும் இத்திட்டம் தொடர்பான மேற்படிப்பை விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் மேற்கொள்வதற்கும் அனுமதி கிடைத்துள்ளது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பயனாளிகளிடமிருந்து பின்வரும் தகவல்கள் பெறப்படவுள்ளன.

1. தற்போது ஒரு பயனாளியின் வீட்டுக்காணியிலுள்ள அசையும் அசையா சொத்துக்களின் விபரம்

2 குரங்கு பிரச்சினையால் ஏற்பட்ட பாதிப்புகளின் விபரம்

வருங்காலத்தில் பழமுதிர்சோலைக்குத் தரமான பழங்களை வழங்குவதற்குரிய மக்களின் விருப்பங்களும் திட்டங்களும்

இத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு அடிப்படையாக குரங்குகள் நடமாட்டம் பற்றிய இடம் திகதி நேரம் மற்றும் அவற்றால் ஏற்பட்ட சேத விபரம் பற்றி அறிக்கை ஒன்று உடனடியாக தயாரிக்கப்படவேண்டியுள்ளது. இவ் அறிக்கைக்குரிய படிவங்களை மீசாலையிலுள்ள பழமுதிர்சோலை அலுவலகத்திலோ அல்லது விவசாயப் போதனாசிரியரிடமோ பெற்றுக்கொள்ளலாம் (சாவகச்சேரி) தொலைபேசி இல 0776512373 கைதடி தொலைபேசி இல 0779073808.

இப்படிவங்களை உரிய முறையில் செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை பூர்த்தி செய்து ஒக்ரோபர் 30 ஆம் திகதிக்கு முன்னர் விவசாயப் போதனாசிரியரிடம் நேரடியாகவோ அல்லது மீசாலை மேற்கில் அமைந்துள்ள பழமுதிர் சோலை நிறுவனத்திலோ சமர்ப்பிக்குமாறு தென்மராட்சி பிரதேச மக்களிடம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**ஸ்ரீபாலசுந்தரம்**
**பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி)**
**யாழ்ப்பாணம்**

# குளிரூட்டியில் வைக்கப்படும் குழந்தைகளின் சடலங்கள்



காஸாவில் பலியான குழந்தைகளின் சடலங்களை குளிரூட்டியில் வைத்துப் பாதுகாக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

பலஸ்தீனியர்களை ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற நோக்கில் கடந்த பல தினங்களாக இஸ்ரேல் இராணுவப் படைகள், காஸாவில் தொடர்ந்து தாக்குதல்களை நடாத்தி வருகின்றனர.

இதில் இதுவரை 1,600 பேருக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். அதில் 296 குழந்தைகள் இறந்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் இஸ்ரேலியப் படைகள், தாக்குதலில் பலியானவர்களை அடக்கம் செய்யக் கூட இடைவெளி அளிக்காமல், தொடர்ந்து தங்களது வெறியாட்டத்தை நிகழ்த்துவதால், பலியான பிஞ்சுக்குழந்தைகளின் சடலங்கள் அழுகிப் போகாமல் இருக்க, அவற்றை குளிரூட்டியில் வைத்துப் பாதுகாக்கப்பட்டுள்ளது.

இந்த அவலக் காட்சிகள் நிறைந்த புகைப்படங்களை காஸாவில் உள்ள மனித உரிமை ஆர்வலர்கள் வெளியிட்டுள்ளனர்.

# சர்வதேச நாடுகளின் எச்சரிக்கை

# இஸ்ரேல் தரைப்படை வாபஸ்

(பலஸ்தீனம்)

பலஸ்தீனத்தின் காஸாப் பகுதியை ஆட்சி நடத்தும் ஹமாஸ் போராளிகள் அண்டை நாடான இஸ்ரேல் மீது ஒரு வாரமாக ரொக்கெட் வீசி தாக்குதல் நடத்தினர். அதைத்தொடர்ந்து கடந்த மாதம் 8 ஆம் திகதி காஸா மீது இஸ்ரேல் போர் விமானங்கள் கடற்கரைப் பகுதியில் குண்டுகள் வீசித் தாக்கியது.

மேலும், 17 ஆம் திகதி காஸாவுக்குள் இஸ்ரேலின் தரைப படை நுழைந்து பீரங்கித் தாக்குதல் நடாத்தியது. கடற்படையும் தாக்கியது. அவர்கள் இஸ்ரேல் எல்லையையொட்டி ஹமாஸ் தீவிரவாதிகள் அமைத்து இருந்த சுரங்கப் பாதைகளை அழித்தனர்.



இந்தத் தாக்குதலில் 1800 பலஸ்தீனியர்கள் பலியாகி உள்ளனர். இஸ்ரேலை சேர்ந்த 60 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதற்கிடையே நேற்றுமுன்தினம் காஸாவின் தெற்கேயுள்ள ரபாவில் பொது மக்கள் தஞ்சம் புகுந்துள்ள ஐ.நா. பள்ளியின் மீது இஸ்ரேல் இராணுவம் குண்டு வீசியது.

அதில் 10 பேர் உயிரிழந்தனர். சண்டையில் உயிரிழந்தவர்களில் முக்கால் வாசிப் பேர் பொதுமக்கள் என ஐ.நா.சபை கூறியுள்ளது.

இதற்கிடையே பள்ளி மீது இஸ்ரேல் குண்டு வீசியதற்கு ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இச்செயலுக்கு காரணமானவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். இது சட்ட விரோதமானது. கிரிமினல் குற்றம் என்றும் கடுமையாக எச்சரித்தார்.

இதுபோன்று சர்வதேச நாடுகளின் எச்சரிக்கைகளைத் தொடர்ந்து இஸ்ரேல் பணிந்தது. காஸா பகுதியில் இருந்து பெருமளவிலான தரைப்படைகளை நேற்றுமுன்தினம் வாபஸ் பெற்றது. தெற்கு எல்லையில் காஸா எல்லையில் இருந்து இஸ்ரேல் இராணுவ வாகனங்கள் திரும்பிச் சென்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலகச் செய்திகள்

# மூளையழற்சி நோய்

# இந்தியாவில் 206 பேர் பலி

மூளையழற்சி மற்றும் "ஜப்பான் மூளையழற்சி" எனப்படும் புதிய வகை நோய்க்கு இந்தியாவின் மேற்கு வங்காள மாநிலத்தில் பலியானோர் எண்ணிக்கை 206 ஆக உயர்ந்துள்ளது.

பாக்ரீரியா கிருமிகளின் தொற்றால் ஏற்படும் ஜப்பான் மூளையழற்சி நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆரம்ப கடடத்தில் தலைவலி, .காய்சசல், சோர்வு, களைப்பு போன்ற அறிகுறிகள் தோன்றும். இந்த நோய் பரவுவதற்கு சுகாதாரமற்ற பன்றி பண்ணைகளும் ஒரு காரணம் என்று கருதப்படுகிறது.

மூளையழற்சி நோய் தீவிர நிலையை எட்டும்போது தசை வலிப்பு, இழுப்பு, உடல் நடுக்கம், நினைவாற்றல் இழப்பு போன்ற பிரச்சினைகள் ஏற்படும். மேற்கு வங்காளத்தின் வடக்கு மாவட்டங்களை சேர்ந்த பலர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எனினும், சிகிச்சை பலனின்றி அவ்வப்போது ஓரிருவர் பலியாகியும் வருகின்றனர். கடந்த ஜனவரி மாதத்திலிருந்து மேற்கு வங்காள மாநிலத்தில் மட்டும் மூளையழற்சி நோய்க்கு 206 பேர் பலியாகியுள்ளனர். நேற்று முன்தினம் மட்டும் 4 பேர் இந்த நோயால் பலியாகியுள்ளனர்.

# ஆற்றில் கவிழ்ந்தது படகு பயணித்த 200 பேரும் மாயம்

வங்கதேசத்தில் படகு கவிழ்ந்த விபத்தில் அதில் பயணம் செய்த 200 பேர் ஆற்றில் மூழ்கி மாயமாகினர். வங்கதேசத்தில் தெற்கு டாக்காவில் 30 கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஆற்றில் 200 இற்கும் மேற்பட்டோர் படகில் சென்றனர்.

இப்பகுதியில் பெய்து வரும் மழையால் ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் ஆற்றில் சென்ற படகு திடீரென கவிழ்ந்து மூழ்கியது. அதில் பயணம் செய்த 200 பேரின் நிலைமை என்ன ஆனது என தெரியவில்லை மீட்புபணிகள் நடக்கின்றன.

# புற்றுநோயைத் தடுக்கும் கறுப்பு மிளகு

உணவின் சுவையை அதிகரிப்பதற்கு மட்டுமல்லாமல், புற்றுநோய் கட்டிகள் வராமல் தடுப்பதிலும், கறுப்பு மிளகு பெரும் பங்கு வகிப்பதை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இதுகுறித்து, அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் சான்டியாகோ மருத்துவ பள்ளியை சேர்ந்த பேராசிரியர், அயால் ராஜ் கூறியதாவது,

கறுப்பு மிளகில், வீரியமிக்க, "கெப்செசின்" உள்ளது. இது, குடல் புற்றுநோயைத் தடுக்கும் சக்தியைக் கொண்டுள்ளது. பெருங்குடல் சுவர்களில் காணபபடும் செல்கள், "டி.ஆர்.பி.," என்றழைக்கப்படுகின்றன. இந்த செல்களில், மிளகில் உள்ள, கெப்செசின் செயற்பட்டு புற்றுநோய் கட்டிகளை எதிர்க்கும் காரணிகளை உருவாக்குகிறது. இது தொடர்பாக எலிகளிடையே செய்யப்பட்ட பரிசோதனை வெற்றி அடைந் துள்ளது.

எதிர்காலத்தில், டி.ஆர்பி., மற்றும் பெருங்குடல் புற்றுநோய்க்கும் உள்ள தொடர்பு குறித்து ஆய்வு நடத்தப்படும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**புலிகளின்...**

அவர்கள் தான் தற்போது இணையத்திலும், சமூக வலைத்தளங்களிலும் தமிழீழ விடுதலைப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

போராளியாக ஆயுதமேந்திய சிறுவனுக்கு கிடைக்கும் சமூக அங்கீகாரம், அவன் ஒரு ஏழைக் குடும்பத்தில் அவல வாழ்க்கை வாழ்ந்த காலத்தில் கிடைக்கவில்லை. போராளியான பின்னர் கிடைத்த சமத்துவ உணர்வு, சிறார் போராளிகளுக்கு ஓர் உத்வேகத்தை கொடுத்தது.

அண்மையில் தமிழகத்தில் பரப்பரப்பாக பேசப்பட்ட, புலிப் பார்வை திரைப்படத்தின் இயக்குநர், பாலச்சந்திரன் என்ற சிறுவனுக்கு புலிச் சீருடை அணிவித்திருப்பது பற்றி எழுந்த சர்ச்சை தொடர்பாக கூறிய விளக்கம் இது: அந்தப் பாலகனுக்கு சீருடை அணிவித்து அழகு பார்த்திருக்கிறோம். அதேபோன்று, நடுத்தர வர்க்கத்தினர் தங்கள் பிள்ளைகளுக்கு சீருடை அணிவித்து அழகு பார்ப்பதுடன் மட்டும் நிறுத்திக் கொள்கிறார்கள்.

போர்க் களத்தில் சீருடை அணிந்திருந்த சிறுவர்களுக்கு அது வெறும் அலங்காரப் பொருள் அல்ல. போராளி ஆகி விட்டதால், சமூக அந்தஸ்தில் உயர்ந்து விட்டதாக பெருமிதம் கொள்ளும் கனவு. அந்தக் கனவு மாவீரர் துயிலும் இல்லங்களில் மண்ணோடு மண்ணாக மறைந்து போனது.

# இராணுவ விண்வெளி படை அமைக்க ஜப்பான் திட்டம்

(டோக்கியோ, )

எதிர்வரும் 2019 ஆம் ஆண்டிற்குள் ஒரு இராணுவ விண்வெளிப் படையை அமைக்கவுள்ளதாக ஜப்பான் அரசு தெரிவித்துள்ளது.

இந்தப் படையானது பூமியைச் சுற்றிவரும் விண்வெளிக் கழிவுகளிடமிருந்து செயற்கைக் கோள்களைப் பாதுகாக்கும் பணியைச் செய்யும் என்று அரசு அறிக்கை தெரிவிக்கின்றது.

விண்வெளியில் அதிகரித்து வரும் கழிவுகளைக் கண்காணிக்க இணைந்து பணியாற்றுவதாக இந்த இரு நாடுகளும் முடிவெடுத்ததைத் தொடர்ந்தும், ஜப்பான் மற்றும் அமெரிக்க நாடுகளுக்கு இடையிலான விண்வெளிக் கூட்டுறவை உறுதிப்படுத்தும் எண்ணத்திலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக ஜப்பான் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

"நான்காவது போர்க்களம்" என்று குறிப்பிடப்பட்ட இந்த படையானது அமெரிக்க இராணுவத்திற்குத் தேவையான தகவல்களை அளித்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை பலப்படுத்தும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் ஜப்பானின் விமான பாதுகாப்புப் படையில் உள்ள சுய பாதுகாப்புப் பிரிவில் செயற்பட்டு வரும் வீரர்களில் இருந்து இந்த விண்வெளிப் படைக்கான வீரர்கள் தேர்வு செய்யப்படுவார்கள் என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

# மோடிக்கு குறிவைக்க தீவிரவாதிகள் திட்டம்

சுதந்திர தினத்தன்று பிரதமர் மோடி நிகழ்த்தவுள்ள முதல் சுதந்திர தின உரையின் போது அவர் மீது தாக்குதல் நடாத்த பாகிஸ்தானைச் சேர்ந்த பயங்கர அமைப்பினர் திட்டமிட்டுள்ளதாக உளவுத்துறை எச்சரித்துள்ளது.

கடந்த 20 ஆண்டுகளில் வேறு எந்த பிரதமருக்கும் இல்லாத அளவிற்கு மோடியின் உயிருக்கு ஆபத்து உள்ளதாக மூத்த புலனாய்வுத்துறை அதிகாரி தெரிவித்துள்ளார்.

லக்ஷர் இ தொய்பா, சிமி போன்ற அமைப்புக்கள் மோடியின் உயிருக்கு குறி வைத்துள்ளதால் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும் என மத்திய பாதுகாப்புத்துறையும் பாதுகாப்பு அமைப்புக்களும் உள்துறை அமைச்சகத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் மேம்பாடு

# வாழ்வாதாரத்தை வளப்படுத்த இதுவே மார்க்கம்

## ஊக்குவிப்பு வழங்க அரச அதிபர் உறுதி

(யாழ்ப்பாணம்)

சிறிய நடுத்தரக் கைத்தொழில்களை மேம்படுத்துவதன் முலமாகவே மக்களின்வாழ்வாதாரத்தை வளப்படுத்திக்கொண்டு அபிவிருத்தி நோக்கிய பாதையில் பயணிக்க முடியுமென யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

இதற்கு முழுமையான ஒத்துழைப்புக்களையும் வழங்குவதற்கு தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ள அரச அதிபர் அதேபோன்று சிவில் சமூகத்தினர் உள்ளிட்ட அனைவரும் இணைந்து செயற்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

வர்த்தக வாணிப அமைச்சின் கீழுள்ள சிறிய நடுத்தரக் கைத்தொழில் திணைக்களத்தின் ஏற்பாட்டில் போருக்குப்பின்னரான வடக்கு மாகாணத்தில் சிறிய நடுத்தரக் கைத்தொழில் துறையை முன்னேற்றுவது தொடர்பிலான கலந்துரையாடல் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இதன் போது நிகழ்விற்கு மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கடந்த காலத்தில் இடம்பெற்ற போர் காரணமாக இங்கு சிறிய,நடுத்தரக் கைத்தொழில்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இதனால் சிறிய நடுத்தரக் கைத்தொழிலாளர்களும் இன்று வரை அத் தொழிலகளை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாமலும் இருக்கின்றனர்.

ஆனாலும் அரச மற்றும் தனியார் துறையினால் உதவிகளுடன் சிறிய நடுத்தர கைத்தொழில்கள் முன்னெடுக்கப்பட்டும் வருகின்றன. இத் தொழில்களை முன்னெடுப்பதற்கு எம்மிடம் போதியளவிலான வளங்கள் இருக்கின்ற போதும் இதனை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளாத நிலையே இருப்பதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்நிலையிலேயே சிறிய நடுத்தர வலயங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு வருகின்றது. இதனூடாக அனைவரும் இணைந்து சிறிய,நடுத்தர கைத்தொழிலாளர்களை ஊக்கப்படுத்தல், அவர்களுக்கு உதவிகளைச் செய்து வளர்த்தெடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறு செயற்படுவதன் மூலமாக சிறிய கைத்தொழிலில் வளர்ச்சியை அடைவதனுடன் அபிவிருத்தி நோக்கிப் பயணிக்க முடியும். ஏனெனில் ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு கைத்தொழில்களின் வளர்ச்சி மிக முக்கியமானது.

இங்கு குறிப்பாக பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தையும் வளர்த்துக் கொள்ளவும் கைத தொழில்களின் வளர்ச்சி அவசியமாக இருக்கின்றது. இவ்வாறு கைத்தொழிலையும் வாழ்வாதாரத்தையும் வளர்த்துக்கொள்வதன் மூலமாகவே அபிவிருத்தியை அடைய முடியும்.



போரினால் பாதிக்கப்பட்ட இந்தப் பிரதேசத்திற்கு அபிவிருத்தி அவசியமாகவே இருக்கின்றது. இதற்காக கைத்தொழில் துறை ஊக்குவிப்பிற்கும் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும் என்னாலான அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்கத் தயாராக உள்ளேன்.

இந்த மாவட்ட மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் இங்குள்ள சிவில் சமூகத்தினர் மற்றும் நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினர்களும் இணைந்து செயற்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (பா)

## வலி. வடக்கு பிரதேச செயலகத்தில் நாடக பயிற்சிப்பட்டறை

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் தெல்லிப்பளைப் பிரதேச செயலக வழிகாட்டலில் புத்தாக்க அரங்க இயக்கத்தின் ஒழுங்குபடுத்தலில் நடாத்தப்படும் நாடகப் பயிற்சிப் பட்டறை நிகழ்வு பிரதி வியாழன், வெள்ளிக் கிழமைகளில் மாலை 2 மணி தொடக்கம் 5 மணி வரை இடம்பெறவுள்ளது.

வலி.வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வலி.வடக்கு பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறவுள்ள இப்பயிற்சிப்பட்டறையில் நடிப்பு தலைமைத்துவம், எண்ணக்கருவாக்கம், தொடர்பாடற்திறன், நெறியாள்கை, வழிப்படுத்தல் ஆகிய நாடகத்துறைசார் விடயங்கள் பயிற்சியாக வழங்கப்படவுள்ளது.

பயிற்ச்சிப்பட்டறையின் வளவாளர்களாக புத்தாக்க அரங்க இயக்கத்தின் தலைவரும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நாடகத்துறை ஆசிரியருமாகிய எஸ்.ரி.குமரன் , புத்தாக்க அரங்க இயக்கத்தின் செயலாளரும் மானிப்பாய் இந்துக்கல்லூரி நாடகத்துறை ஆசிரியருமாகிய எஸ்.ரி.அருள்குமரன் , நீர்கொழும்பு விஜயரட்ணம் மகாவித்தியாலய நாடகத்துறை ஆசிரியர் ச.முகுந்தன், இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய ஆசிரியர் இரா.இதயராஸ், யாழ்ப்பாணப்பல்கலைக்கழக நாடகத்துறை சிறப்புப்பட்டதாரி இ.வினோதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

சிறந்த வளவாளர்களினால் நடாத்தப்படும் இப்பயிற்சிப் பட்டறை முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதுடன் பங்குகொள்ளும் மாணவர்களுக்கான காகிதாதிகள், தேனீர் உபசாரம் என்பனவும் வழங்கப்படவுள்ளது. இப்பயிற்சிப்பட்டறையில் வலி.வடக்கு தெல்லிப்பளைப் பிரதேசத்தினைச் சேர்ந்த பாடசாலைகளில் உயர்தர வகுப்பு கற்கின்ற மாணவர்களில் ஒரு பாடசாலையில் இருந்து 10 மாணவர்கள் மட்டுமே பங்குபற்றமுடியும் என்பதினால் ஆர்வமுடைய மாணவர்களை இப்பயிற்சிப்பட்டறையில் கலந்து கொள்ளுமாறு வலி.வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (63)

### சர்வதேச..

ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்டுள்ள சர்வதேச நிபுணர்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தச்சந்திப்பில் கலந்துகொண்ட வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் அரசசார்பற்ற நிறுவனங்களை பதிவு செய்வது தொடர்பான புதிய சட்டமூலம் உருவாக்கப்பட்டுவருவதாகவும் இது தொடர்பாக அரசசார்பற்ற நிறுவன பிரதானிகளை அழைத்து பேசவுள்ளதாகவும் தெரிவித்தார்.

### கால எல்லை...

ஆகஸ்ட் மாதம் அமைக்கப்பட்டிருந்தது. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் விசாரணைகள் தொடர்பில் முறைப்பாடுகள் நிலுவையில் உள்ளதால் ஆணைக்குழுவின் கால எல்லை நீடிக்கப்படவேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### தூதுவர்...

விவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் உறுதியளித்திருந்தார்.

இந்த நிலையிலேயே நேற்று முன்தினம் மாலை சவுத் புளொககிற்கு அழைக்கப்பட்ட தூதுவரிடம் இந்திய அரசின் எதிர்ப்பு முறைப்படி தெரிவிக்கப்பட்டது.

இந்திய வெளிவிவகார அமைச்சின் அழைப்பாணையை ஏற்று நேற்றுமுன்தினம் மாலை சவுத் புளொக்கிற்குச் சென்றிருந்தார் தூதுவர் சுதர்சன் செனிவிரத்ன.

அவரை இந்திய வெளிவிவகார அமைச்சின், இலங்கை, மாலைதீவு விவகாரங்களுக்கான இணைச் செயலர் சுசித்ரா துரை சந்தித்து, இந்தியாவின் கண்டனத்தைத் தெரிவித்தார்.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்பையும், கவலையையும் அவர் தூதுவரிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

### அடிப்படை...

[illegible]திரம் மற்றும் ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் உள்ளிட்ட அடிப்படை மனித உரிமைகளுக்கு இடமளிக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக வடக்கில் இருந்து வருகைதந்த குடும்பத்தவர்கள் கொழும்பிலும், தமது சொந்த இடங்களுக்கு திரும்பிய பின்னரும், அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு கோருவதாக அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### எழுத்துமூல..

படவோ, அச்சுறுத்தப்படவோ, மிரட்டப்படவோ, பதிலடியான தவறாக நடத்தப்படவோ கூடாது.

இரகசியத்தன்மையைப் பாதுகாக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும் பகிரங்க அறிக்கையில் தனிநபர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்படாது.

இலங்கை அரசாங்கத்துடன் பேசுவதற்கு விசாரணைக் குழு தொடர்ந்து, அனுமதி கோரும் என்றும், இலங்கை அரசாங்க அதிகாரிகள் மற்றும் ஏனையோரை விசாரணைக் குழு சந்திப்பதற்கு அனுமதிக்குமாறு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் தொடர்ந்து கோரிக்கை விடுக்கும்.

ஐ.நா. விசாரணைக் குழு ஜெனிவாவை மையமாக கொண்டு செயற்படும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணையை ஆரம்பித்த 2002 பெப்ரவரி 21ஆம் திகதி தொடக்கம், அதன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட 2011 நவம்பர் 15ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தப்படும்.

அதேவேளை, சூழ்நிலை மற்றும் சம்பந்தப்பட்ட தகவல், குறித்த சம்பவங்கள் தொடர்பான கூடுதல் புரிதலை வழங்கும் வகையிலானதாக இருக்கலாம் என்பதாலும், மனித உரிமை மீறல்கள் தொடர்வதை வெளிப்படுத்துவதாக இருக்கலாம் என்பதாலும், இந்தக் காலகட்டத்துக்கு வெளியே நடந்த சம்பவங்கள் குறித்தும் விசாரணையின் போது கருத்தில் கொள்ளப்படும்.

விசாரணையின் போது, தற்போதுள்ள ஆவணங்கள், அரசாங்கம் மற்றும் சிவில் சமூக அறிக்கைகள் உள்ளிட்ட தகவல்கள், சாட்சிகளிடம் சேகரிக்கப்பட்ட ஆவணங்கள், உயிர் தப்பியோர், சாட்சிகள், குற்றம்சாட்டப்பட்டோரின் சாட்சியங்கள், [illegible]னைய சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் பெறப்படும், செய்மதிப் படங்கள், காணொளி மற்றும் ஒளிப்படங்கள், அதிகாரபூர்வ ஆவணங்கள் அனைத்தையும் ஐ.நா விசாரணையாளர்கள், பரிசீலனை செய்வர்.

சேகரிக்கப்பட்ட தகவல்கள், ஆராயப்பட்டு, அவற்றின் உண்மைத் தன்மை உறுதிப்படுத்தப்படும்.

எந்தவொரு நாட்டைச் சேர்ந்த தனிநபரும், அமைப்புகளும் விசாரணைக் குழுவுக்கு எழுத்து மூலமான முறைப்பாட்டை, வரும் ஒக்ரோபர் 30ஆம் திகதிக்கு முன்னதாக oisl_submissions@ohchr.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

சுதந்திரமாகவும், வெளிப்படைத் தன்மையுடனும், நடுநிலையாகவும், இந்த விசாரணைக் குழு செயற்படும் என்றும் ஐ.நா உறுதியளித்துள்ளது.

### சட்டமா..

மாற்றங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று வடமாகாண ஆளுநர் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அவையில் குறிப்பிடும் போது, நியதிச் சட்டங்கள் ஆளுநரின் சிபாரிசுக்கு அனுப்ப வேண்டிய கட்டாயம் இல்லை. இருந்தும் நல்லெண்ண அடிப்படையில் நாங்கள் அனுப்பியிருந்தோம்.

இருந்தும் அவர் அதில் மாற்றங்கள் செய்யக் கூறியுள்ளார். ஆனால், இதில் கவனிக்கக்கூடியது என்னவெனில், வடமாகாண சபை நிதி நியதிச் சட்டத்தில் உள்ளடங்கியிருந்த சரத்துக்களே கிழக்கு மாகாண நிதி நியதிச் சட்டத்திலும் உள்ளடங்கியிருந்தது.

கிழக்கு மாகாணத்தில் எவ்வித மாற்றங்களும் இன்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், வடமாகாணத்துக்கு மட்டும் மாற்றங்கள் செய்யுமாறு கோருவது ஏற்றுக்கொள்ள முடியாது. இது பாகுபாடு காட்டுவதாக அமையும் என்று தெரிவித்தார்.

இதன்போது, கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சின்னத்துரை தவராசா, அவ்வாறு மாகாணங்க்ளுக்கு பாகுபாடுகள் கொண்டு வரப்பட்டு இருந்தால், இதனை சட்டமா அதிபரின் கவனத்துக்கு கொண்டு வந்து நடவடிக்கை எடுக்கலாம் என யோசனை முன்வைத்தார்.

எனினும், அதற்கு மறுப்புத் தெரிவித்த, வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், நீதிபதியாகவிருந்த எமது முதலமைச்சருக்கு சட்டம் பற்றி ஆளுநர் சொல்லும் போது, அந்தச் சட்டத்தின் மேல் எங்களுக்கு நம்பிக்கையில்லை. ஆகையால் நாங்கள் சட்டமாஅதிபர் திணைக்களத்தை நாடத் தேவையில்லை என்று தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு மாகாண சபையின் நிதி நியதிச்சட்டம் குழு நிலையில் விவாதம் மேற்கொள்ளப்பட்டு திருத்தங்களுடன் சபையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாண முதலமைச்சர் நிதியமும் சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

முதலமைச்சர் நிதியம் தொடர்பிலான விவாதம் நடைபெற்று வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது அதன்படி ஆளுங்கட்சி ஆதரித்து வாக்களிக்க எதிர்க்கட்சியினர் நடுநிலை வகித்தனர்.


இறுதியில் முதலமைச்சர் நிதியம் சபையில் பெரும்பான்மை ஆதரவுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதேவேளை முதலமைச்சர் நிதியத்தினை ஆளுநர் நிராகரித்து இருந்தார். எனினும் அவரது அங்கீகாரம் இன்றி சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு மீண்டும் ஆளுநரின் சிபாரிசுக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளது.

# முல்லை செல்வபுரத்தில் 14 வீடுகள் கையளிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் மாந்தை கிழக்கு, நெல்லிப் பிளவு, செல்வபுரம் கிராமத்தில் அமைக்கப்பட்ட புதிய 14 வீடுகள் நேற்றுக்காலை பயனாளிகளிடம் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

இந்தியத் துணைத்தூதரகத்தின் பதில் கவுன்ஸிலர் ஜெனரல் எஸ்.டி.மூர்த்தி, முல்லைத்தீவு அரச அதிபர் வேதநாயகன், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிருதாரன் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் இந்த நிகழ்வில் பங்குபற்றினர். இந்தக் கிராமத்துக்கு மின்சார விநியோகம், தண்ணீர் வசதி, வீதி அமைப்பு ஆகியன விரைவில் பெற்றுக் கொடுக்கப்படும் என முல்லைத்தீவு அரச அதிபர் மக்களுக்கு இதன்போது உறுதியளித்தார்.



## வன்முறையில் ஈடுபடுவதற்காக வாள்கள் வைத்திருந்தோர் சிக்கினர்

வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுவதற்காக வாள்களையும் வேறு ஆயுதங்களையும் வைத்திருந்த 9 பேர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சில பொலிஸ் குழுக்கள் இணைந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தெரியவருகிறது.

வன்முறைகளில் ஈடுபடுவதற்கு தயார் நிலையில் ஆபத்தை ஏற்படுத்தும் வாள், கத்தி உட்பட்ட ஆயுதங்களை வைத்திருந்தவர்களே கைதாகியிருக்கின்றனர் எனத் தெரியவருகிறது. வாள், கத்தி என்பவற்றைச் செய்யும் நபர் ஒருவர் முன்னதாக கைதானார் எனவும் அவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் பெருமளவானவர்களின் பெயர்கள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. அவர்களில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றிவரும் மாணவர்கள் பலரும் இடம்பெற்றிருக்கின்றனர் எனவும் பரீட்சையைக் கருத்தில் கொண்டு அவர்களை பொலிஸார் தற்போது கைது செய்யாது தவிர்த்திருக்கின்றனர் என்றும் தெரியவருகிறது.

## மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்டியவர் வைத்தியசாலையில்

(மல்லாகம்)

மதுபோதையில் வீட்டுக்கு வந்து மனைவியுடன் சண்டை பிடித்தவர் தனக்குத்தானே தீயிட்டுக் கொண்ட சம்பவம் நேற்று பிற்பகல் மல்லாகத்தில் இடம்பெற்றுள்ளது.

மல்லாகம் நீதிமன்ற வீதியைச் சேர்ந்த கனகரத்தினம் யோகதாசன் (வயது-64) என்பவரே தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீயில் எரிந்துள்ளார். வீட்டில் உள்ளவர்கள் கூக்குரல் இட்டதைத் தொடர்ந்து அங்கு சென்ற அயலவர்கள் தீயை அணைத்த போதிலும் அவர் மிகவும் மோசமாக எரிந்த நிலையில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அவர் மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் வண்டி மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தெல்லிப்பளைப் பொலிஸார் இது சம்பந்தமான விசாரனைகளை மேற்கொண்டுள்ளார்கள்.

# வாழ்வில் வறுமை அகலும் வரை எமது மக்கள் பணி தொடரும்



கடந்த கால யுத்தம் இப்பிரதேசத்தின் கட்டமைப்பு வசதிகளை நிலைகுலையச் செய்ததுடன் மக்களின் வாழ்வாதாரத் தொழில்கள், கல்விச் செயற்பாடுகள் என்பனவற்றையும் பின்தள்ளச் செய்துவிட்டது என ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக மண்டபத்தில் வறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவித் திட்டங்களை வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது தமிழ் மக்களின் வறுமையும் கண்ணீர் தாங்கிய வாழ்க்கையும் ஓயும்வரை மக்களுக்கான அபிவிருத்தி செயற்பாட்டுப் பணிகள் தொடருமெனத் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு பிரதேச மக்களது வாழ்க்கையானது பல இன்னல்களையும் துன்ப வடுக்களையும் சுமந்ததாகவே காணப்படுகின்றது கடந்தகால யுத்தம் இப்பிரதேசத்தின் கட்டமைப்பு வசதிகளை நிலைகுலையச் செய்ததுடன் மக்களின் வாழ்வாதாரத் தொழில்கள் கல்விச் செயற்பாடுகள் என்பனவற்றையும் பின்தள்ளச் செய்துவிட்டது.

அத்துடன் இயற்கை அனர்த்தமாகிய சுனாமி பேரலையும் வடமராட்சிப் பிரதேசத்தினை உருக்குலையச் செய்து விட்டது இவ்வாறான வடுக்களில் இருந்து எமது உறவுகள் தமது குடும்பத்திற்கு தேவையான வருமானத்தினை பெற்றுக்கொள்ள வேண்டிய வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியவர்களாக நாம் உள்ளோம். இதனடிப்படையில் வழங்கப்படும் இவ் உதவித் திட்டங்களை சரியான முறையில் பயன்படுத்த வேண்டுமென பயனாளிகளிடம் கேட்டுக்கொண்டார். இந்நிகழ்வில், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் திருலிங்கநாதன், ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி இணைப்பாளரும், பருத்தித்துறைப் பிரதேசசபை எதிர்க் கட்சித் தலைவருமான சிறிரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இராணுவ உழவு இயந்திரம் மோதி படுகாயமடைந்தவர் உயிரிழப்பு

(நாயாறு)

நாயாற்றுப் பகுதியில், இராணுவ உழவு இயந்திரம், மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

சிலாவத்தை தெற்கு, முல்லைத்தீவைச் சேர்ந்த ஆறுமுகம் சிவகுமார் (வயது-27) என்ற 2 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார். இந்த விபத்தில் காயமடைந்த பரமேஸ்வரன் திலீபன் (வயது-27) என்பவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

கடந்த 2ஆம் திகதி வேலை நிமித்தம் கொக்கிளாய்க்குச் சென்ற இருவரும் மோட்டார் சைக்கிளில் திரும்பிக்கொண்டிருந்த வேளை நாயாற்றுப் பகுதியில் இரவு 9.00 மணியளவில் இவர்களின் மோட்டார் சைக்கிளும் இராணுவ உழவு இயந்திரமும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன என்று கூறப்படுகின்றது. இதில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்த இருவரையும் அருகில் இருந்த கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினர் முல்லைத்தீவு வைத்தியசாலையில் சேர்த்தனர். இதில் சிவகுமார் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இருந்தபோதும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று உயிரிழந்தார். யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மரண விசாரணைய மேற்கொண்டார்.

## ஆணின் சடலம் இருபாலையில் மீட்பு

(கோப்பாய்)

இருபாலைப் பகுதியில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று மாலை மீட்கப்பட்டிருக்கிறது.

வி.எச்.ஒழுங்கை இருபாலை என்ற பகுதியைச் சேர்ந்த நன்னியர் குணம் (வயது-45) என்பவரின் சடலமே அவரது வீட்டில் இருந்து மீட்கப்பட்டிருக்கிறது.

இச்சடலம் கோப்பாய் பொலிஸாரால் யாழ்.போதனா மருத்துவமனையில் நேற்று இரவு ஒப்படைக்கப்பட்டது. (25)

# கச்சதீவுப் பிரச்சினையை பேசியே தீர்க்க வேண்டும்

## சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு

இலங்கை, இந்திய நாடுகளுக்கிடையே பேசித்தீர்க்கவேண்டிய விவகாரமே கச்சதீவு விடயம். எனவே இதுதொடர்பில் நேரடியாகத் தலையிடமுடியாதென சென்னை உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

கச்சதீவுப் பகுதியில் இந்திய மீனவர்களின் உரிமை பற்றி விளக்கம் அளிக்கக் கோரி மீனவர் பாதுகாப்பு அமைப்பு சார்பில் பீட்டர் ராயன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கில் பதில் மனுத்தாக்கல் செய்த இந்திய மத்திய அரசு, கச்சதீவில் மீன் பிடிக்க இந்திய மீனவர்களுக்கு உரிமை இல்லை என்று கூறி இருந்த நிலையில், இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, கச்சதீவு விவகாரம் இரு நாடுகளுக்கு இடையே பேசித் தீர்க்க வேண்டிய பிரச்சினை என்றும், இந்த விவகாரத்தில் நீதிமன்றம் நேரடியாக தலையிட முடியாது என்றும் நீதிபதிகள் கருத்து தெரிவித்தனர்.

மேலும், தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல், கைது பற்றி பேச்சு மூலம் சுமுக தீர்வு காண வேண்டும் என்று கூறி இந்த வழக்கை நீதிபதிகள் முடித்து வைத்தனர்.

## அமைதியான கூட்டம் நடத்தும் உரிமை; உறுதி செய்ய வேண்டும் இலங்கை

### பிரான்ஸ், ஜேர்மன், சுவிஸ் கோரிக்கை

அமைதியான முறையில் கூட்டங்களை நடாத்துவதற்கான உரிமையை இலங்கை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என பிரான்ஸ், ஜேர்மனி, சுவிட்சர்லாந்து மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகள் கூட்டாக இணைந்து இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில காணாமற்போனவர்களின் குடும்ப உறுப்பினர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் கூட்டமொன்றுக்கு குண்டர் கூட்டமொன்று இடையூறு ஏற்படுத்தியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. அமைதியான முறையில் ஒன்று கூடுதல் மற்றும் சுதந்திரமாக கருத்துக்களை வெளியிடுதல் ஆகிய உரிமைகளை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என குறித்த தூதரகங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

## மூன்று அரச நிறுவனங்கள் தொடர்ந்தும் நட்டத்தில்

(கொழும்பு)

மூன்று அரச நிறுவனங்கள் தொடர்ந்தும் நட்டத்தில் இயங்குவதாக கோப் (COPE) எனப்படும் பொது முயற்சியாண்மைக்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டிற்கான கோப் குழுவின் இடைக்கால அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெட்ரோலியக் கூட்டுத்தாபனம், மிஹின் லங்கா நிறுவனம் மற்றும் கடற்றொழில் கூட்டுத்தாபனம் ஆகியன நட்டத்தில் இயங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பு வந்தார் டெஸ்மண்ட் டி சில்வா

காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட, மூன்று பேர் கொண்ட சர்வதேச நிபுணர் குழுவின் தலைவரான சேர் டெஸ்மண்ட் டி சில்வா இலங்கை வந்தடைந்தார்.

இவ்வாறு வருகை தந்த அவர், இந்தக் குழுவின் ஏனைய இரண்டு உறுப்பினர்களின் வருகைக்காக காத்திருப்பதாகவும், தெரிவிக்கப்படுகிறது.

hp நளினின் hp Authorized Dealer
* Condition Apply
புதிய வரவு
முந்துங்கள் ! கையிருப்பு உள்ளவரை மட்டுமே !
41,500/= இற்கு
எல்லோருக்கும் மடிக் கணனி
hp இன் புதிய தலைமுறை மடிக் கணனி
HP 14 Notebook PC
Dual Core/500GB/2GB/14"/DVD RW/ BT/WIFI/CAM/CARD READER
Lap - 1 year parts Warranty, 2 years service free
T.P.: 021 222 1121, 021 224 2222, 0777 66 7975
No. 195/4, Parameswara Junction, Palaly Road, Jaffna.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஆகஸ்ட் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.